சுந்தர வாசகம்

458

இரண்டாம் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUN 1949
MADRAS

TB
031,6 N49
39784

...கா பிரதர்ஸ்
...ப்பூர், சென்னை.

சுந்தர வாசகம்

இரண்டாம் புத்தகம்

(இரண்டாம் பாரத்திற்கு)

வித்வான். R. சார்ங்கபாணி, B. O. L.,
தமிழ் விரிவுரையாளர், லயோலாக் கல்லூரி,
சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUN 1949
MADRAS

அம்பிகா பிரதர்ஸ்
மயிலாப்பூர் :: சென்னை-4

பதிவு செய்தது] 1949 [விலை அணா 12

முதற் பதிப்பு—மே, 1949.

139784

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

முன்னுரை

சென்னையரசியலார் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாடப்பட்டியை ஒட்டி, சுந்தர வாசகம் என்னும் இப் புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. இப் புத்தகத்தின் உரைநடைப்பகுதியில் கற்பனைக்கதை, விஞ்ஞானம், கைத்தொழில், புலவர், புதுநாடுகண்ட வீரர், பெரும்புகழ்படைத்த பெரியோர் முதலியோரின் வாழ்க்கைவரலாறு, நம் நாட்டில் நிகழ்ந்த சிறந்த சரித்திரநிகழ்ச்சி, சிற்பம், நாடகம் முதலிய பொருள்பற்றிய பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. அப் பகுதியில் பாதி இலக்கியத்தொடர்புடையன. பாடத்திற் கேற்ற பல அழகிய படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. செய்யுட்பகுதியில் வரலாறு, கதை, கடவுள் வாழ்த்து, இயற்கை வருணனை, நீதி, மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்னும் பொருள்பற்றிய பாட்டுக்களும், தனிப்பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன; மாணுக்கரின் நன்மையைக் கருதி அவர்கள் கற்கவேண்டிய **60** குறட்பாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அருஞ்சொற் பொருளும் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன. இப் புத்தகத்தின் இறுதியில் பாட்டுக்களுக்கு விரிவான குறிப்புரை வரையப்பட்டுள்ளது.

இப் புத்தகங்களை எழுதுதற்கு உதவிபுரிந்த பெரியோருக்கும், இவற்றை வெளியிட்டுள்ள திருமயிலை அம்பிகா பிரதர்ஸின் உரிமையாளர் திரு. S. சுந்தரேசன் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

கலாசாலைத் தலைமையாசிரியர்களும் தமிழாசிரியர்களும் இப் புத்தகங்களை ஆதரித்து அடியேனைத் தமிழ்ப்பணியில் ஊக்குமாறு வேண்டுகின்றேன்.

ஆக்கியோன்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 JUN 1949
MADRAS

உள்ளுறை

உரைநடை

எண்		பக்கம்
1.	தலைவர் ஜவாஹர்	1
2.	சலவைக்கல் மாளிகை	8
3.	சுப்பிரமணிய பாரதியார்	14
4.	கல்விச் செல்வம்	20
5.	பட்டியின் நுண்ணறிவு	25
6.	கிராமக் கூட்டுறவுச் சங்கம்	31
7.	போரை வெறுத்த புரவலன்	37
8.	உயிர்களின் தற்காப்பு	42
9.	காந்தருவதத்தை	49
10.	நூல் நூற்றலும் ஆடை நெய்தலும்	55
11.	விகடகவி தெனாலிராமன்	62
12.	வடமலையப்பப் பிள்ளையன்	67
13.	காசா பெரிது ?	71
14.	மார்க்கோ போலோ	78
15.	பகைவர்க்கும் பரிந்திரங்கும் பரமன்	85
16.	வணிகன் வழக்கு	91
17.	அடியவர்க்கு எளியவன்	98

செய்யுள்

எண்		பக்கம்
I. கடவுள் வாழ்த்து	...	104
II. நீதிப் பகுதி		
(i) நன்னெறி	...	105
(ii) திரிகடுகம்	...	106
(iii) நான்மணிக்கடிகை	...	107
(iv) ஆசாரக் கோவை	...	108
(v) திருக்குறள்	...	110
III. வரலாற்றுப் பகுதி		
தென் ஆப்பிரிக்காவில் காந்தி	...	114
IV. கதைப்பகுதி		
(i) பஞ்சதந்திரம்—முயல் யானையை வென்ற கதை	...	116
(ii) நாயின் நல்லியல்பு	...	120
V. இயற்கை வருணனை		
(i) கடல்	...	123
(ii) காடு	...	124
VI. பல்சுவைப் பகுதி		
(i) தனிப்பாடல்	...	125
(ii) பாரதியார் பாடல்	...	126
(iii) பிரபந்தம்	...	127
(iv) அம்மானை	...	127
(v) குறவர் செயல்கள்	...	128



சுந்தர வாசகம்

இரண்டாம் புத்தகம்

1. தலைவர் ஜவாஹர்

பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு 1889-ஆம் ஆண்டு நவம்பர் பதினாலாந்தேதி அலாஹாபாத்தில் பண்டித மோதிலாலுக்குச் சொரூபராணியிடம் செல்வப்புதல்வராய்த் தோன்றினர். மோதிலால் அந்நகர நீதிமன்றத்தில் ஒப்பற்ற வழக்கறிஞராய் விளங்கினர். இளமையிலேயே அவருக்கு வெற்றியும் புகழும் செல்வமும் பெருகின. அதனால் அவர் ஓர் அரசர்போல் வாழ்ந்துவந்தார். செல்வக்குடியில் பிறந்து, தந்தத்தொட்டிலில் தவழ்ந்து, தங்கக்கிண்ணத்தில் பாற்சோறுண்ட ஜவாஹர் இளவரசரைப்போல் வளர்ந்துவந்தார். அவரை வளர்க்க வெள்ளைக்காரத் தாதிகள் அமர்த்தப்பட்டனர்.

ஜவாஹர் தம் ஏழாம் வயதிலேயே குதிரைமீதேறிச் சவாரிசெய்தார். பத்தாம் வயதில் மோதிலால் 'ஆனந்த பவனம்' என்னும் அழகிய மாளிகை ஒன்றை அமைத்து, அதனருகில் நீந்தி விளையாடச் சிறுகுளம் ஒன்றையும் தோண்டினர். ஜவாஹர் அச்சிறுவயசிலேயே அச்சமின்றி அதில் நீந்தி விளையாடுவதைக் கண்டு அனைவரும் வியப்பர். அவருக்குப் பதினொன்றாம் வயதில்

'பர்டினண்டு டி புரூக்ஸ்' என்னும் ஐரோப்பியர் ஆசிரியராய் நியமிக்கப்பட்டார். அவர் மூன்று ஆண்டுகளில் கிதையையும் மிகச்சிறந்த ஆங்கில இலக்கியங்களையும் பயிலும் ஆர்வத்தை வளர்த்தார்; விஞ்ஞானவுண்மைகளையும் கற்பித்தார். அம் மாளிகையிலேயே விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம் (Laboratory) அமைக்கப்பட்டதனுல், அதில் ஜவாஹர் பௌதிக ரசாயனத்தொடர்புள்ள சோதனைகளைச் செய்துகொண்டு நெடுநேரம் கழிப்பார்.

1902-இல் நிகழ்ந்த ரஷிய-ஜப்பானியப் போரில் மிகச்சிறிய ஜப்பான்தேசம் பெரிய ரஷியநாட்டை வெல்வதை அறிந்து ஜவாஹர் வியப்புற்ருர். அக்காலத்தில் ஆசியாமுழுதும் சுதந்திரம் அடையவேண்டும் என்னும் எண்ணம் அவர்மனத்தில் பிறந்தது. "கையில் வாளேந்தி வீரச்செயல் பல புரிந்து, தாய்நாட்டின் விடுதலைக்கு உயிரையும் உதவுவேன்" என்று அவர் எண்ணிக்கொண்டேயிருப்பார்.

பதினைந்தாம் வயதில் மோதிலால் ஜவாஹரை லண்டனிலுள்ள 'ஹாரோ' கலாசாலையில் சேர்த்தார். அங்கு மற்றையோரைவிட உலகியலறிவு நிரம்பப் பெற்றவர் ஜவாஹரே என்பதை அறிந்த ஆசிரியர்கள் அவரைப் பாராட்டினர். "தந்தாய், ஆங்கிலச் சிறுவர் எவ்வளவு அறிவிலிகளா யிருக்கின்றனர்! எப்பொழுதும் விளையாட்டுக்களைப்பற்றியே பேசுகின்றனர்!" என்று இளைஞர் தம் தந்தைக்குக் கடிதம் எழுதியிருக்கிருர். அங்கு அவரோடு படித்தவர்கள் அரசகுமாரர்களும் பிரபுக்களின் மைந்தர்களுமே. அக் கலாசாலையில் ஜவாஹருக்குக் கிடைத்த பரிசுப்புத்தகங்களுள் இத்தாலிய தேசாபிமானி கரிபால்டியின் சரித்திரம் ஒன்று. அவ் வீரன் செய்த அருஞ்செயல்களைப் படித்து, "அவரைப்

போலவே நாமும் நம் நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டும்'' என்று அவர் எண்ணினார்.

ஜவாஹர் 1907-இல் 'கேம்பிரிட்ஜ்' பல்கலைக்கழகத்தைச் சார்ந்த 'டிரினிடி' கல்லூரியில் சேர்ந்தார்; ரஸாயனம், தாவரம், பூமிநூல் இவற்றைத் தம் பாடங்களாக எடுத்துக்கொண்டார்; இலக்கியம், சரித்திரம், அரசியல், பொருளாதாரம் இவற்றைப்பற்றிய பல நூல்களைப் படித்தும், அறிஞர் பேசும் பேச்சுக்களைக் கேட்டும் தம் அறிவை வளர்த்துக்கொண்டார். ஆயினும், 'மஜ்லிஸ்' என்னும் இந்திய மாணக்கர்-சங்கத்தில் மூன்று வருஷகாலத்திற்குள் ஒருமுறைகூட அவர் பேசியதில்லை! அதற்காக அபராதப்பணமும் செலுத்தியிருக்கின்றார்!

ஜவாஹர் இருபதாம்வயதில் 'கேம்பிரிட்ஜ்' படிப்பை முடித்து, 'பாரிஸ்டர்' படிப்பைத் தொடங்கினார்; 1912-இல் 'பாரிஸ்டர்' பட்டம்பெற்றுத் தாய்-நாட்டிற்குத் திரும்பினார்; அலாஹாபாத் நீதிமன்றத்தில் தந்தையுடன் தாமும் வக்கீல்தொழில் புரிந்துவந்தார். அவ்வாண்டின் முடிவில் நடந்த காங்கிரஸ் மகாசபைக்கு முதன்முதல் பிரதிநிதியாய் ஜவாஹர் சென்றார்.

1916-இல் லக்ஷ்மணபுரியில் நிகழ்ந்த காங்கிரஸில் ஜவாஹர் மகாத்மா காந்தியை முதன்முதல் சந்தித்தார்; அன்றுமுதல் இன்றுவரை அவர் சென்ற அடிச்சுவட்டி-லேயே சிறிதும் மாறாமலும் மறுக்காமலும் செல்பவரானார். அவ்வாண்டில், அறிவும் அழகும் மிக்க கமலா என்னுஞ் செல்வியை ஜவாஹருக்கு மணம்புரிவித்தனர். திருமணம் டில்லியில் நிகழ்ந்தது. அரசர்களும் கவர்னர்-களும் பிரபுக்களும் நூற்றுக்கணக்காக வந்து மண-மக்களை வாழ்த்தினர். 1917-ல் கமலா நேரு இந்திரா-வைப் பயந்தார்.

மணத்திற்குப்பின் ஒருகால் ஜவாஹர் காஷ்மீரத்திற்குச் சென்று, அங்கிருந்த மலைமீதேறி அமரநாத் குகையை அடைய எண்ணினர். அங்கு ஓரிடத்தில் இறங்கும்பொழுது மலைவெடிப்பு ஒன்றைப் பனிக்கட்டி மூடியிருப்பதை அறியாமல் காலை வைக்க, அவ் வெடிப்பில் விழாமல் அவரைக் காத்தது அவர் இடையில் கட்டியிருந்த கயிறு. அவர் அந்தரத்தில் தொங்கிச் சிறிது நேரம் ஊசலாடி ஒரு பக்கத்துப் பாறையை எட்டிப் பிடித்துக்கொண்டார்.

1919-இல் காந்தி வகுத்த ஒத்துழையாமைத் திட்டத்தை ஜவாஹர் வரவேற்றார். முதலில் அதனை விரும்பாத அவர் தந்தையார் பின்னர் மகன் சென்றவழியே சென்று, இலட்சக்கணக்காகப் பொருளை ஈட்டிவந்த வக்கில்தொழிலையும் துறந்து, அரசவாழ்க்கையை நீத்து, எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். 1920-21-ல் ஜவாஹர் பல கிராமங்களில் சுற்றி, ஏழைக்குடியானவர்களின் குறைகளை யெல்லாம் அறிந்தார். 1921-இல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்தபோது அவரை வரவேற்கலாகாது என்று கூட்டத்தில் பேசியதனால், தந்தையும் மகனும் முதன்முதல் கைதுசெய்யப்பட்டு ஆறுமாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். அப்பொழுது மோதிலால், "என் ஒரே மகனோடு சிறைக்குச் செல்கின்றேன். இதனால் என் தாய்நாட்டுக்குத்தொண்டு செய்யும் பெரும்பேறு பெற்றேன்" என்று உவந்து கூறினர். அதுமுதல் 1945வரை ஜவாஹர் **ஒன்பது முறை சிறைக்குச் சென்று** வருந்தியிருக்கின்றார்.

1923 - இல் ஜவாஹர் நாபா சம்ஸ்தானத்தில் நடந்த சட்டமறுப்பு இயக்கத்தைக் காணச் சென்றபோது, போலீஸார், அவர்கையில் விலங்கை மாட்டி வீதிவழியே இழுத்துச் சென்று, அசுத்தமான ஒரு சிறைக்குள்

அடைத்தனர். இரவில் அவருக்கு அங்கு உறங்க முடியவில்லை. மேலெல்லாம் எலிகள் குதித்தோடின. பின்னர் விசாரணையில் அவருக்கு இரண்டுவருடக் காவல்தண்டனை விதிக்கப்பட்டது.

1926 - இல் கமலாவின் சிகிச்சைக்காக ஜவாஹர் ஐரோப்பாவிலுள்ள ஜினீவாவுக்குச் சென்றார்; 1927-இல் ஜவாஹர் இந்தியாவுக்குத் திரும்பினர். அடுத்த ஆண்டில், “சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வரின், அதனோடு ஒத்துழைக்கக்கூடாது” என்று காங்கிரஸ் தீர்மானித்தது. அதன்பயனாய் ஒத்துழையாமைக் கூட்டங்கள் நாட்டில் எங்கும் கூட்டப்பட்டன.

ஜவாஹர் லக்ஷ்மணபுரியில் ஓர் ஊர்வலத்திற்குத் தலைமை வகித்து நடத்தியபொழுது, குதிரைவீரன் ஒருவன் ஜவாஹரின் முதுகில் இரண்டுமுறை அடித்தான். மறுநாளும் ஊர்வலம் நடந்தது. அன்றும் அவர்மேல் பல அடிகள் விழுந்தன. அவர் நின்றவிடத்தை விட்டு அணுவளவும் அகலவில்லை. அவருடைய அன்பர்கள் அவரைப்பிடித்துத் தூக்கிக்கொண்டு சென்றனர். அந்தோ! இளவரசனைப்போல் செல்வச்சிறப்போடு வாழவேண்டிய ஜவாஹர் அடிபட்டது எதற்கு? நம் நாட்டின் அடிமைத்தளையை அறுப்பதற்கன்றோ?

1928 - இல் தந்தை காங்கிரஸ் தலைவரானார். அடுத்த ஆண்டில் மைந்தர் தலைவரானார். அன்று தந்தை அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

1930 - இல் மோதிலால் தம் மாளிகையின் பெயரை ‘சுயராஜ்ய பவனம்’ என்று மாற்றி, காங்கிரஸுக்கு அளித்தார். பின்னர் உப்புச்சத்தியாக்கிரஹம் தொடங்கியபோது, தலைவர் அனைவரும் சிறைப்பட்டனர். கமலாவும் கைதியானார்; “நான் என் தலைவருடைய

அடிபற்றிச் செல்கின்றேன் ; இதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். நாட்டுமக்கள் சுதந்திரக்கொடியைத் தாழாது பறக்கவிடுவர் என்று நம்புகின்றேன்'' என்று அவர் கூறினர். 1931 பிப்ரவரியில், கோயால் வருந்திய மோதிலால் மறைந்தார். அதனுல் நாடு முழுதும் வருந்திற்று.

1932 - இல் ஒரு கூட்டத்தில் தலைமை வகித்த சொரூபராணியைப் போலீஸார் அடித்தனர். அப்பொழுது நெஹ்ரு சிறையில் இருந்தார். “அலாஹாபாத்தில் ஓர் ஊர்வலத்தின் முன்னணியில் நாற்காலியில் அமர்ந்திருந்த என் தாயாரைப் போலீஸார் கீழே தள்ளிப் பிரம்பால் தலையில் அடித்தனர். மண்டை உடைந்து இரத்தம் பெருக, அவர் நடுச்சாலையில் விழுந்துகிடந்தார் என்ற செய்தி என்னைப் பதறச் செய்தது. நான் அங்கே அச்சமயம் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேனே!'' என்று நெஹ்ரு எழுதியிருக்கிறார். 1933-இல் பீஹாரில் பூகம்பம் ஏற்பட்டது. நம் ஜவாஹர் பத்து நாள் அங்குச் சுற்றுப்பிரயாணம் செய்து வேலையாட்களோடு வேலையாளாய் மண்வெட்டியும் கூடையும் எடுத்துச் சென்று தொண்டாற்றினர்.

1935 - இல் ஜவாஹர் கமலாவைச் சிகிச்சைக்காக ஐரோப்பாவுக்கு அனுப்பினர். ஆயின், 1936 பிப்ரவரியில் உடல் நலமுறுமல் கமலா மறைந்தார். அதைக்குறித்து இந்தியா முழுதும் இரங்கிற்று. ஜவாஹர் ஆருயிர்க் காதலி மறைந்ததையும் மனத்தில் கொள்ளாமல், அந்த ஆண்டு காங்கிரஸ் தலைமையை ஏற்றுப் பணியாற்றினர். என்னே, அவர் உள்ளம்! ஜவாஹரையன்றி வேறு யாரும் நான்கு முறை காங்கிரஸ் தலைமையைத் தாங்கியதில்லை. இது அவருக்கு ஒரு தனிச் சிறப்பாகும்.

1939 செப்டெம்பரில் இரண்டாவது உலகப்பெரும்-போர் தொடங்கிற்று. அப்பொழுது இந்தியத்தலைவர் அனைவரும் காவலில் வைக்கப்பட்டனர். 1945 - இல் போர் முடிய, இரண்டாண்டிற்குப்பின் இந்திய நாடு சுதந்திரம் பெற்றது. இன்று இந்தியநாட்டின் முடி-சூடா மன்னராய் விளங்குபவர் தலைவர் ஜவாஹர். தந்தை, தாய், மனைவி, மகள், சகோதரிகள், அவர்கள்-கணவன்மார் அனைவரும் அடங்கிய ஒரு குடும்பம் முழு-தும் தன்னலம் கருதாது நாட்டுக்குத் தொண்டுசெய்து சிறைப்பட்டது ஜவாஹர்குடும்பமே! சிறந்த அரசியல்-ஞானியும், புலவரும், நூலாசிரியரும், ஒப்புயர்வற்ற தேசபக்தரும், மாசற்ற ஒழுக்கத்தவரும், வீரருள் வீரருமாய் விளங்கும் ஜவாஹரைப் போன்றவர் உல-கத்தில் மிகச் சிலரே. நம் நாடு செய்த தவப்பயனால் அவரைத் தலைவராக அடைந்துள்ளோம். நாம் அனை-வரும் அவர் கூறும் அறிவுரைவழி நின்று, நாட்டுத் தொண்டு புரிந்து, ஒற்றுமையோடு வாழ்ந்து உலகத்தில் உயர்வுறுவோமாக.

அருஞ்சொற்பொருள்

நீதிமன்றம் - நியாயசபை.
வழக்கறிஞர் - வக்கீல்.
பௌதிகம் - மண், நீர் முதலிய ஐந்து பூத சம்பந்தமான கலை. (Physics)
ரஸாயனம் - தாதுப்பொருள்-களின் குணச்சிறப்புக்களை உணர்த்துங் கலை. (Chemistry)
பல்கலைக்கழகம் - சர்வகலாசாலை.
அந்தரம் - ஆகாசத்தில்.
ஊசல் - ஊஞ்சல்.
பவனம் - மாளிகை.
முடி - கிரீடம்.
மாசு - குற்றம்.

பயிற்சி

1. ஜவாஹர்லாலின் கல்லூரிப்படிப்பைப்பற்றி எழுதுக.
2. அவர் அஞ்சாமனம் படைத்தவர் என்பதை எவ்வாறு அறிகின்றோம்?

3. நம் நாட்டின் விடுதலைக்காக நெஹ்ரு பட்ட கஷ்டங்களைக் கூறுக.

4. தலைவராயிருப்பதற்கு உரிய எவ்வெச்சிறப்புக்களை அவர் பெற்றிருக்கின்றார்?

5. வாக்கியத்தில் அமைத்து எழுதுக: வெற்றி, வியப்பு, சோதனை, அறிவிலி, பொருளாதாரம், உவகை.

---

2. சலவைக்கல் மாளிகை

பாரதநாட்டின் சிற்பக்கலைக்குச் சிகரமாக விளங்குவது **தாஜ்மஹால்**. உலகத்தில் ஒப்புயர்வற்று விளங்கும் அதிசயப்பொருள்கள் ஏழனுள், தாஜ்மஹாலும் ஒன்று என்று கருதப்படுகின்றது. அது வட-இந்தியாவில் ஆக்ரா நகரத்தில் யமுனையாற்றின் தென்-கரையில் அமைந்துளது; மொகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஜஹான் தன் பட்டமகிஷியாகிய மும்தாஜ் மஹாலின் நினைவுக்குறியாகக் கட்டியது.

மும்தாஜ் 1594-இல் ஆக்ராவில் உயர்வுற்ற முகம்மதியக்குடி ஒன்றில் தோன்றினாள். அவளுடைய பிள்ளைப்பெயர் **அர்ஜுமந்த பானு** என்பது. அவள் (ஜிஹாங்கிர் சக்கிரவர்த்தியின் பட்டமகிஷியாகிய) நூர் ஜஹானின் சகோதரன்மகள். அவள்பெற்றோர் உயர்-குடிக்கேற்ற கலைகளனைத்தையும் அவளுக்குக் கற்பித்தனர். மும்தாஜ் நாளும் பிறைமதிபோல வளர்ந்து, மிக்க கவினும் ஒழுக்கமும் வாய்க்கப்பெற்று, மங்கைப்-பருவத்தை அடைந்தாள்.

ஆக்ரா நகரில் ஆண்டுதோறும் வருடப்பிறப்பு-விழா கொண்டாடப்படும். 1607-ஆம் ஆண்டில் அவ்வாறு கொண்டாடப்பட்ட விழாவின் ஒன்பதாம்நாள் அரண்மனையைச் சார்ந்த பூஞ்சோலைகளில் பல படமாடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் உயர்-



குடிப்பெண்கள் விளையாட்டுக்காகக் கடைகள்வைத்துப் பொருளை விற்பர். வாங்குவோர் அம் மங்கையர் கூறும் விலையைக் கொடுத்து வாங்கவேண்டும். குறைத்துக் கேட்போர் அவமானத்திற்கு ஆளாவர். பதினான்கு வயதுள்ள **பானு**வின் கடையில் கண்ணாடித்துண்டுகளும் வைரம்போல் விற்பனையாயின. பொழுது போயிற்று. கடையை அடைக்கும் நேரத்தில் இளைஞன் ஒருவன் பானுவை அணுகி, அவ்விடத்தில் விலையாகாத பொருள் ஏதேனும் உளதோ என்று வினவினான். தன்னை வினவியவன் இளவரசன் **குராம்** என அறிந்த பானு வைரத்தின் வடிவிலிருந்த கற்கண்டு ஒன்றை எடுத்துக் காட்டி, அது மிக **இனிய வைரம்** என்றும், அதன் விலை இலட்சம் ரூபாய் என்றும் கூறினாள். உண்மையை உணர்ந்த குராம் அவளுடைய சாதுரியமான பேச்சில் ஈடுபட்டு, ஒன்றும் உரைக்காது, அவள் கேட்ட தொகையைக் கொடுத்து, அதனைப் பெற்றுக்கொண்டான்.

1612-இல் அவ்விருவருக்கும் மணம் நடந்தேறியது. அன்று ஜிஹாங்கீர் தன் மருமகளின் பெயரை மாற்றி, **மும்தாஜ் மஹால்** என்னும் பட்டப்பெயரை அவளுக்கு அளித்தான். மும்தாஜ் மஹால் என்பதற்கு 'அரண்மனையின் மகுடம்' என்பது பொருள். ஷா ஜஹான் மும்தாஜை மணப்பதற்கு முன்னும்பின்னும் மகளிர் பலரை மணந்தானாயினும், மற்றையோரினும் மும்தாஜையே அதிகமாய் நேசித்தான்.

ஷா ஜஹான் அரசுகட்டில் ஏறியபின்னர் அரசியல்அலுவல்களை அரசியோடு ஆராய்வான். அவள் எடுத்துக்கூறுங் கருத்துக்கள் அமைச்சர்முதலியோர் கூறியவற்றினும் சிறந்து விளங்கும். அவள் தன் கணவன் தலைநகரத்தில் தங்கியிருப்பினும், அன்றி வேற்று-

நாட்டுக்குச் செல்லினும், போர்க்களத்துக்குப் போயினும், அரைக்கணமும் அவனை விட்டுப் பிரியாது, நிழல்போலத் தொடர்ந்து செல்வாள். மும்தாஜ் தன் தலைவனுக்குக் கற்பிற் சிறந்த காதலியா யிருந்ததனோடு, அறிவுமிக்க அமைச்சாயும், ஆருயிர்த் தோழியாயும், அடக்கத்தோடு தொண்டு செய்யும் பணியாளாயும் இருந்து அவனது உள்ளத்தைக் கவர்ந்தாள்.

மும்தாஜ் மஹால் செல்வக்குடியில் பிறந்து அரசனுக்கு வாழ்க்கைப்பட்டாளாயினும், அவளிடத்துச் செருக்கு என்பது சிறிதும் தோன்றவில்லை; அடக்கமும், பொறுமையும், ஒழுக்கமும் குடிகொண்டிருந்தன. அவள் தன்னை நாடி வருவோர்க்குத் தன்னாலான உதவியைச் செய்யத் தவறாள். எளியோரைக் கண்டால், அவள்உள்ளம் தீயிற்பட்ட மெழுகென உருகும். மும்தாஜ் நாட்டுக்குடிகளின் குறைகளைத் தவிர்த்து, நல்லறம் பல புரிவாள்; மரண தண்டனை அடைந்தவர்க்கும் விடுதலை அளிக்குமாறு மன்னவனை வேண்டுவாள். அரசியின் அருமைபெருமைகளைப் புகழாத குடிகளே இலர்.

இணைபிரியாக் காதலர் இருவரும் பதினெட்டு ஆண்டுகள் இனிது வாழ்ந்துவந்தனர். மும்தாஜ் எட்டு ஆணும், ஆறு பெண்ணுமாகப் பதினான்கு மக்களைப் பெற்றாள்.

1630-இல் ஷா ஜஹான் கான்-ஜஹான் லோடியைப் பர்ஹன்பூரில் எதிர்த்துப் பொருதபோது, தன் அரசியோடு அவ் வூருக்குச் சென்றான். அரசி அப்பொழுது பூரண கருப்பவதியா யிருந்தாள். அவட்குக் கருவுயிர்க்குங் காலம் கிட்டிற்று. தான் பிழைப்பது அரிது என்பதை அறிந்த அரசி, தன் காதலனை அருகில் வரவழைத்து, "ஆருயிர்த் தலைவ, நான் இனி உயிர்வாழேன். தாங்கள் என் மரணத்தை எண்ணி வீணே

துக்கத்தில் மூழ்கலாகாது. என் மக்களையும் பெற்றோரையும் கைவிடாமல் காத்தருளல் வேண்டும்'' என்று வேண்டினள். அவளுயிர் உடலைவிட்டுப் பிரிந்தது. அரசர்க்கரசன் அரற்றினன்; ஆற்றெணுத் துயர்க்கடலில் மூழ்கினன். நாடுமுழுதும் துயரத்தில் ஆழ்ந்தது.

அரசியின் உடல், அவ் ஊருக்கு அண்மையில் தப்தி என்னும் நதத்திற்கு அருகில் இருந்த ஸைபாது என்னுந் தோட்டத்தில் அடக்கஞ்செய்யப்பட்டது. மும்தாஜ் தன் தலைவனிடம் அவ் வரங்களை வேண்டாதிருப்பின், மன்னவன் முடிதுறந்து துறவியாய்த் தன் காலத்தைக் கழித்திருப்பான். 1631-இல், மும்தாஜின் உடலடங்கிய பெட்டகத்தை அரசன் ஆக்ராவுக்குக் கொணர்ந்து, யமுனைநதிக்கரையில் அடக்கஞ்செய்வித்தான்.

ஆருயிர்க்காதலியின் அழகுக்கும் அறிவிற்கும் அருங்குணத்திற்கும் ஏற்ற மாளிகையொன்றை அவ்விடத்தில் அமைக்கவேண்டும் என்னும் அவா அரசன்மனத்தில் எழுந்தது. 'இஸ்தாத் இஸா' என்னுஞ் சிற்பியின் உதவியால் அம் மாளிகை எழுப்பப்பட்டது. பிற நாடுகளிலிருந்து சிற்பிகளும், ஓவியக்காரரும் வந்தனர். பற்பல இடங்களிலிருந்து நவரத்தினங்களும் வந்து குவியலாயின. இருபதினாயிரம் மக்களின் பெருமுயற்சியால், பதினேழாண்டில், நான்குகோடிரூபாய்ச் செலவில் உருவத்தில் சிறந்த கோரியொன்று நிறுவப்பட்டது.

இம் மாளிகை கட்டப்பட்ட காலத்தில், கூலிக்கு வேலைசெய்த கூட்டத்தைத் தவிர, அரசியின் உறவினர்களும், அவளால் உதவியைப் பெற்றவர்களும், அவள்பால் அன்பும் மதிப்பும் கொண்ட குடிகள் பலரும் கைம்மாறு கருதாமல் தங்களால் ஆன தொண்டுகளைச் செய்தனர். இவையே அவளுடைய புகழுக்குத் தக்க

சான்று. அக் கோரி அரசன் கட்டியது என்று கூறு-வதினும், அந் நாட்டுமக்கள் அனைவரும் கட்டி-வைத்தது என்பதே பொருந்தும்.

தாஜ்மஹாலின் தலைவாயிலையும் வெளிமுற்றத்தை-யும் கடந்து கல்பதித்த தளத்தின் வழியாக நடந்து சென்று, பின்னும் பலவாயில்களையும் கடந்து செல்லின், 1860 அடி நீளமும், 1000 அடி அகலமும் உள்ள உள்-முற்றத்தை அடையலாம். அதன் நடுவில் காணப்படும் நீர்த்தொட்டிகள் சலவைக்கற்களால் ஆனவை. அவற்-றின் இருபக்கங்களிலும் உள்ள சலவைக்கற்கள் பதித்த நடைபாதைகளின் இருமருங்கிலும் வரிசையாக 'சைப்ரஸ்' மரங்கள் வளர்ந்திருக்கின்றன. அப் பாதை-வழியாகப் போய், பல படிக்கட்டுக்களின் வழியாக ஏறிச் சென்றால், தாஜ்மஹால் அமைந்துள்ள மேடையை அடையலாம்.

அம் மேடையின் தளம் கறுப்பும் வெண்மையுமான சலவைக்கற்களாலானது; பலவிதப் பூவேலைகளை உடையது. அம் மேடையைச் சூழ இரண்டடி உயரத்தில் கைபிடிசுவர்கள் உள. நான்கு மூலை-களிலும், வட்டவடிவத்தில் கட்டியெழுப்பியுள்ள நான்கு கோபுரங்கள் மும்மூன்று மாடங்களோடு விளங்கு-கின்றன. மேடையின் நடுவில் 186 அடிச் சதுரமான கல்லறை மாளிகை அமைந்துளது. அம் மாளிகை-யைச் சூழ மாடிகளும், அவற்றின் நடுவில் அரைப்-பந்து வடிவமான நடுவிமானமும் அமைந்துள்ளன. மாளிகையின் நடுக்கூடம் 60 அடி குறுக்களவுடைய எண்கோண வடிவமான ஓர் அறையாகும். அதைச் சுற்றி எட்டு அறைகள் உள்ளன. அவற்றில் முல்லாக்கள் வாழ்ந்து வேளை தவறாமல் 'குர்ஆன்' ஓதிவந்தனர். அம் மாளிகையின் பல பகுதிகளும் சலவைக்கற்களாலும்

பூவேலைகளாலும் நவமணிகளாலும் விளங்கி, காண்போர்மனத்தைக் கவரும். முழுமதிநாளன்று ஒளிரும் அதன் ஒளியும் கவினும் எடுத்துக்கூறுந் தரத்தனவல்ல.

ஷா ஜஹான் தன் இறுதிக்காலத்தில் தன் மகன் ஔரங்கசீப்பால் சிறைப்படுத்தப்பட்டு அரண்மனை ஒன்றில் இருந்தபொழுது, அவன் அதன் மேல்நிலையில் அமர்ந்து தான் நிறுவிய காதற்கோயிலைக் கண்டு, சிறையிலிருப்பதையும் மறந்து மகிழ்வானாம். அவன் இறந்தபின்னர், அவனுடலும் அக் கல்லறையிலேயே காதலிக்கு அருகில் அடக்கஞ்செய்யப்பட்டது.

கொற்றவன்ஒருவன் தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட கற்புடையில்லாளிடத்துக் கொண்ட காதலை வெளிப்படுத்தக் கட்டிய ஞாபகச்சின்னமே தாஜ்மஹால். இன்று அது காண்போர் அனைவருடைய உள்ளத்தையும் கொள்ளைகொண்டு, தனிச்சிறப்புடன் இலங்குகின்றது.

அருஞ்சொற்பொருள்

ஞாபகச்சின்னம் - நினைவின் அடையாளம்.
கவின் - அழகு.
படமாடம் - துணிவீடு, கூடாரம்.
அரசுகட்டில் - சிம்மாஸனம்.
கணம் - க்ஷணம்; சிறிதுநேரம்.
கருஉயிர்க்கும் - பிள்ளைபெறும்.
பெட்டகம் - பெட்டி.
ஓவியம் - சித்திரம்.
கைம்மாறு - பிரதியுபகாரம்.
சான்று - சாட்சி.
மாடம், மேல்நிலை- மாடி.
முல்லா - முகம்மதியர் குரு.
நவமணி - ஒன்பதுவகை இரத்தினம்.

பயிற்சி

1. ஷா ஜஹானும் பானுவும் முதன்முதல் ஒருவரையொருவர் கண்ட வரலாற்றைக் கூறுக.
2. மும்தாஜின் உயர்குணங்களை உரைக்க.
3. மும்தாஜ் இறுதியில் கணவனை வேண்டியது யாது?
4. எவை அரசியின் புகழுக்குச் சான்றுகளாகும்?
5. தாஜ்மஹாலின் அமைப்பை எழுதுக.
6. எதிர்ச்சொல் கூறுக: உயர்வு, குறை, எளியோர், அண்மை, துக்கம், புகழ், மதிப்பு.

3. சுப்பிரமணிய பாரதியார்

'பாட்டுக்கொரு புலவன்' என்று தம் காலத்துப் புலவராலும் புகழப்பெற்றவர் சுப்பிரமணிய பாரதியார். பாரதியார் பாண்டிய நாட்டில் உள்ள எட்டையபுரத்தில் புலவர்களுள் ஒருவரா யிருந்த சிவலப்பேரி சின்னசாமி ஐயருக்கும் லக்ஷ்மியம்மாளுக்கும், 1882-ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தில், புத்திரராய்த் தோன்றினர். அவருக்கு ஐந்தாம் ஆண்டு முடிவதற்குமுன்னரே, அவர்தாயார் உலகவாழ்க்கையை நீத்தார். அதனுல் தந்தையார் தாயில்லாக் குழந்தையை மிக்க அன்புடன் பேணி வளர்த்துவந்தார்.

தம் மகனுக்குத் தமிழில் இருந்த ஆர்வத்தைக் கண்ட தந்தையார் தாமே சிறந்த தமிழ்நூல்களைப் பாடஞ்சொல்லி அவ் வார்வத்தை வளர்த்தார்; தம் மைந்தன் கணிதசாஸ்திரியாய் விளங்கி, பெரும்பொருள் ஈட்டவேண்டும் என்று விரும்பினர். ஆனுல், இளைஞருக்கு அதில் விருப்பமில்லை. கணக்குப் போடச் சொன்னுல், கணக்கு, பிணக்கு, வணக்கு என்ற சொற்களைச் சிறுவர் அடுக்கிக்கொண்டே இருப்பாராம்! பள்ளிப்படிப்பில் ஆர்வங்கொள்ளாது இயற்கையைக் கண்டு அவர் மகிழ்வார்.

பாரதியார் இளமையிலேயே, கடல்மடை திறந்தாலெனக் கவிகளை இயற்றுவார்; ஒன்பதாம் வயதிலேயே, பிறர்கொடுத்த ஈற்றடியையும் பொருளையும் கொண்டு, அனைவரும் வியக்கும்படி பலபாடல்களைப் பாடியுள்ளார்; பதின்மூன்றும் ஆண்டில், பல புலவர்கள் கூடிய அவைக்களத்தில் பாரதி என்ற பட்டம் அவருக்குச் சூட்டப் பட்டது. பதினன்காம் வயதில் பாரதியார்க்குச் செல்லம்மாள் என்னும் நற்குணநங்கையை மணம்புரிவித்

தனர். இன்பமும் துன்பமும் மாறிமாறி வருமன்றே! அடுத்த ஆண்டில் அவர் தந்தையாரை இழந்தார்.

பின்னர், நம் புலவர் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் சிறிதுகாலம் கல்விகற்று, 1898-இல், காசியில் தம்



அத்தையார்வீட்டில் தங்கி, மத்திய இந்து கல்லூரியைச் சார்ந்த உயர்தரப்பள்ளிக்கூடத்தில் படித்துவந்தார்; ஆங்கிலம், ஹிந்தி, வடமொழி முதலியவற்றை நன்கு கற்றுத் தேர்ந்தார்; பிரவேசப் பரீட்சையில் முதல்-வகுப்பில் தேர்ச்சிபெற்று, கல்லூரிப் படிப்பையும் தொடங்கினர். பின்னர் எக் காரணத்தினலோ அப் படிப்பு நிறுத்தப்பட்டது.

அக் காலத்தில் தேசபக்தர்திலகமாய் விளங்கிய பாலகங்காதர திலகர் பத்திரிகையில் எழுதிய கட்டுரைகள் நம் புலவர்மனத்தில் நாட்டுப்பற்றை வளர்த்தன. 'நாட்டுத்தொண்டும் மொழித்தொண்டுமே நற்றொண்டுகள்' என்று கண்ட நம் கவி, எட்டையபுர அரசரின் வேண்டுகோளுக் கிணங்கி, 1901-இல் அவ் ஆருக்குச் சென்றார்; அவைக்களப்புலவருள் தலைவராய் விளங்கினர்; பலப்பல புதியபாட்டுக்களைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார்.

சில ஆண்டுகளுக்குப்பின், அங்குத் தங்குவதில் அவருக்கு வெறுப்புத் தோன்றியதனால், 1903-இல் அவ் ஆரை விட்டகன்று, தமிழை வளர்த்த மதுரையம்பதியைச் சார்ந்து, சேதுபதி கலாசாலையில் தமிழாசிரியராய் அமர்ந்தார். அத் தொழிலையும் வெறுத்த பாரதியார், மூன்று மாதத்திற்குப்பின் சென்னைக்குச் சென்று, ஜி. சுப்பிரமணிய ஐயரின் வேண்டுகோளுக் கிணங்கி, சுதேசமித்திரனில் உதவியாசிரியர்பதவியை ஏற்றார்; வருவாய் குறைவாயிருப்பினும், தமிழ்த்தொண்டு ஆற்றுதற்குத் தக்க இடம் என்று கருதி அங்குத் தங்கினர்.

"பாரதி, நீ அருமையான தமிழ் எழுதுகின்றாய். உனக்கு அக்ஷரலக்ஷம் கொடுக்கலாம். நீ காளிதாசனே! ஆனால், நான் போஜராஜன் அல்லனே! உனக்குத் தகுந்த சம்மானம் செய்ய என்னிடம் பொருள் இல்லையே!" என்று தேசபக்தர் சுப்பிரமணிய ஐயர் அடிக்கடி நம் புலவரிடம் கூறுவாராம்.

பாரதியார் சென்னையில் வாழ்ந்திருந்த காலத்தில், அவருக்குப் பலர் நண்பராயினர். அவர்புலமையை உணர்ந்து பாராட்டியவருள் வழக்கறிஞர் எஸ். துரைசாமி ஐயர், டாக்டர் நஞ்சுண்டராவ், போலீஸ் கமிஷனர் ஏ. கிருஷ்ணசாமி ஐயர், நீதிபதி வி. கிருஷ்ண-

சுவாமி ஐயர் முதலியோர் முக்கியமானவராவர். இவர்களுள், பாரதியாரின் பாடல்களின் பெருமையை உணர்ந்து, அக்காலத்திலேயே **தேசீய கீதங்கள்** என்ற தலைப்பில் அச்சமின்றி அச்சிட்டு, நாடெங்கும் பரப்பிய தனிச்சிறப்பு பெரியார் **வி. கிருஷ்ணசுவாமி ஐயருக்கே** உரியது.

1907-இல், புதிதாகத் தோன்றிய 'இந்தியா' என்னும் வாரப்பத்திரிகைக்கு ஆசிரியராய் அமர்ந்த பாரதியார், உணர்ச்சியும் தெளிவும் ஆழ்ந்த கருத்தும் வாய்ந்த தெள்ளிய தமிழ்நடையில், உரையும் பாட்டும் எழுதி, தமிழருக்கு நாட்டுப்பற்றும், தமிழ்ப்பற்றும் ஊட்டி வளர்த்தார். அப்பொழுது அவர்புகழ் நாடெங்கும் பரவிற்று.

அடிமைநாட்டில் உள்ளதை உள்ளவாறு உரைப்பதைக் கண்டு, ஆள்வோர் வாளா இருப்பரோ? பாரதியாருக்குச் சிறைத்துன்பம் நேரும் என்பதை அறிந்த அவர்நண்பர்கள், பாரதியார்போன்ற புலவர்கள் சிறைக்குச் சென்று நாட்டுத்தொண்டு செய்வதினும், வெளியிலிருந்து கவிபாடித் தமிழ்த்தொண்டு செய்வதே சாலச் சிறந்தது என்பதை உணர்ந்து, அவரைத் தேசபக்தர்களுக்குப் புகலிடமாக உள்ள புதுச்சேரிக்குச் சென்று வாழவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அன்பின் விளைவான அவ் வேண்டுகோளை மறுக்கஇயலாமல் பாரதியார் 1908-இல் புதுச்சேரியை அடைந்தார்.

புதுவை நம் புலவருக்குப் புதிய ஊர். மக்கள் அனைவரும் அறிமுகமில்லாதவர். கையில் காசுமின்றி, உதவுவார் ஒருவருமின்றி, இருப்பதற்கு இடமுமின்றி, புலவர் பட்ட பாடு புகலுந்தரத்ததன்று. பின்னர் அவர் அன்பர்சிலரது உதவியால் 'இந்தியா' பத்திரிகையைப் புதுப்பித்தார். "என்று தணியும் இந்தச் சுதந்திரதாகம்,

என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்" என்பது போன்ற வீரம் செறிந்த பாட்டுக்கள் வெளிவந்தன. அப்பத்திரிகையை நடத்துதற்கு நம் புலவர் முதலியோர் இன்னல் பல அடைந்தனர். ஆயினும், உணர்ச்சி என்னும் ஊற்றுச் சிறிதும் வற்றவில்லை. சுடினும் செம்பொன் தன்னொளி கெடுமோ? குவளைக்கண்ணன், சுந்தரேச ஐயர், கிருஷ்ணசுவாமிச் செட்டியார் இவர்கள் புலவருக்குச் செய்த பொருளுதவி போற்றத் தக்கது. 'மித்திரன்' ஆசிரியர் ஏ. அரங்கசாமி ஐயங்கார், புலவர் தம் பத்திரிகையில் கட்டுரை எழுதினும் எழுதாவிடினும், 1914 முதல் அவருக்கு மாதந்தோறும் முப்பது ரூபாய் அளித்து உதவியது பாராட்டத்தக்கது.

அங்குப் பின்னர் வந்து சேர்ந்த அரவிந்தர், வ. வே. சு. ஐயர் இவரிருவரும் நம் புலவர்வாழ்க்கையில் புத்துயிர் ஊட்டினர். திருச்சிக்கு அருகிலுள்ள கொடியாலம் என்னும் ஊரில் வாழ்ந்துவந்த வள்ளல் வா. அரங்கசாமி ஐயங்கார் என்பவரே இத் தேசபக்தர்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்து ஆதரித்துவந்தார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருக்கு விவேகானந்தர் மாணக்கராய் அமைந்ததுபோல, பாரதியாருக்கு வ. ராமஸ்வாமி ஐயங்கார் என்னும் அறிஞர் சிறந்த சீடரா யிருந்து தொண்டுகள் பல ஆற்றிவந்தார். பாரதியாரின் பாடல்களுள் பெரும்பாலன புதுச்சேரியிலேயே பாடப்பட்டன.

1918-இல் பாரதியார், புதுவையில் மேற்கொண்ட சிறைவாழ்க்கையை விரும்பாமல், அதனை விட்டு நீங்கிக் கூடலூருக்கு வந்ததும், அரசியலார் அவரைக் கைதுசெய்தனர். பின்னர், அரங்கசாமி ஐயங்காரின் உதவியால் விடுதலைபெற்ற புலவர், திருநெல்வேலிக் கருகிலுள்ள

கடையத்தில் சிலநாள் வாழ்ந்து, மீண்டும் சென்னைக்குச் சென்று, 'மித்திரன்' பத்திரிகையில் உதவியாசிரியர்-பதவி ஏற்ருர். தேசத்தொண்டும், தமிழ்த்தொண்டும் ஆற்றிவந்த பாரதியார், தமிழ்நாட்டின் தவக்குறையால், தம் முப்பத்தொன்பதாம் வயசில் 1921-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பதினேராம் நாள் மண்ணுலகை விட்டு மறைந்தார். ஆயினும், தமிழ்மொழி உள்ள அளவும் அவர்பெயர் நின்று நிலவும்.

பாரதியார் 'மானம் பெரிது, வாழ்வு சிறிது' என்று கண்டவர்; எதிரில் இல்லாதவரைப்பற்றி என்றும் இழிவாகப் பேசாதவர்; வறுமையிலும் செம்-மையாக வாழ்ந்தவர்; பிறர்வறுமையைக் கண்டு வருந்து-பவர்; ஊக்கமும் உள்வலியும் வாய்ந்தவர்; பிறப்பில் உயர்வுதாழ்வுகளை வெறுப்பவர்; 'புஷ்' வண்டியிலேறிச் செல்லும்பொழுது, வண்டிக்காரன் ஆடையைத் தரு-மாறு வேண்டுவானயின், தன் மேலாடையை அவனுக்கு அளித்துவிடுவார்; தமிழன் தமிழனேடு தமிழிலன்றிப் பிறமொழியில் பேசின், அடங்காச் சினம் கொள்வார்.

நம் புலவர் சிறுவர்களுக்கு விளையாட்டுத்தோழர். அவருடைய பேச்சில் நகைச்சுவை ததும்பும். அவரு-டைய கையெழுத்து மிகப்பெரியதாயமையும்; ஒன்றின்-மேல் ஒன்று உராயாது. அதைச் சிறுகுழந்தைகளும் எளிதாய்ப் படிக்கலாம்.

தேசியப்பாடல்களைத் தவிர, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு முதலிய சுவை ததும்பும் பாடல்களும், புதிய எளிய நடைபெற்று விளங்கும் உரைநடைநூல்கள் பலவும் அவர் இயற்றி-யுள்ளார். நாட்டுப்பற்றும் தமிழ்ப்பற்றும் ஊட்டும் இனிய எளிய பாட்டுக்களைத் தாளத்தோடு பாடுமாறு அமைத்ததே அவர்பாட்டுக்களின் தனிச்சிறப்பாகும்.

அருஞ்சொற்பொருள்

பேணி - காத்து.
ஆர்வம் - ஆசை.
ஈற்றடி - கடைசியடி.
அவைக்களம் - சபை.
அக்ஷரலக்ஷம் - ஓர் எழுத்துக்கு லக்ஷம் ரூபாய்.
சம்மானம் - வெகுமதி.
வருவாய் - வரும்படி.
தெள்ளிய - தெளிந்த.
உரை, உரைநடை - வசனம்.
சால - மிக.
அறிமுகம் - பழக்கம்.
புகலும் - சொல்லும்.
செறிந்த - நெருங்கிய.
நாட்டுப்பற்று - தேசாபிமானம்.
'புஷ்' வண்டி - ஒருவகைத் தள்ளு வண்டி.

பயிற்சி

1. நம் புலவர் பாரதி என்னும் பட்டத்தை எப்பொழுது பெற்றார்?
2. பாரதியாரை யார்யார் எவ்வெவ்வாறு ஆதரித்து உதவினர்?
3. பாரதியாரின் குணச்சிறப்புக்களைக் கூறுக.
4. பாரதியார்பாட்டுக்களின் தனிச்சிறப்பு என்ன?
5. நம் புலவர் இயற்றிய சில நூல்களைக் கூறுக.
6. வாக்கியத்தில் அமைத்தெழுதுக: தோன்று, நிறுத்து, மகிழ்வி, இணங்கு, ஆதரி, போற்று.

---

4. கல்விச்செல்வம்

மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே. இன்பத்தை அடைதற்குக் கருவியாய் இருப்பது செல்வம். செல்வம்—கல்வி, பொருள் என்று இருவகைப்படும்.

பொன், மணி முதலிய பொருட்செல்வத்தினும் கல்விச்செல்வம் சிறந்தது. ஏனெனின், பொருள் பங்காளிகளால் பகுத்துக்கொள்ளப்படும்; கள்வராலும் வலிய பகைவராலும் கவர்ந்து கொள்ளப்படும்; கோபங்கொண்ட கொடுங்கோல்மன்னரால் எடுத்துக்கொள்ளப்படும்; வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்படும்; வெந்தழலால் வெந்து சாம்பலாய்விடும்; தம்மை அண்டினோர்க்கு அளித்தால் குறையும். இவற்றால் பொருள்

அழியுந்தன்மையை உடையது என்பதனை அறிகின்ரேம். அன்றியும், அது பெரும்பாலும் தக்காரிடத்து உண்டாகி நிலைபெருதது; உடலோடு அழிவது. மேலும், அதனை ஈட்டல், காத்தல், இழத்தல் என்றிவற்ருல் மக்கள் துன்புறுவர். அது பலரையும் பகையாக்கும்.

கல்வியோ எவராலும் கவரப்படமாட்டாது; தீ, வெள்ளம் முதலியவற்ருல் நாசமுருது; பிறர்க்குக் கொடுக்கக் கொடுக்க வளருமேயன்றி, குறைபடாது. ஆகலின், இது அழியுந்தன்மை உடையதன்று; மேலும், பெரும்பாலும் தக்காரிடத்தே உண்டாகி நிலைபெறும். ஒருவன் உடலழியினும் அவன் கற்ற கல்வி அழியாமல், அவனுயிரோடு கிடந்து, அவ்வுயிர் சென்றவிடத்துச் சென்று உதவும். இதனை ஈத்தலும் காத்தலும் எளிது; இழத்தலே இல்லை. இது பகையையும் நட்பாக்கும்.

கல்வியாவது—கற்றற்கு உரிய நூல்களைக் கற்றல். அந் நூல்கள் அறநூல், யானை குதிரை தேர் படைக்கலம் என்ற இவற்றின் நூல்கள், அறிவியல்நூல், தொழில்நூல் முதலாகப் பலவகைப்படும். ஒவ்வொருவரும் அனைவர்க்கும் இன்றியமையாத பொதுக்கல்வியைப் பயின்று, பின்னர், தமக்கு விருப்பமுள்ள சிறப்புக்கல்வியில் தேர்ச்சி பெறவேண்டும்.

கற்கப்படும் நூல்களுக்குக் கருவியாய் இருப்பவை எண்ணும் எழுத்தும். எண் என்பது கணிதம். எழுத்து என்பது இலக்கணம். இவ் விரண்டும் மக்களுக்கு இரு கண்கள் என்று அறிந்தோர் சிறப்பித்துச் சொல்வர். ஏனெனின், இவ்விரண்டனையும் கற்றவர் ஞானக்கண்ணைப் பெற்றவராகலின், அவர், தாம் இருக்கும் இடத்திலல்லாமல் வெவ்வேறு இடத்தில் உள்ள பொருள்-

களையும், தாம் உள்ள காலத்திலல்லாமல் வெவ்வேறு காலத்திலுள்ள பொருள்களையும் காண்பர். இவ் விரண்டனையும் கல்லாதவர் எல்லாவிடத்திலும் எல்லாக்காலத்திலும் உள்ள பொருள்களைக் காணும் ஆற்றலைப் பெற்றிலர். நோய் முதலியவற்றால் துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணையே உடைமையின், அவர் கண்ணுடையராகார்; புண்ணுடையரே ஆவர்.

மக்களின் வாழ்நாள் சில. அவர்களின் அறிவும் சிறிதே. அக் குறுகிய ஆயுட்காலத்தில் பிணியோ பல. ஆனால், கல்வியோ கரையில்லாதது. ஆதலின், எல்லா நூல்களையும் கற்றல் இயலாது. அன்னப்பறவையிடத்துப் பாலையும் நீரையும் கலந்து வைப்பின், அது நீரைப் பிரித்து நீக்கிப் பாலையே பருகுமாம். அதுபோல, நாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருளை உணர்த்தும் நூல்களையே கற்றல் வேண்டும்; அவற்றை உணர்த்தாத களவுநூல் போன்றவற்றைக் கற்றலாகாது.

கற்றற்குரிய நூல்களை நல்லாசிரியரிடத்துச் சென்று கற்கவேண்டும். வறிஞன் ஒருவன் பொருள்பெறவேண்டி எவ்வாறு செல்வனிடம் சென்று தலைவணங்கித் தாழ்ந்து நிற்பானோ, அதுபோல நாமும் ஆசிரியர்முன் அன்புடன் தலைவணங்கி வழிபட்டுக் கற்றல் வேண்டும்; அவர்க்கு வருந் துன்பங்களைத் துடைத்தும், மிக்க பொருளைக் கொடுத்தும் உதவவேண்டும். அவ்வாறு கற்றவரே உயர்ந்தோராவர். அவ் வழிபாட்டு-நிலைமைக்கு நாணிச் செருக்குக் கொண்டு, அழியாத கல்வியைப் பெறாதவர் இழிந்தோரே ஆவர்.

மாணாக்கர் ஆசிரியரிடத்துக் குறித்த காலத்தில் தவறாது சென்று, அவரை வணங்கி, அவர் 'இரு' என்றபின் இருக்க வேண்டும். பின்னர், அவர் பாடம் கற்பிக்குங்காலத்து, வேட்கையை உடையவன் நீரைப்

பருகுவதுபோல, அப் பாடங்களைக் கேட்கவேண்டும். கேட்டவற்றை மறவாமல் மனத்தில் அமைத்துக்-கொள்ளவேண்டும் ; நூற்பொருளை ஐயமும் திரிபுமின்றி அறிய வேண்டும். தாமாகவே கற்பதினும் பாடங்கேட்-டலே நன்று. தம்மொடு பயிலும் ஒருசாலைமாணக்-கரைத் தமக்கு விளங்காதவற்றை வினவி, அவர் வினவியவற்றிற்கு விடையளிப்பின், அறியாமை அகலும். பின்னர், அந் நூல்களுள் சொல்கின்ற நெறியில் நிற்க வேண்டும். மாந்தர் சிறிது கற்ற துணையானே திருப்தியடையாமல், மேலும் மேலும் கற்றல் வேண்டும். தோண்டிய அளவிற்கேற்ப மணலில் நீர் சுரப்பது-போல, கற்ற அளவிற்கேற்ப அறிவும் வளரும்.

கல்வி இப் பிறப்பில் பொருளைப் பயக்கும். மக்கள் கற்றோரை வரவழைத்து, பலநாள் உண்டி முதலிய-வற்றால் உபசரித்து, அவர்கள் செய்யும் பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்ந்து, அவர்களை வணங்கிப் பொன்னும் மணியும் அணியும் பட்டாடையும் உவந்து வழங்கு-வதைக் கண்கூடாகக் காண்கின்றோமன்றோ? அன்றியும், கற்றோர் கல்வியறிவினால் தொழில் பல செய்து, மிக்க பொருளை ஈட்டுகின்றனர். கற்றறிந்த பெரியோர் சென்றவிடமெல்லாம் சிறப்புப் பெறுவர். எந்நாடும் அவர்நாடாகும். எவ்வூரும் அவர்ஊராகும்.

கல்வி இன்பத்தையும் அளிக்கும். அறிஞர் சிறந்த இலக்கண இலக்கியங்களைப் படிக்கும்போது சொற்சுவை பொருட்சுவைகளைக் கண்டறிந்து இன்புறுவர். அவற்றைப் பிறர்க்கு எடுத்துச்சொல்லும்பொழுது, கேட்போரும் இன்புறுவர். ‘கரும்பு தின்னக் கூலியா’ என்பது பழமொழி. ஆனால், கற்றோர் கரும்பைத் தின்று மகிழ்தற்குப் பிறர் கூலியுங் கொடுத்தலைக் காண்-கின்றோம்! கற்றோர்பேச்சைக் கேட்டோர், “இச்

சான்றோரோடு கூடி அறியாதன வெல்லாம் அறியப்பெற்றோம்; மூப்பினை யுடையராயினும் மகிழ்ச்சியால் இளைஞரானோம்" என்று உவப்பர். கல்வி புகழை நாட்டும்; கவலையைப் போக்கும். கல்வி மறுமையில் புண்ணியத்தையும் வீட்டையும் பயக்கும்.

ஆகலின், கல்வியைக் கற்று அதன் பயனாகிய அறிவைப் பெற்று, அவ் வறிவின் பயனாகிய ஒழுக்கத்தில் நின்று, இறைவனை இறைஞ்சுவோமாக.

'கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்'

அருஞ்சொற்பொருள்

மணி - இரத்தினம்.
பகுத்து - பங்கிட்டு.
வெந்தழல் - வெப்பமுள்ள தீ.
தக்கார் - தகுதியுடையவர்.
ஈத்தல் - கொடுத்தல்.
ஊனக்கண் - மாமிசக்கண்.
வழிபாட்டு நிலைமை - வணக்கத்தை உடைய நிலை.
வேட்கை - தாகம்.
ஐயம் - அதுவோ, இதுவோ என்னுஞ் சந்தேகம்.
திரிபு - ஒன்றை மற்றொன்றாகக் கொள்ளும் விபரீதம்.
ஒருசாலைமாணாக்கர் - கூடப் படிப்பவர்.
துணை - அளவு.
வால்அறிவு - உண்மையறிவு.

பயிற்சி

1. பொருளைவிடக் கல்வி, சிறந்தது என்பதற்குக் காரணங்களைக் கூறுக.
2. என் கற்றற்குரிய நூல்களையே கற்கவேண்டும்?
3. எவை கண்கள்? என்?
4. ஆசிரியரிடத்துக் கற்கும் முறையைக் கூறுக.
5. கல்வியால் பெறும் நன்மைகள் யாவை?
6. கல்வியின் கடைசிப்பயன் என்ன?

5. பட்டியின் நுண்ணறிவு

உஜ்ஜயினி நகரத்தில் ஆண்டுவந்த விக்கிரமாதித்தனும் அவன்மந்திரி பட்டியும் மாறுவேடம் பூண்டு பேசாமடந்தை இருந்த பாடலிபுரத்திற்குச் சென்றனர்; அங்கு ஓர் அம்மையாரின் வீட்டில் உண்டனர். உணவளித்த அவ் வம்மையார், அவர்கள் வந்த காரணத்தை வினவி யறிந்தாள். "என் அருமை-மக்களே, பேசாமடந்தையை மணஞ்செய்ய வந்த அரசர்பலர் ஆயிரம்பொன்னையும் கொடுத்து அவமானப்-பட்டு மீண்டனர். நீங்களும் அக் கதியை அடைய வேண்டுமோ?" என்று வருந்திக் கூறினாள். உடனே பட்டி பேசாமடந்தையின் வரலாறு முழுவதையும் தங்களுக்குச் சொல்லவேண்டு மென்று கேட்க, அவள் பின்வருமாறு கூறலாயினாள் :

"பேசாமடந்தையின் கோட்டையிலிருந்து அரண்-மனைவரை பத்து வாயில்கள் உள்ளன. முதல்-வாயிலில் ஆராய்ச்சிமணியும் விருதுக்கொடியும் கட்டி-யிருக்கும். அங்குக் கணக்கர் சிலர் இருப்பர். போகிறவர் ஆராய்ச்சிமணியை அடித்தால், கணக்கர் வந்து ஆயிரம் பொன் கேட்பர். அதை அவரிடத்தில் அளிக்க-வேண்டும். பின்னர் அவர் விருந்துவைப்பர். அதில் பச்சையூனும், வெந்த சோறும் வேகாத சோறும், உரித்த கனியும் உரிக்காத கனியுமாகிய எல்லாம் வைத்திருக்கும். அவ் விருந்தை உண்டு இரண்டாம் வாயிலில் சென்றால், ஒரு பதுமை முக்காலி போடும்; மற்றொன்று அதில் உட்காரவைக்கும்; மூன்றாவது தலையுரோமத்தைக் களை-யும். அதைக் கடந்து, மூன்றும் வாசலுக்குச் சென்று அங்கு நிற்கும் மல்லர்இருவரை வெல்லவேண்டும்.

"நான்காம்வாசலில் உள்ள கருங்குரங்கை ஏமாற்றி, ஐந்தாம்வாசலில் உள்ள புலியையும் ஆறும்வாசலில் உள்ள யானையையும் அழித்து, ஏழாம்வாசலிலுள்ள கிணற்றைக் கடந்து உள்ளே செல்லின், எட்டாம்வாசலில் சேற்றுக்கால்வாயைக் காணலாம். அதைக் கடந்து அப்புறம் ஏகின், ஓர் ஓலைச்சுருளும் ஒரு நத்தைக்கூண்டில் நீரும் இருக்கும். காலில் ஒட்டிய சேற்றை அந் நீரால் கழுவி, பாதி நீரை மிகுத்துவைக்க வேண்டும். அவ்வாறு செய்து ஒன்பதாம்வாயிலில் உள்ள பளிங்கு-மண்டபத்தில் வழுக்கிவிழாமல் நடந்துபோய், பத்தாம் வாசலுக்குச் செல்லவேண்டும். அங்கு இருள் செறிந்த ஆயிரக்கால் மண்டபம் ஒன்று உண்டு.

"அதன் வாயிற்படியை அறிந்து போவது அரிது.

"அதனையும் கடந்து செல்லின், பேசாமடந்தையின் நவரத்தினம் இழைத்த அரண்மனைச் சிங்காரமண்டபம் காணலாம். அதன் நடுவில் பஞ்சலோகத்தால் அமைத்தகட்டிலில் கால்மாடு தலைமாடு அறிந்து அமர-வேண்டும். மாறி அமர்ந்தால், பதுமைகள் பலவிதமாக அவமானப்படுத்தும். அச் சூழ்ச்சியில் வெற்றிபெற்றால், பல பதுமைகள் வந்து பலவித உபசாரங்களைச் செய்யும். இவற்றிற்கெல்லாம் தப்பி, அவ்விரவுக்குள் பேசாமடந்தையை அறிந்து, அவளை மூன்று சொற்கள் பேசும்படி செய்யின், அவளை மணக்கலாம். ஒன்றில் தவறினும், அவமானப்பட்டு வெளியே செல்லவேண்டும்."

பேசாமடந்தையைப்பற்றி அறியவேண்டியவற்றை அறிந்த பட்டியும் மன்னவனும் பட்டணம் சுற்றிப்-பார்த்து வருவதாக அக் கிழவியிடம் கூறி, ஆயிரம் பொன்னை எடுத்துக்கொண்டு வேதாளத்தையும் உடன்-கொண்டு அப்பெண்ணின் கோட்டை வாயிலை அடைந்-தனர். அரசன் முதல்வாசலில் கட்டியிருந்த ஆராய்ச்சி-

மணியை அடித்தான்; அப்பொழுது அங்கு வந்த கணக்கனிடம் ஆயிரம் பொன்னை அளித்தான். பின்னர் விருந்து படைக்கப்பட்டது. அரசன் விருந்துண்ணுஞ் சமயத்தில் பட்டியின் சொற்படி வெந்த சோற்றையும் கறியையும் உரித்த கனிகளையும் தான் உண்டு, வேகாத சோற்றையும் உரிக்காத கனியையும் கரும்பையும் அமைச்சனிடம் அளித்தான்.

பட்டி அவற்றை வாங்கி ஆடையில் முடிந்து-கொண்டு, அக் கணக்கனோடு நட்புப்பூண்டு அவனொடு கைகோத்து இன்சொற் கூறிக்கொண்டு செல்ல, மூவரும் இரண்டாம்வாசலுக்குச் சென்றனர். அரசன் அங்கு நின்ற ஆளைத் தள்ளிவிட, மூன்று பதுமைகள் முக்காலி போட்டு அவனை அமர்த்தித் தலைமயிரைக் களைந்து-விட்டன. மூவரும் மூன்றும் வாசலைச் சார்ந்தனர். பட்டி சைகை காட்ட, மன்னவன் கணக்கனை உள்ளே தள்ளிப் பின்நின்றான். மல்லர்இருவர் கணக்கனைப் பிடித்து, குத்தும் உதையும் கொடுத்து வருத்த, அரசனும் அமைச்சனும் அவர்களைக் கடந்து சென்றனர்.

பின்னர் நான்கு, ஐந்து, ஆறும் வாயில்களில் இருந்த கருங்குரங்கு, புலி, யானை இவற்றிற்கு முறையே வேகாச்சோறு, பச்சையிறைச்சி, கரும்பு முதலியவற்றை இட, அவை மோந்துபார்த்து வாளா இருந்ததனால், அவை உயிர்விலங்குகள் அல்ல; பொறிகளே என்று உணர்ந்தனர்; அவற்றை வேதாளம் அடித்து நொறுக்கி அப்புறம் போட, ஏழாம் வாயிலுக்கு ஏகினர்; அவ் வாயிலில் இருந்த கிணற்றில் அருகில் கிடந்த பாறுங் கல்லைப் போட்டனர். அக் கல் அங்கிருந்த பொறியில் பட, இரண்டு பலகைகள் இணைந்து கிணற்றை மூடிக்-கொண்டன. அவர்கள் அப் பலகைமீது காலை வைத்து அதனையும் கடந்து அப்பால் சென்றனர். எட்டாம்

வாயிலில் இருந்த சேற்றுக்கால்வாயில் அரசன் இறங்கிக் கடந்து செல்ல, பட்டி வேதாளத்தின்மீதேறி அதனைக் கடந்தான்; அங்கிருந்த ஓலைச்சுருளால் அரசன்காலில் ஒட்டிய சேற்றை வழித்து, நத்தையோட்டுத் தண்ணீரில் தன் மேலாடையின் முனையைத் துவைத்து, அரசனின் காலைச் சுத்தஞ்செய்து, பாதிநீரை மீதியாக வைத்தான். ஒன்பதாம் வாயிலுக்குச் சென்றபொழுது, வேந்தன் வேதாளத்தால் மெழுகும் நெருப்பும் வரவழைத்து, மெழுகைக் காய்ச்சி இருபாதத்திலும் தடவிக்கொண்டு, பளிங்குமண்டபத்தைக் கடந்து சென்றான்; முன்-போலவே மந்திரி வேதாளத்தின்மீது ஏறிக் கடந்தான்.

அவர்கள் பத்தாம் வாயிலை அடைந்ததும் பட்டி, "அரசனே, தூண்கள் நிறைந்த இம் மண்டபத்தில் நேர்வழி இல்லாமையாலும், இருள் சூழ்ந்திருப்பதனாலும், தாங்கள் தனித்துச் செல்வது அரிது. ஆதலின், நான் ஒரு வண்டின் உருவத்தை எடுத்து, வேதாளத்-தின்மேல் ஏறி, இன்னொலியுடன் இம் மண்டபத்தின் உளவை அறிந்து முன்னே பறந்து போகின்றேன். தாங்கள் அவ் வொலியைக் கேட்டுப் பின்தொடர்ந்து வரவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அவ்-வாறே அவர்கள் அம் மண்டபத்தைக் கடந்தனர்; அங்கு ஒரு சிங்காரமண்டபத்தின் நடுவில் ஒரு கட்டிலைக் கண்டனர். அமைச்சன் கூறிய அறிவுரைப்படி அரசன், தன் கையில் இருந்த எலுமிச்சம்பழத்தை அக் கட்டிலின் நடுவில் வைக்க, அது உருண்டோடிய இடம் காற்புறம் என்று அறிந்து, தலைப்புறத்தில் அமர்ந்தான். உடனே பலப்பல பதுமைகள் பலவித உபசாரங்களைச் செய்தன.

இவ்வாறு இருவர் தன் சூழ்ச்சிகளை அறிந்து வென்று உள்ளே வந்துவிட்டனர் என்பதை உணர்ந்த

பேசாமடந்தை, தாதி ஒருத்தியையும் வெள்ளாட்டியையும் தன்னைப் போலவே அலங்கரித்து, அவர்கள்முன் விடுத்தாள். அவர்கள் பேசாமடந்தை அல்லர் என்பதை நுண்ணறிவால் அறிந்துகொண்ட அரசன், அவர்கள் வெள்குமாறு பேசி, வெருட்டித் துரத்தினான்; பின்னர், பட்டியின் உதவியால் பேசாமடந்தையையும் பேசச்செய்து, அவளை மணந்து தன் நகரத்துக்கு மீண்டான்.

அருஞ்சொற்பொருள்

விருது - வெற்றி.
பதுமை - பொம்மை.
மல்லர் - மற்போரில் வல்லவர்.
மிகுத்து - மீதியாக்கி.
செறிந்த - நிறைந்த.
கால் - தூண்.
கால்மாடு - கால்பக்கம்.
பஞ்சலோகம் - ஐந்து உலோகம்: பொன், வெள்ளி, செம்பு, ஈயம், இரும்பு.
இறைச்சி, ஊன் - மாமிசம்.
வெள்ளாட்டி - பணிப்பெண்.
வெள்குமாறு - நாணமடையும் படி.

பயிற்சி

1. அரசன் மல்லரையும் பதுமைகளையும் எவ்வாறு ஏமாற்றினான்?

2. எட்டு ஒன்பதாம் வாயில்களில் இருந்த சூழ்ச்சிகள் எவ்வாறு வெல்லப்பட்டன?

3. கட்டிலின் தலைமாடு கால்மாடுகளை அறிந்தது யாங்ஙனம்?

4. பட்டியின் அறிவை இரண்டு உதாரணங்களால் புலப்படுத்துக.

5. சேர்த்து எழுதுக: சேறு + கால்வாய்; வாயில் + படி; அ + இரவு; அவை + ஐ; பாறை + கல்; எலுமிச்சை + பழம்; கிணறு + ஐ.

6. கிராமக்கூட்டுறவுச் சங்கம்

இந்திய நாட்டின் உயிர்நாடி கிராமங்களே. கிராம-முன்னேற்றமே நம் நாட்டின் முன்னேற்ற மாகும். கிராமமக்களுள் பெரும்பாலோர் பயிர்த்தொழில் செய்பவரே. 'உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை' என்று உயர்த்திச்சொல்லப்படுவது உழவுத்தொழில். ஆயினும், அத்தொழிலை மேற்கொள்வோர் இன்று மிகப் பல துன்பங்களால் வருந்துகின்றனர். நிலவரியோ அதிகம். இட்ட பயிர் நிலத்தில் இருக்கும்போதே அரசியலார் வரி வாங்குகின்றனர். அதுவும், கால-நிலைக்கு ஏற்ப மாறுமல், ஒரே அளவாய் உளது. வேளாண்மைக்கு வேண்டிய வசதிகள் கிடைப்பதில்லை. உழவுக்கு வேண்டிய பொருளுக்காகக் கடும் வட்டி கொடுத்துக் கடன்வாங்கவேண்டி யிருக்கின்றது. வட்டிக்கு வட்டி கொடுக்குங் காலமும் உண்டு.

அன்றியும், நம் கிராமமக்கள் மூடப்பழக்க-வழக்கங் காரணமாக வரவுக்குமேல் செலவு-செய்கின்றனர்; மணம், இழவு முதலிய காரியங்களில் அளவுமீறிச் செலவிடுகின்றனர்; அதனுல் கடனாளிக-ளாகின்றனர். ஆதலால், உழுதொழிலாளர் 'கடனிலே பிறந்து, கடனிலே வாழ்ந்து, கடனிலே இறக்கின்றனர்' என்பது மிகையாகாது.

ஒருநாட்டு ஏழைமக்கள் உயர்வது யாங்ஙனம்? அதற்குரிய வழி ஒற்றுமையே. ஒவ்வொருவரும் பிறருக்கும் உதவிபுரிந்து தாமும் பயன்பெற வேண்டும். 'ஒருவருக்காகப் பலரும், பலருக்காக ஒவ்வொருவரும்' என்பதே கூட்டுறவின் முதற்கொள்கை. ஒவ்வொரு தனிமனிதனும் பிறருடன் கூடி ஒழுக்கமுறையில் உயர்ந்து ஒருவருக்கொருவர் உதவி, செல்வரும் உயர்-

பதவியில் உள்ளோரும் பெறும் இன்பமனைத்தும் பெற்று, குறைவற்ற வாழ்வு வாழ்வதே கூட்டுறவு இயக்கத்தின் பயன்.

வருவாயினும் செலவு சுருங்கின் கேடில்லை; கடன் வாங்க வேண்டுவதில்லை. கடனின்றி வாழ்ந்தால், கலக்கமின்றி மனவமைதியோடு வாழலாம். 'கடனுண்டு வாழாமை காண்டல் இனிதே' என்பது சிறந்த கொள்கையே. ஆயின், இன்றியமையாத செலவுகளைக் கடன்வாங்கியாவது செய்யவேண்டு மன்றோ?

கூட்டுறவு இயக்கம் முதன்முதலில் ஜெர்மனி, டென்மார்க் முதலிய நாடுகளில் தோன்றி, அந் நாட்டு மக்களுக்குப் பெரிதும் பயன் அளித்துளது. நம் நாட்டிலும் அம் முறையைப் பின்பற்றவேண்டும் என்று முதன்முதல் 1899-இல் அறிவித்தவர் சென்னை அரசியலதிகாரியா யிருந்த பிரடரிக் நிக்கல்ஸன் என்பவர்.

கூட்டுறவு நாணயச்சங்கம் இருவகைப்படும்: ஒன்று, உறுப்பினர் ஒவ்வொருவரும் ஓரளவு வரையறையின்றி, முழு இலாபநஷ்டத்துக்கும் உரியராய் இருப்பது; மற்றொன்று, வரையறை செய்த ஒரு தொகைவரையில் நஷ்டத்திற்குப் பாத்திரராய் இருப்பது.

அரசியலார் ஏழைத்தொழிலாளிகளின் பணக்கஷ்டத்தைப் போக்குதற்காகவே கிராமங்களில் கூட்டுறவு நாணயச் சங்கத்தை அமைத்து உதவுகின்றனர். அதனை அமைத்துக்கொள்ள விரும்பும் ஊரார் முதன்முதல் பதின்மருக்குக் குறையாமல் கையொப்பமிட்டு, சங்கங்களைப் பதிவுசெய்துகொடுக்கும் 'ரெஜிஸ்தரா'ருக்கோ உதவிரெஜிஸ்தராருக்கோ விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். அரசியலாரால் சங்கம் பதிவுசெய்யப்பட்டபின்னர், அங்கத்தினர் அனைவரும் அடங்கிய **மகாசபை** கூடி, **நிர்வாக சபை** ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஐவர், எழுவர், ஒன்பதின்மர் முதலிய தொகையினைக் கொண்ட அச் சபையோர் தங்களுக்குள் **தலைவர், காரியதரிசி** முதலாயவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். அச் சங்கத்தை நடத்தும் பொறுப்பு முழுதும் நிர்வாகசபையையே சாரும். ஆண்டுக்-கொரு-முறை இச் சபையைத் தேர்ந்தெடுப்பர்.

சங்கத்தில் உறுப்பினராய்ச் சேர விரும்புவோர் அதன் அதிகாரஎல்லைக்குள் வசிப்பவராய் இருக்க-வேண்டும். அவர் பிரவேசக் கட்டணத்தைச் செலுத்தி, தாம் எடுத்துக்கொள்ளும் பங்குக்குள்ள தொகையையும் கட்டவேண்டும். (பங்குக்கு 10 ரூபாய் என்றிருப்பின், ஐந்துபங்கு எடுத்துக்கொள்பவர் 50 ரூபாய் கட்ட வேண்டும்.) பின்னர், தமக்கு வேண்டிய கடனைப் பங்குக்குத் தக்கவாறு அச் சங்கத்திலிருந்து பெறலாம். அங்கத்தினர் கொடுத்த பங்குத்தொகையையும், அரசி-யலார் அளிக்குந் தொகையையும், செல்வர்கள் அச் சங்கத்தில் வட்டிக்குக் கொடுக்குந் தொகையையும் கொண்டு நிர்வாகசபையார் அங்கத்தினருக்குக் கடன் கொடுப்பர்.

பழங்கடனைத் தீர்த்தல், உழவு வாணிகம் முதலிய தொழில்களைச் செய்தல், நிலவரி கொடுத்தல், திருமணம் செய்தல், மக்களுக்குக் கல்வி கற்பித்தல் முதலிய பல செலவுகளுக்கும் கூட்டுறவு நாணயச்சங்கம் குறைந்த வட்டிக்கு அங்கத்தினருக்குக் கடன்கொடுக்கும். வாங்குவோர் கடனைச் சிறுசிறு தொகையாகப் பல தடவைகளில் குறித்த தவணையில் செலுத்தவேண்டும். தவணை தவறினால், வட்டி அதிகப்படும்.

நிர்வாக சபையார் உண்மையுள்ளவராயும், ஊரின் நன்மையைக் கருதுபவராயும் இருத்தல் வேண்டும். அவர்கள் கடன்கொள்பவரின் செல்வநிலையை நன்கு

அறிந்த பின்னரே கடன்கொடுக்க வேண்டும். ஆராயாது தகுதியற்றவருக்குக் கடன்கொடுப்பின், வாங்கினவர் கடனைத் திருப்பிக்கொடாராயின், நஷ்டம் சங்கத்தின் உறுப்பினர் அனைவரையும் சாரும். அதனால்தான் சிலர் சங்கத்தில் சேரவும் அஞ்சுகின்றனர்; உயர்ந்த கொள்கையுடைய சங்கத்தை வெறுக்கவும் முற்படுகின்றனர். அக்குறை கூட்டுறவுச்சங்கத்தின் குறையன்று; நடத்துவோரின் குறையே யாகும்.

கிராமங்களில் கடைகளில் வாங்கும் பொருள்கள் நல்லனவாயும் கலப்பில்லாதனவாயும் இருப்பதில்லை. அன்றியும், பேராசை பிடித்த வணிகர் அளவுக்கு மேற்பட்ட இலாபம்வைத்து விற்கின்றனர். ஆதலின், ஊரார் ஒரு சங்கமாகச் சேர்ந்து, பங்குத்தொகைகளை மூலதனமாகக் கொண்டு பண்டசாலையை அமைத்து, உணவுப்பண்டங்கள் ஆடை முதலியவற்றை வாங்கி, குறைந்த இலாபம் வைத்து விற்கலாம். அதனால் நல்ல பண்டங்களைப் பெறுவதோடு இலாபத்தையும் தாமே அடையலாம்.

கூட்டுறவுச் சங்கங்கள், ஏழைமக்கள் கடன்கொடுப்போரின் கையில் சிக்கி வருந்தாமலிருக்க உதவிசெய்யும்; சிறிதுசிறிதாகவாயினும் பொருளை மிகுத்துவைக்கும் பழக்கத்தை உண்டாக்கும்; அதனால் ஊரின் பொருளாதாரநிலையை உயர்த்தும்; ஒற்றுமை, உண்மை, கடமையுணர்ச்சி, பிறர்நலங்கருதுதல் முதலிய உயர்ந்த குணவொழுக்கங்களை வளர்க்கும்.

அன்றியும், கால்நடைகளை நன்முறையில் வளர்ப்பதற்கும், வனவிலங்குகளால் பயிர்கள் அழியாவண்ணம் வேலியிட்டுக் காப்பதற்கும், நீர்ப்பாசன வசதியை விருத்திசெய்தற்கும் பலப்பல சங்கங்களை அமைத்துக்கொள்ளலாம். மேலும், சிறுசிறு துண்டுகளாய்ச்

சிதறுண்டு கிடக்கும் நிலப்பகுதிகளை ஒன்றுசேர்த்தால், பல நன்மைகள் விளையும்; குறைந்த செலவில் மிக்க பயனைப் பெறலாம். அதற்கெனத் தனிச்சங்கங்களும் அமைக்கலாம். பால் நெய் முதலியவற்றை விற்கவும், எழுதப்படிக்கத் தெரியாத பேரிளைஞருக்குக் கல்வி-கற்பித்து அறிவை வளர்க்கவும், சுகாதார முறைகளைப் பரப்பவும் தனித்தனிச் சங்கம் அமைக்கலாம்.

உழவர் தம் நிலங்களில் விளைந்த தானியங்களை விற்கும்பொழுது, தரகர் பலர் மிக்க இலாபத்தை அடை-கின்றனர். அவர்கள் அடையும் இலாபமெல்லாம் உழவர்களே அடையவேண்டியவை யன்றோ? அவற்றை இழப்பதற்குக் காரணம் நம் மக்களின் ஒற்றுமை-யின்மையும் அறியாமையுமே ஆகும். ஒவ்வோர் உழவனும் தனித்தனியே தன் விளைபொருளை விற்-காமல், கூட்டுறவுமுறையைப் பின்பற்றி ஒன்றுசேர்ந்து விற்ருல், பேரூதியத்தைப் பெறலாம் அன்றோ? ஆகலின், கிராமந்தோறும் கூட்டுறவு விளைபொருள் விற்பனைச் சங்கம் அமைக்கவேண்டும். கூட்டுறவுமுறையில் நம் நாட்டில் நெல், பருத்தி, நிலக்கடலை முதலியவற்றை விற்குஞ் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நம் தமிழ்-நாட்டில் இம் முறையை முதன்முதல் வகுத்துதவியவர் திரு. T. ஆதிநாராயண செட்டியார் என்னும் அறிஞரே.

கூட்டுறவுச் சங்கங்கள் செவ்வையாக நடை-பெறுதற்குக் கல்வியறிவும் ஒழுக்கமும் வாய்ந்த அங்கத்-தினரும், அவர்களிடையே ஒற்றுமையும், அரசாங்கத்-தின் பொருளுதவியும் வேண்டும். இச் சங்கங்களில் கடன்வாங்குவோர் குறித்த சிறுதொகையைக் குறித்த காலத்தில் கொடுக்கத் தவறலாகாது. நாணயம் தவறினல், நாணயச்சங்கங்கள் நன்கு நடை பெரு.

தொடக்கத்தில் இடர் பல இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது, ஒற்றுமையுடன் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து நடத்தி, நம் நாட்டு மக்கள் மிக்க பொருளும் இன்பமும் மனவமைதியும் பெற்று வாழ்வாராக!

"ஒன்றுபட் டால்உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே".

அருஞ்சொற்பொருள்

வேளாண்மை - உழவு.
சுருங்கின் - குறையின்.
வரையறை - எல்லை.
விண்ணப்பம் - வேண்டுகோள்.
பிரவேசக்கட்டணம் - சேர்வதற்கு உரிய தொகை.
மூலதனம் - முதற்பொருள்.
கால்நடை - ஆடுமாடு.
வனவிலங்கு - காட்டுமிருகம்.
இன்மை - இல்லாமை.
பேரூதியம் - மிக்க இலாபம்.
நாணயம் - நேர்மை.

பயிற்சி

1. இக்காலத்து உழவர்நிலையைக் கூறுக.
2. கூட்டுறவின் முதற்கொள்கையும் பயனும் யாவை?
3. கூட்டுறவு நாணயச்சங்கத்தின் இருவகை யாவை?
4. இச் சங்கத்தை அமைக்கும் முறையை எழுதுக.
5. எச் செலவுகளுக்கு இச் சங்கத்தில் கடன் வாங்கலாம்?
6. நிர்வாக சபையாரின் கடமைகளைக் கூறுக.
7. கிராமங்களில் கூட்டுறவுமுறையைப் பின்பற்றி எவ்வெச் சங்கங்களை அமைக்கலாம்?

7. போரை வெறுத்த புரவலன்

வலிமை மிக்க உயிர்கள் வலிமை குறைந்தவற்றை வருத்துவது உலகியற்கை. பகுத்தறிவுபெற்ற மக்க-ளுள்ளும் வலியோர் மெலியோரை வாட்டுவதைக் காண்-கின்றோம். ஆற்றல் மிக்க அரசன் ஒருவன், தன்னிலும் வலிகுறைந்த அரசனை வென்று, திறைசெலுத்தச் செய்கின்றான்; இன்றேல், அவனைச் சிறைப்படுத்தி, அவன்-நாட்டைத் தனதோடு சேர்த்துக்கொள்கின்றான். போர்க்களத்தில் எண்ணிறந்த அரசர் கொலையுண்ட செய்தியையும் சரித்திரம் நமக்குக் கூறுகின்றது. ஒரு போரில் வெற்றிபெற்ற மன்னவன் மேலும்மேலும் வெற்றியையே விழைகின்றான். உலகினை ஒருகுடைக் கீழ் ஆண்ட அரசனும், தான் இறப்பது உறுதி என்றும் போர் அமைதியை அளிக்காமல் மற்றொரு போருக்கு விதை ஆகும் என்றும் அறிந்தும், அதை விடுவதில்லை. அவ் வுண்மையை அறிந்தவன் **அசோகன்** ஒருவனே.

அசோகன் கி. மு. நான்காம் நூற்றாண்டில் வட இந்தியாவில் பாடலிபுரத்திலிருந்து மகதநாட்டை ஆண்ட மௌரிய சக்ரவர்த்தியாகிய சந்திரகுப்தனுக்குப் பேரன்; பிந்துசாரனுக்கு மகன். அசோகன் கி. மு. 273-இல் அரசுகட்டில் ஏறினன். அவன்காலத்திற்கு-முன்பே மௌரியப்பேரரசு இந்தியாவின் பெரும்பான்-மையான பகுதியையும், மத்திய ஆசியாவரையிலுள்ள பகுதிகளையும் தன்னகத்துக் கொண்டிருந்தது. அசோகன் தன் ஆட்சியில் முதல் எட்டு ஆண்டுகளை அமைதியாகக் கழித்தான். இந்திய நாடு முழுதும் தனிச்செங்கோல் செலுத்தவேண்டும் என்னும் அவாக் கொண்ட அசோகன் கி. மு. 261-இல் தனக்கு அடங்கிக்

கப்பங்கட்ட மறுத்த கலிங்கநாட்டின்மேல் படை-யெடுக்குமாறு தன் சேனைக்கு ஆணையிட்டான். கலிங்கம் என்பது இப்பொழுது நம் நாட்டின் கீழைக்கடற்கரை-யில் உள்ள ஒரிஸ்ஸா மாகாணமும் ஆந்திரநாட்டின் ஒரு பகுதியும் ஆகும். அது மஹாநதிக்கும் கோதாவரிக்-கும் இடையில் உள்ள நிலப்பகுதி.

கலிங்கநாட்டில் கடலொடு கடல் எதிர்ப்பதுபோல் இரண்டு படைகளும் ஒன்றை ஒன்று எதிர்த்தன. கடல்அலைகள் தம்முள் தாக்குதல்போல, குதிரைகளைக் குதிரைகள் தாக்கின. மலையோடு மலை பொருவதுபோல யானைகள் பொருதன. வீரர் அம்புகளை மழைபோல் பொழிந்தனர்; வேல்களை வீசினர். அவை தம் உடல்-களில் ஊடுருவிச் சென்றதனல், யானைகளின் பிளிற்-றொலியும் குதிரைகளின் கனைப்பொலியும் இடிபோல் முழங்கின. கரிகளின் கரங்கள் அறுபட்டன; கொம்புகள் ஒடிபட்டன; தலைகள் வெட்டி வீழ்த்தப்பட்டன. வெட்டப்பட்ட அவற்றின் கையும் காலும் பனைமரத் துண்டுகள்போலப் போர்க்களத்தில் வேறுவேருய்க் கிடந்தன. வீரர்களின் தலைகள் துணிக்கப்பட்டன. எங்கும் இரத்தவெள்ளம் பெருக்கெடுத்து ஓடிற்று. போர்க்களத்தில் கழுகும் நரியும் காகமும் புகுந்து பிணங்களை உண்டு மகிழ்ந்தன.

அசோகன்படையுடன் போர்செய்ய ஆற்ருத கலிங்கப்படைகள் புறங்காட்டி ஓடின. அதனல், அசோகன் கலிங்கநாடு முழுவதையும் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டான்.

வெற்றிபெற்ற வேந்தர், தம் வெற்றிவெறியால் பகைவர்நாட்டைக் கொள்ளையிட்டு மகிழ்தல், மகளிரைச் சிறைப்படுத்துதல், விழாக்கொண்டாடுதல், வெற்றித்-

தூண்களை நாட்டுதல் முதலிய பல செய்திகளைச் சரித்திரத்தில் நாம் பரக்கக் காணலாம். ஆயின், அசோகன் யாது செய்தான்? கலிங்கப்போர் அம் மன்னவன் மனத்தை மாற்றிவிட்டது. அப் போரில் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் அழிந்ததற்குக் காரணம் தானே

என்று தன் தவற்றை உணர்ந்த அசோகனின் உள்ளம்மிக நொந்தது; உடல்நடுங்கிற்று. போரை வெறுத்த அப் புரவலன் பின்னர்த் தன் வாழ்க்கை முழுதும் போர்புரிவதில்லை என்று சபதம்செய்தான். அவன்மனத்தின் துயர் நிலையையும் அவன் பின்னர்ச் செய்த செயல்களையும், அவன் பொறித்து வைத்த கல்வெட்டுத்தூண்களும் பட்டயங்களும் நமக்கு அறிவிக்கின்றன. அவற்றுள் சில வருமாறு:

" அரசர் பிரியதர்சின் (அசோகன்) தன் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில் கலிங்கரை வென்றார். அப் போரில் இலட்சத்தைம்பதினாயிரம் வீரர் சிறைபிடிக்கப்பட்டனர். நூறாயிரம் வீரர் கொலையுண்டனர். அதைக் குறித்து மன்னர் மனம் வருந்துகின்றார். ஏன் எனின், போர்வீரர்மட்டுமேயன்றி, அந் நாட்டிலுள்ள துறவிகள், பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் கீழ்ப்படிந்து வாழும் மக்கள், உறவினர்க்கும் அன்பருக்கும் ஏவலாளருக்கும்

தாம் செய்யவேண்டிய கடமையை உணர்ந்தோர் முதலிய குற்றமற்றவரும் கொடுந்துயருக்கு ஆளாயினர்; தந்தை, மைந்தன், உடன்பிறந்தோன் முதலியோரை இழந்து வருந்துபவர் பலர்; தலைவனை இழந்து வருந்துந் தலைவியர் பலர். கலிங்கத்தில் இறந்த உயிர்களில் ஆயிரத்தில் ஒருபங்கு அழியினும், அதைக்குறித்து அரசர் மிக இரங்குவார். ஒருவன் தனக்குத் துன்பம் விளைப்பின், அதைப் பொறுக்குமளவு பொறுத்துக்கொள்ள வேண்டும் என்பதே அரசர்கருத்து. தம் நாட்டில் வாழும் உயிரனைத்தும் இன்பமும் மனவமைதியும் பெற்று வாழவேண்டும் என்பதே அவர்விருப்பம். மறத்தால் வெல்வது வெற்றியாகாது; அறத்தால் வெல்வதே மேலான வெற்றி.''

பௌத்த மதத்தின் முக்கிய கொள்கையாகிய அஹிம்சையின் உயர்வை அறிந்த அசோகன் அம்மதத்தைத் தழுவினன்; தானும் காவியுடை உடுத்து ஒரு பிக்ஷுவாயினன்; ஊனையும் கள்ளையும் வெறுத்துத் தூயவாழ்க்கையை மேற்கொண்டான். அவன் தன் நாட்டைப் பலமுறை அமைச்சர்வசம் ஒப்பித்து, ஐயம் ஏற்று வாழ்ந்ததும் உண்டு. பெருவேந்தன் ஒருவன் துறவியானதை அறிந்து மக்கள் வியந்தனர். சொல்லளவில் இன்றிச் செய்கையிலும் நடத்திக்காட்டிய அச் செங்கோல்வேந்தனைப் பலர் பின்பற்றினர். அரசன் எவ்வழி, குடிகள் அவ் வழியன்றோ?

அரசத் துறவியாய் வாழ்ந்த அசோகன் தன் நாடுகளில் மக்களும் மாக்களும் பயன்பெறுமாறு நிழல்மரங்களையும் பழமரங்களையும் வளர்த்தான்; அன்ன சத்திரங்களும் தண்ணீர்ப்பந்தல்களும் அமைத்தான்; மருந்துமூலிகைகளையும் பச்சிலைகளையும் பயிர்செய்து, நோய்வாய்ப்பட்டோருக்கு வழங்கினன்; "ஒருமதத்-

தார் பிறமதத்தாரின் மனம் புண்ணுகும்படி பேசலாகாது. எல்லாரும் தூயவாழ்க்கையே வாழவேண்டும்; உயிர்களை நேசிக்க வேண்டும். மக்கள் பெற்றோர்க்கும் பெரியோர்க்கும், மாணுக்கர் ஆசிரியருக்கும் கீழ்ப்படியவேண்டும்”—இவை போன்ற பல உண்மைகளை நாடெங்கும் பரப்பினன்; தன் குடிகளின் நல்வாழ்விற்கு வேண்டியவற்றைச் செய்வதே தன் வாழ்க்கையின் குறிக்கோள் என்பதை நிரூபித்தான்.

அசோகன் அரசர்கூட்டத்தில் தனிச்சிறப்புப் பெற்றவன். உலகவரலாற்றில் உள்ள ஆயிரக்கணக்கான அரசர்களுள் அவனை ஒப்பார் ஒருவரும் இலர். இன்றைய உலகம், அசோகன் காட்டிய வழியைப் பின்பற்றிப் பகை நீங்கிப் போரை ஒழித்து, அன்பினல் அனைவரையும் வென்று, அமைதியை நிலைநாட்டுக!

அருஞ்சொற்பொருள்

புரவலன் - அரசன்.
எண் இறந்த - மிகப் பல.
விழை - விருப்பு.
விதை - காரணம்.
ஊடுருவி - உடலிடையருவி.
கரம் - துதிக்கை.
ஆற்ருத - சக்தியில்லாத.
எரியூட்டுதல்-தீக்கொளுத்துதல்.
பரக்க - விரிவாக.
உடன்பிறந்தோன் - சகோதரன்.
மறம் - பகை; போர்.
பிக்ஷு - பௌத்த சந்நியாசி.
மூலிகை - வேர்.
குறிக்கோள் - இலட்சியம்.

பயிற்சி

1. அசோகன் எவ்வுண்மையை அறிந்தான்?
2. கலிங்கப்போரை வர்ணிக்க.
3. உயிர்க்கொலையால் மனம்மாறிய அசோகன் கல்வெட்டுக்களில் பொறித்துவைத்தவை யாவை?
4. அசோகன் நாட்டுக்குச் செய்த நன்மைகள் யாவை?
5. “உலகமன்னருள் அசோகனை ஒப்பார் ஒருவருமிலர்”—ஏன்?
6. வாக்கியங்களில் அமைக்க: சிறைப்படுத்து, எரியூட்டு, சபதம்செய், கீழ்ப்படி, ஆளாயினன், நடத்திக்காட்டு.

8. உயிர்களின் தற்காப்பு

ஆறறிவு படைத்த மக்கள், தங்கள் பகைவரிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ளவும் அவரைத் தாக்கி வருத்தவும், வில் வாள் வேல் கவசம் கேடயம் துப்பாக்கி முதலிய பல செயற்கைப்படைக்கலங்களைத் தம் பகுத்தறிவினால் ஆக்கி அமைத்துக்கொள்கின்றனர். ஆயின், ஓரறிவுமுதல் ஐந்தறிவுவரை அறிவு பெற்றுள்ள தாவரங்களும் புழுபூச்சிகளும் பறவைகளும் மிருகங்களும், தம்மைத் தம் பகையிடமிருந்து காத்துக்கொள்ளவும் அவற்றைத் துன்புறுத்தவும் என்ன செய்யும்? அவை சில உறுப்புக்களையும் பொருள்களையும் இயற்கையாகவே பெற்றுள்ளன.

ஆடு மாடு யானை முதலியவற்றிற்குக் கூரிய கொம்பும், பன்றி முதலியவற்றிற்குத் தடித்த தோலும், ஊனுண்ணுங் கொடிய விலங்குகளுக்கு நீண்டு வளைந்த பற்களும் நகங்களும், ஆமைக்கு உறுதியான ஓடும், தேளுக்கு விடக்கொடுக்கும், நாகத்துக்கு நச்சுப்பல்லும் படைப்பிலேயே அமைந்திருப்பதைப் பார்க்கின்றோம். பல்லி, பச்சைப்பாம்பு போன்ற சில பிராணிகள் தாம் வசிக்கும் இடத்தின் நிறத்தையே பெற்றிருப்பதனால், அவை அங்கு இருப்பதைப் பிற பிராணிகள் அறிய முடிவதில்லை. முதலையின் உறுதியான செதிள்கள் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் அசைவதில்லையாம். முள்ளம்பன்றி, சத்துரு அருகில் வரின், தன் உடல்மேலுள்ள உறுதியும் கூர்மையும் வாய்ந்த நீண்ட முட்களைச் சிலிர்த்துக்கொண்டு நிற்கும். இவைபோன்ற இன்னுஞ் சில புதுச்செய்திகளை ஈண்டு அறிவோம்.

நச்சுநீரும் சிறுகல்லும் : தவளையும் தேரையும் தம் உடலிலிருந்து நச்சுநீரை வெளிப்படுத்தும். அது



நம் உடலில் பட்டால் அரிப்பையும் சொறியையும் உண்டாக்கும். அதனால், அது நம்மேல் படுவதை வெறுத்து விலகிச் செல்கின்றோம். கடலில் மலர்உருவத்தில் உள்ள 'கடல் அனிமோன்' என்னும் ஒருவகைப் பிராணி (Sea-anemone), பகைப்பொருள் ஏதேனும் தன்னை அணுகித் தீண்டின், மக்கள் 'டார்பெடோ' என்னும் வெடிகுண்டைச் சுட்டுக் கப்பலைத் தொளைப்பது போல, தன் உடம்பிலிருந்து ஒருவகை நூலை மிகவிரைவில் வெளிப்படுத்தி அதன் உடலைத் தொளைத்துத் துன்புறுத்தும். அந் நூல் மீண்டும் உடலுக்குள் செல்வதில்லை. அந் நூலில் பகையைத் துன்புறுத்தும்

பொருள் உள்ள சிறு அறைகள் உள. அதனால், பிற பிராணிகள் அவற்றின் அருகில் செல்வதில்லை. இவ் வகையைச் சேர்ந்த மற்றும் சில, தம் அருகே செல்லும் மீன்களால் சிதறப்படுஞ் சிறு-கற்களைத் தம் வாயில் சேமித்துவைத்துக்கொள்கின்றன; சத்துரு ஏதேனும் தன்னை நெருங்கின், தன் உடலைச் சுருக்கி, துப்பாக்கியிலிருந்து குண்டுகளைச் சுடுவது-போல, அக் கற்களை எறிந்து வருத்துகின்றன.

கொட்டுங் கொர்டுக்கு : தேனீ தன்னைக் காத்துக்-கொள்ளுதற்குக் கொடுக்கைப் பெற்றிருக்கின்றது. அக் கிளை கொடுக்கு பகைப்பொருளின் உடலில் பதிந்துவிடு-வதனால், அதனை மீட்டுக்கொள்ள முடிவதில்லை. அதனால், தேனீ இறந்துவிடுகின்றது. ஆயினும், தன்னைக் காத்தற்காக அன்றி, தன் இனத்தவரைக் காத்தற்கு அவ்வாறு செய்தலின், பிறர் வாழ்தற்குத் தன் உயிரை நீக்குகின்றது என்பது போற்றத்தக்கது. இராணிஈமட்டும் தன் மெல்லிய கொடுக்கை மீட்-டுக் கொள்ளும். அது பிற இராணிஈக்களையே கொட்டும்.

துரத்துந் தீநாற்றம் : அமெரிக்க காட்டில் உள்ள சதுப்புநிலங்களில் ஒரு வகைக் கோசுக்கீரையிலிருந்து, அழுகிய பிணத்தின் தீநாற்றம் வீசும். அதனால், அக்-கீரை கால்நடைகள் தன்னை உண்ணாமல் தடுத்துக் கொள்கின்றது. அன்றியும், ஆடுமாடுகள் அக் கீரையை மேயின், அதிலிருந்து வெளிப்படுஞ் சாறு அவற்றின் வாயில் எரிச்சலை உண்டாக்கும். இந்த உண்மையை உணர்ந்த பாடும்பறவைஒன்று (Maryland yellow Throat) அக் கீரைகளின் இடையே தன் கூட்டைக் கட்டுகின்றது. அதனால் அதன் முட்டைகள் திருட்டுப் போவதில்லை. என்னே அதன் அறிவு!

தென் அட்லாண்டிக்கில் உள்ள தெற்கு ஜியார்ஜியாத் தீவில் கூடுகட்டி வாழும் பெரிய உருவம் படைத்த 'பீட்ரல்' என்னும் பறவை (Giant Petrel) பகைவரிட

மிருந்து தன் குஞ்சுகளைக் காக்கும் முறை மிக வியக்கத் தக்கது. அது உண்ணும் உணவு, அதன் முதல்இரைப் பையில் இருக்கும்பொழுது, சில ரஸாயன மாறுதல்களை அடைகின்றது; அதனால் மிகக் கொடிய நாற்றத்தைப் பெறுகின்றது. அப்பொழுது எதிரி ஏதேனும் அருகில் வரின், அவ் வுணவை அதன்மேல் துப்பித் தன் குஞ்சைக் காக்கின்றது. அக் கெட்டவாசனையைப் பொறுக்க முடியாத அப் பகைப்பொருள்கள் விரைவில் அவ்விடத்தைவிட்டு நீங்கிவிடுன்றன.

ஒருவகைக் கீரியின் (Polecat) உடம்பு தீநாற்றம் வீசும். அதனால் ஒருபொருளும் அதன் அருகில் செல்வதில்லை. அக் கீரியைப் போலவே அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் பளபளப்பு மிக்க சிறகைப் பெற்ற

ஒருவகை ஈயின் (Lace-Wingedfly) உடம்பிலும் கெட்ட வாசனை வீசும். அதுவும் அதன் தற்காப்புக்காக அமைந்ததுவே. அந் நாற்றம் கையில் பட்டால், எத்துணை வாசனைப்பொருளைத் தடவிக் கழுவினாலும் மாறாது.

ஏமாற்றும் நிறமாற்றம்: மேற்குஇந்தியத்தீவுகளில் **நாஸாமீன்** என்று ஒருவகை மீன் உண்டு. அது மனிதருணவுக்குப் பயன்படும். அம் மீன் தன்னை எவரேனும் பிடிக்கவந்தால், தன் சுற்றுப்புறத்திற்கு ஏற்ற-



வாறு தன் நிறத்தை மாற்றித் தப்பித்துக்கொள்ளும். சிலசமயங்களில் கோடுகளும், சிலசமயங்களில் புள்ளிகளும் அதன் உடலில் காணப்படும். அது ஒருகணத்தில் எட்டு நிறங்களை மாற்றிக்கொள்ளும்.

நண்டுச்சிலந்தி என்னும் ஒருவகைச் சிலந்தி தன் எலும்புக்கூட்டின் வெளிப்பகுதியில் வரிவரியாகப்

பிரதிபலிக்குங் கருவிகளைப் பெற்றிருக்கின்றது. அவை சுற்றுப்புறத்தின் நிறத்தைப் பிரதிபலிக்கத்தக்க கோணத்தில் அமைந்துள்ளன. அதனால் அச் சிலந்தி பிறர்கண்ணுக்குப் புலப்படுவதில்லை. வெண்ணிறப் பளிங்கு தன்னை அடுத்த பொருளின் நிறத்தைத் தன்னுள்ளே கொண்டு காட்டுதல்போல, அது மஞ்சள் மலரில் தங்கியிருந்தால் மஞ்சள்நிறத்தையும், செம்மலரில் தங்கியிருந்தால் செந்நிறத்தையும் தன்னுள்ளே கொண்டு காட்டி, எதிரியை ஏமாற்றிவிடும். உண்மையில் அதன் உடலின் நிறம் மாறுபடுவதில்லை. அது தங்கியிருக்கும் பூவின் நிறமே பிரதிபலிக்கின்றது.

தலைக்கு வந்தது காலோடே: சிலந்தி பல்லி போன்ற சில பிராணிகள் தம் உயிரைக் காக்க உறுப்புக்களுள் ஒன்றை இழக்கின்றன; சில, பொறிகளில் தம் கால் முதலியவை சிக்கிக்கொண்டால், அவற்றைத் துணித்துவிட்டுத் தப்பிச்சென்று பிழைக்கின்றன. ஒரு பெண்முயல் எஃகுப்பொறியில் அகப்பட்ட தன் குட்டியின் காலைக் கடித்துத் துணித்து விடுவித்துவிடும்! ஒருவகை மூஞ்சூறு (Musk-rat) பொறியில் அகப்பட்ட தன் காலைக் கடித்து விடுவித்துக்கொண்டு, அப் புண்ணில் ஒருவகைப் பிசினைத் தடவிக்கொள்ளுமாம். அதனால், அது நீரில் நீந்தித் தன் உணவுக்காகச் செல்லும்பொழுது, சீழ் பிடிக்காமலும் புழுவும் புழுதியும் அடையாமலும் தன்னைக் காத்துக்கொள்ளும்.

அஹிம்சைமுறையும் தந்திரமும்: தம்மைக் காத்துக்கொள்ளுதற் கேற்ற கருவி ஒன்றும் இல்லாத சில பிராணிகள் தந்திரமான அஹிம்சைமுறைகளை மேற்கொள்கின்றன. பூச்சியில் **குச்சிப்பூச்சி** என்றொரு வகையுண்டு. அது செடியின் உலர்ந்த கிளையைப்போல் காணப்படும்; பிறர்கண்ணுக்குப் புலப்படுவதில்லை.

கட்டில் மீன் பகையைக் கண்டு நடுங்கின், அதன் உடலில் உள்ள பையிலிருந்து மைபோன்ற ஒருவகைப் பொருள் வெளிவரும். உடனே அது தங்கியுள்ள நீர்முழுவதும் கறுப்புநிறமாக மாறி, கரும்புகையைப் போல் காணப்படும். எதிரி அம் மீனைக் காணாது திகைத்து நிற்கும்பொழுது, அது தப்பி ஓடிவிடும். இது இப்பொழுது யுத்தகாலத்தில் கப்பல்கள் பயன்படுத்தும் 'புகைத்திரை'யை (Smoke-screen) நினைவூட்டுகின்றது.

அமெரிக்க நாட்டிலுள்ள ஓபோஸம் (Opossum) என்னும் ஒருவகைப் பிராணி, தன் எதிரி வருவதை அறிந்து, சட்டென்று தரையில் படுத்து, நெடுநேரம் சிறிதும் அசைவின்றிப் பிணம்போல் கிடக்குமாம்! இது விந்தையினும் விந்தை யன்றோ!

அருஞ்சொற்பொருள்

தற்காப்பு - தன்னைக் காத்துக் கொள்ளுதல்
சத்துரு, எதிரி - பகை.
நச்சுப்பல் (நஞ்சு+பல்)- விஷப் பல்
வெருட்டுவது - அச்சுறுத்துவது.
தீ நாற்றம் - கெட்ட வாசனை.
கால்நடை - ஆடுமாடு.
புலப்படுதல் - தெரிதல்.
துணித்து - துண்டுசெய்து.
அஹிம்சை - பிறருக்குத் தீங்கு செய்யாமை.
விந்தை - வியப்பு.

பயிற்சி

1. பின்வரும் முறையால் தம்மைக் காத்துக்கொள்ளும் உயிர்களுள் ஒவ்வொன்று கூறுக: நச்சுநீர், தீநாற்றம், நிறமாற்றம்.

2. 'கடல் அனிமோன்' தன்னைக் காத்துக்கொள்ளும் முறையைக் கூறுக.

3. பீட்ரல், நாஸாமீன், 'மஸ்க்' மூஞ்சூறு, கட்டில்மீன், இவை தம்மை எவ்வாறு காத்துக்கொள்கின்றன?

4. இவற்றைச் சொந்த வாக்கியத்தில் அமைக்க: கூரிய, சிலிர்த்து, நீண்டு, சேமித்துவை, கால்நடை, தீ நாற்றம்.

9. காந்தருவ தத்தை

வெள்ளிமலையில் உள்ள வித்தியாதர ருலகத்தைக் **கலுழவேகன்** என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு மனைவி **தாரணியிடம்** ஒரு பெண்குழந்தை பிறந்தது. நிமித்திகன் அக் குழந்தையின் ஜாதகத்தைக் கணித்து, "இக் குழந்தைக்கு மண்ணுலகில் இராஜமாபுரத்தில் மணம் நிகழும்" என்று கூறினான். பெற்றோர் அப் பெண்ணுக்குக் **காந்தருவ தத்தை** என்று பெயரிட்டு, அதைப் பேணி வளர்த்து வந்தனர்.

மண்ணுலகில் ஏமாங்கத நாட்டின் தலைநகரமாகிய இராஜமாபுரத்தில் வாழ்ந்த வணிகனாகிய **ஸ்ரீதத்தன்** ஒரு தீவில் சென்று பெரும்பொருளீட்டி, மீண்டும் தன் நகர் அடைய எண்ணி, தன் பரிசனங்களோடு மரக்கலத்தில் வந்தான். அதனை அறிந்த கலுழவேகன், **தரன்** என்னும் வித்தியாதரனை அனுப்பி, அவ் வணிகனை அழைத்து-வரும்படி ஏவினான். தரன் தன் வித்தைமகிமையால் பரிசனங்களுடன் மரக்கலம் கடலில் மூழ்கியதுபோல ஸ்ரீதத்தனுக்குத் தோன்றுவித்தான். அதனால் ஸ்ரீதத்-தன் ஒரு மரத்துண்டத்தைத் தழுவி, மெல்ல மெல்லச் சென்று, கரையை அடைந்து, வருந்தி இருந்தான்.

அப்பொழுது தரன் அவனைச் சந்தித்து, இன்சொல் கூறித் தேற்றி, தன் அரசனிடம் அழைத்துச் சென்றான்; செல்லும் வழியில் தத்தையின் வரலாற்றைக் கூறினான். கலுழவேகன், வணிகனுக்குப் பல உப-சாரங்கள் செய்து அளவளாவியிருந்து, தன் மகளை வீணாபதி என்னுந் தோழியுடன் அவனிடம் ஒப்பித்து,

பல பொருள்களும் உதவி, அவனை நோக்கி, "இசையில் வெல்பவனுக்கு இவளை மணம்புரிவி" என்று கூறி விடுத்-தான். ஸ்ரீதத்தன் அவளோடு புறப்பட்டு, மூழ்கிப்போன-தாகத் தான் கருதிய கப்பலைத் தரன் காட்டக் கண்டு மகிழ்ந்து, அதில் தன் ஊரை யடைந்தான் ; நிகழ்ந்தவற்றைத் தன் மனைவி **பதுமை**க்குக் கூறி, தத்தையைக் கன்னி மாடத்தே அமர்வித்தான்.

அக்காலத்தில் அந்நாட்டைக் **கட்டியங்காரன்** என்-பவன் ஆண்டுவந்தான். அவன், தன்னை நம்பி அரசை ஒப்படைத்திருந்த **சச்சந்தன்** என்னும் அரசனை வஞ்சகமாகக் கொன்று, அரசைக் கைப்பற்றிய அமைச்சன். ஸ்ரீதத்தன் கட்டியங்காரனின் உடன்பாடு பெற்று, அழகிய மண்டபத்தை அமைத்து, "காந்தருவதத்தை தன்னை வீணையில் வெல்பவனுக்கே மாலை சூட்டுவாள்" என்று முரசறைவித்தான்.

அதனை அறிந்த பல தேசத்தவரும் அங்கு வந்து கூடினர். பின்பு, ஸ்ரீதத்தன் தத்தையை அப் புது-மண்டபத்தில் யாழ்வாசிக்கச் செய்தான். அப்பொழுது மரங்களும் உருகி வளைந்தன ; கின்னரப்பறவைகள் மெய்ம்மறந்து வீழ்ந்தன. அரசர் முதலாயினோர், "இவள்புருவங்கள் நெற்றியில் ஏறவில்லை ; கண்களும் ஆடவில்லை; கழுத்தும் வீங்கவில்லை; பற்களும் தோன்ற-வில்லை. இவள் பவளச்செவ்வாயைத் திறந்து பாடி-னாளோ! அன்றி, யாழ்தான் தனக்குரிய நரம்போடே சாரீர வீணைக்குரிய நாவினாலும் பாடிற்றோ!" என்று வியந்தனர். பின்னர், அரசர் முதலியோர் யாழ்வாசித்த-பொழுது, முன்பு மெய்ம்மறந்து கிடந்த கின்னரப்-பறவைகள் அவர்இசையை வெறுத்து விசும்பை அடைந்தன. அவள் கண்டத்தால் பாடியபொழுது

உள்ளே புகுந்த அப் பறவைகள், அவர்கள் கண்டத்தால் பாடியபொழுது, அவமானம்செய்வதுபோல, மீண்டு போயின. அனைவரும் அவனை வெல்லும் வல்லமை இல்லாதவராய், வெள்கி மீண்டனர். இப்படி ஆறு நாட்கள் சென்றன.

அந் நகரில் **கந்துக்கடன்** என்னும் வணிகனால் வளர்க்கப்பட்ட சச்சந்தன்மகன் **ஜீவகன்** உரிய பருவத்தில் கல்விகற்று, வில்வித்தை முதலியவற்றைப் பயின்று, வீரனாய் விளங்கினான்; யானையாலும் எடுக்க இயலாத இரண்டு கல்லினை இரண்டு கையிலும் மலர்போல் ஏந்தினான். ஒருகால் அந்நாட்டுப் பசுநிரையைக் கவர்ந்த வேடரை வெல்லமுடியாமல் அரசன்படைகள் தோற்றுப் புறங்காட்டி ஓடி மீண்டபொழுது, ஜீவகன் ஒருவனாய் நின்று மழைபோல் அம்பைப் பொழிந்து அந் நிரையை மீட்டுவந்தான்; பசித்து வருந்திய படையினருக்குப் பருப்புச்சோறும் நெய்யும் கன்னலும் அளித்து, பசியைப் போக்கினான். இவற்றை யறிந்த கட்டியங்காரன் அவன்பால் அழுக்காறுகொண்டு, அவனைக் கொல்லுதற்குக் காலம்பார்த்திருந்தான்.

யாழ்ப்போரை அறிந்த ஜீவகன், தன்னை அலங்கரித்துக்கொண்டு, யாழ்மண்டபத்தை அடைந்தான். அவனைக் கண்ட தத்தை நெருப்பை உற்ற மெழுகைப் போல உருகினாள். ஜீவகன் நல்ல யாழைத் தேர்ந்தெடுத்து வாசிக்க, கின்னரமும் அசுணமும் சோர்ந்தன; மரமும் கல்லும் உருகின; மக்கள், எழுதிய சித்திரம்போல், அசையாமல் இருந்தனர். அவ் யாழ்ப்போரில் தத்தை தோற்று, ஜீவகனுக்கு மணமாலையைச் சூட்டி, அவனடி தொழுது இறைஞ்சி நின்றாள்.

அதனைக் கண்ட கட்டியங்காரன் மனம்புழுங்கி, அங்குக் கூடியிருந்த மன்னரை ஜீவகனோடு போர்-

செய்யத் தூண்டினன். அப்பொழுது தத்தை மெய்நடுங்கி அழுது கலங்கினள். ஜீவகன் தத்தையைத் தேற்றி, தேரேறிப் போருக்குப் புறப்பட்டான். அவனோடு பொருத மன்னர் அவன்கணைக்கு ஆற்றாது, உப்புமலை ஓடும்நீர்க்கு உடைவதுபோல் அழிந்தனர். வெற்றி பெற்ற ஜீவகன் தத்தையை மணந்தான்.

இளவேனிற்பருவத்தில் ஒருநாள் நகரமக்கள் நீர்விளையாடப் போயினர். அப்பொழுது கட்டியங்காரனின் களிறாகிய **அசனிவேகம்** மதம்பட்டு ஓடிவந்தது. அது நீராடிப் பல்லக்கில் சென்றுகொண்டிருந்த **குணமாலை** என்னும் வணிககங்கையை அணுகிற்று. அங்குச் சென்றிருந்த ஜீவகன் அவ் யானையை அடக்கிக் குணமாலையைக் காத்தான்; பின்னர் அவளை மணந்தான்.

ஜீவகனுக்குத் தோற்ற யானை கரும்பும் கவளமும் உண்ணாது வருந்தி நின்றது. அதன் காரணத்தை அறிந்த அரசன் ஜீவகனைப் பற்றிக்கொணர்ந்து யானையடியில் இடுமாறு ஆணையிட, அரசன்ஏவலாளர் விரைந்து சென்று, குணமாலையின் மனைக்கண் இருந்த ஜீவகனைச் சூழ்ந்தனர். ஜீவகன் தன் பெற்றோருடைய சொல்லுக் கடங்கிக் கட்டுண்டு சென்றான்.

காந்தருவ தத்தை தன் கணவனுக்குற்ற துயரை எண்ணி வருந்தினள்; அவனை விடுவிக்க உதவிசெய்ய வரும்படி தேவர்களை நினைந்தாள்; "ஆனால், 'அரசனால் சிறைப்பட்ட காலத்தில் தன் மனையாள் தன்னைச் சிறைநீக்கினள் என்றால், இவன்ஆற்றலும் கல்வியும் என்னும்!' என்று உலகம் பழிக்குமே! யான் என் செய்வேன்! என் நெஞ்சம் நோகின்றது" என்று வருந்தி வாளா நின்றாள்.

தன் மனைவியால் விடுதலைபெற்று, பிழைத்துப் போய் உயிர்வாழ்தலை வேண்டாத ஜீவகன், தன் உயிர்-நண்பனான **சுதஞ்சணன்** என்னுந் தேவனை நினைத்தான். சுதஞ்சணன் பெருமழை பெய்வித்தான். அதனால் விண்ணும் மண்ணும் அறியாதவாறு இருண்டது. அவன் ஜீவகனை ஒருவரும் அறியாமல் எடுத்துக்-கொண்டு, தன்னிடத்திற்கு ஏகினான். அதனை யறிந்த தத்தை, தன் கணவனுக்கு நலன் உண்டாகும்படி வாழ்த்தினாள். ஜீவகனைக் காணாத ஏவலாளர் அரசன்-சினத்திற்கு அஞ்சி, வேறொருவனைக் கொன்று, ஜீவகனை அழித்துவிட்டதாகத் தக்க காரணம் கூறி அரசனை நம்புவித்தனர்.

தன் தலைவியைப் பிரிந்திருந்த ஜீவகன், "தத்தை என் பிரிவினால் அழுவாளோ, அரற்றுவாளோ அல்லது இறந்துவிடுவாளோ? அவள் இறப்பின் என் உயிரும் உடலைவிட்டுப் பிரியும். அன்றியும், அவள் வித்தையில் வல்லவளாதலின், நான் உயிரோடு வாழ்-வதை அறிவாள்" என்று தேறியிருந்தான்.

பின்னர், தத்தை ஜீவகன் இருக்குமிடத்தை அறிந்து, அவனிடம் கொடுக்குமாறு ஓர் ஓலையை எழுதி அவன்தோழரிடம் கொடுத்து விடுத்தாள் :

"அடிகளுக்கு வணக்கம். இதனைக் கண்டருள்க. என் தந்தையார் வயிரமணிக்கலன், கற்பகமாலை, பட்டாடை, எலிமயிர்ப்போர்வை முதலியவற்றைத் தரனிடம் கொடுத்தனுப்பினார். அவனை யாரும் அறியாதபடி வேறு இடத்திற்கு அழைத்துக்கொண்டு-போய், சுவாமி ஏழுமாதம் இராஜமாபுரத்தைவிட்டு நீங்கியிருப்பர் என்று சொன்னேன். சுவாமியைக் கட்டியங்காரன் சிறைசெய்ததனால் பிறந்த பழியை என் பிறந்த வீட்டிற்குத் தெரிவிக்கலாகாது என்று

அவனிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்டேன். இனி, இப் பழியை நீக்கி அரசவுரிமையை எய்துவதொழிய, பிறநாட்டில் மேன்மையோடு வாழ்வதனால் விளைவதொரு புகழில்லை.

"அன்றியும், தங்கள் பிரிவுத்துன்பத்தால் பகலென்றும் இரவென்றும் அறியாது வருந்துகின்ற குணமாலை பிழைப்பாளோ, இறப்பாளோ அறியேன். 'தலைவன் நாளை வரும், நையாதே' என்று கிளி கூறின், அவள், 'நாளை என்று கூறிய நாள் அணித்தோ, சேய்த்தோ?' என்று கிளி சிரிக்குமாறு வினவுகின்றாள். இந் நங்கையின் துயர் ஒவ்வொரு நாளும் மிகுகின்றது" என்பது அக் கடிதத்தில் கண்ட செய்தி.

இதனால் நந்தையின் அறிவின் மேன்மையையும், கடமையுணர்ச்சியையும் நாம் நன்கு அறியலாகும். அக் கடிதத்தைப் பெற்ற ஜீவகன் பின்பு இராஜமாபுரத்துக்குத் திரும்பி வந்தவுடன், "அடிகளே, இப்பொழுதே சென்று, என் தங்கை குணமாலையைக் கண்டு, அவள் துன்பத்தை அகற்றவேண்டும்" என்று நந்தை அவனை இரந்து வேண்டினாள். என்னே நந்தையின் பெருந்தன்மை!

நம் நாட்டு மகளிர் தலையாய தலைவியாகிய நந்தையின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவாராக.

அருஞ்சொற்பொருள்

நிமித்திகன் - ஜோஸியன்.
பரிசனம் - ஏவல்செய்வோர்.
அளவளாவி - கலந்து பேசி.
கன்னி - மணமாகாப் பெண்.
உடன்பாடு - சம்மதம்.
கண்டம் - கழுத்து.
ஒருகால் - ஒருசமயம்.
நிரை - மந்தை.
கன்னல் - சர்க்கரை.
அழுக்காறு - பொறாமை.
அசுணம் - இசையறியும் ஒரு பறவை.
இறைஞ்சி - தலைவணங்கி.
களிறு - ஆண்யானை.
ஒரு கவளம் - ஒருவாயுணவு, யானையுணவு.
அடிகளுக்கு - தங்களுக்கு.
சுவாமியை - தங்களை.

நையாதே - வருந்தாதே.
அணித்தோ - சமீப காலத்தில் இருக்கிறதா ?
சேய்த்தோ-நீண்ட காலத்ததா ?
தலையாய - முதன்மையான.

பயிற்சி

1. தத்தையின் இசையின் சிறப்பைப்பற்றிக் கூறுக.

2. சீவகன் செய்த சிறந்த செயல்கள் யாவை ?

3. 'உப்புமலை ஓடுநீர்க்கு உடைவதுபோல்'—சந்தர்ப்பம் கூறி விளக்குக.

4. ஜீவகனை யானையின் காலில் இடுமாறு கட்டியங்காரன் என் ஆணையிட்டான் ?

5. தத்தையின் பெருமைகளைத் தக்க சான்றுடன் கூறுக.

6. மறுபாற்பெயர் கூறுக: மனைவி, மகள், தோழி, அரசன், வேடன், ஒருவன், தலைவி, தந்தை, நங்கை, களிறு.

---

10. நூல்நூற்றலும் ஆடை நெய்தலும்

மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை உணவும் உடையும் ஆகும். இவற்றுள் உணவுப்பொருள்களை உதவுவது உழவுத்தொழில்; உடையை உதவுவன நூற்குக்தொழிலும் நெய்தல்தொழிலும் ஆகும். கைத்தொழில் பிழைப்புத்தொழிலென்றும் துணைத்தொழிலென்றும் இருவகைப்படும். உழவும் நெய்தலும் பிழைப்புத்தொழில்கள். நூல்நூற்றலைப் பிழைப்புத்தொழிலாகவும் துணைத்தொழிலாகவும் கொள்ளலாம்.

நம் நாட்டுக் கிராமமக்களுக்கு ஓய்வு அதிகம். அவர்கள் அந் நேரத்தில் ஏதாவது துணைத்தொழில் ஒன்றைச் செய்து அதிக வருவாயைப் பெற்று அமைதியோடு வாழலாம். அதற்கு ஏற்றது நூல்நூற்றலே. இத் தொழில் நம் நாட்டில் நெடுங்காலமாக இருந்துவருகின்றது. இதற்குப் பெருமுதல் வேண்டுவதின்று;

தனியிடமும் பொழுதும் வேண்டா. ஆண்களும் பெண்களும், இளைஞரும், முதியோரும் இத் தொழிலை எளிதில் செய்யலாம். பெரும்பாலும் பெண்மக்கள் சமையல்வேலையும் வீட்டுவேலையும் செய்து ஒழிந்த நேரத்தில் செய்யத்தக்க தொழில் இதுவே. பொருள் தேடிக் காக்குங் கணவனை இழந்த மகளிரும், வேலைதேடி வெளியில் செல்லாமல், வீட்டிலேயே தங்கிச் செய்வதற்கு ஏற்ற தொழில் நூல்நூற்றலே யாகும். குருடராய் இருக்குங் கிழவரும் இதனை மேற்கொண்டு, போதிய ஊதியத்தைப் பெற்று, தம் வாழ்க்கையை நடத்தலாம் எனின், இதன் எளிமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

நூல்நூற்பதற்கு நல்ல பருத்தி வேண்டும். நம் தமிழ்நாட்டில் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களில் பருத்தி ஏராளமாகப் பயிராகின்றது.

நூல் நூற்கும் முறை: பருத்திப்பஞ்சை **அரை-மணை**யில் இட்டு அரைத்துப் பஞ்சையும் கொட்டையையும் வேறாகப் பிரிக்கவேண்டும். பின்னர் அப் பஞ்சை **வில்**லால் கொட்டித் தூகள் இல்லாது போக்கி, நூற்பதற்கு ஏற்ற நிலையில் சிறு **திரி**களாய் ஆக்கவேண்டும். அவ்வாறு ஆக்கப்பட்ட பஞ்சு **கொட்டை** எனப்படும். ‘கொட்டை’ என்பதற்கு ‘வில்லால் கொட்டப்பட்டது’ என்பது பொருள். பஞ்சின் மெல்லிய பகுதி ‘**பஞ்சுத்துய், பஞ்சியடர்**’ என்று வழங்கப்படும். பஞ்சுத்துய்யின் பண்புக்குத் தக்கவாறு நூல் நயமாக இருக்கும். **கதிர்** (தக்ளி), **இராட்டை** என்னுங் கருவிகளின் உதவியால் பஞ்சை நூற்று நூலாக்குவர்.

இராட்டையில் பலவகை உண்டு. அவற்றுள் **கிஸான் ராட்டை** தனிச்சிறப்பு வாய்ந்தது. இதன்

விலை குறைவு. இதன் அமைப்பு உறுதிவாய்ந்தது. இதனையே ஒரு சிறு பெட்டியின் உருவில் அமைத்துள்ளனர். இது **பெட்டி ராட்டை** அல்லது 'எரவாடா



ராட்டை' என்று வழங்கும். இது சிறியதாய்ப் பளுக் குறைவாய் அழகாய் இருப்பதனால், இதனை எங்கும் எடுத்துச் செல்லலாம். 1. **பெருஞ் சக்கிரம்,** 2. **விசைச்சக்கிரம்,** 3. **கதிர்தாங்கி,** 4. **கதிர்** என்பவை கிஸான் ராட்டையின் முக்கிய உறுப்புக்கள். நாம் முதலில் வலக்கையால் பெருஞ்சக்கிரத்தை வலமாய்ச் சுழற்றின், அவ்வியக்கம் கயிற்றின்மூலமாய் விசைச் சக்கிரத்தை அடையும். விசைச்சக்கிரம், வேறொரு கயிற்றின் மூலம், அவ்வியக்கத்தைப் பலமடங்காய்ப் பெருக்கிக் கதிரில் கொண்டுபோய்ச் சேர்க்கும். அதனால் கதிர் சுழலும். (கதிர் உளிக்கம்பியினால் செய்யப்பட்டு உறுதியாய் வளையாதிருக்கும். அதிலுள்ள உருளை-ஒன்றில் விசைச்சக்கிரக் கயிறு ஓடும்.) அக் கதிரில் சுற்றப்பட்டிருக்கும் நூலோடு இடக்கையிலுள்ள திரியை இணைத்து, பஞ்சுத்துய்யினை இழுத்துக்-கொண்டேயிருப்பின், அது நூலாகி முறுக்கேறும். வேண்டிய அளவு முறுக்கேறியவுடன், நூற்ற அந்நூலை அக் கதிரிலேயே சுற்றிவிடவேண்டும்.

கதிரில் நிரம்பச் சுற்றப்பட்ட நூலை அதிலேயே வைத்திருக்க முடியாது. அந் நூலைச் சேமித்து-வைக்கவும், அதன் நீளத்தையும் 'நம்பரை'யும் அளத்-

தற்குச் 'சிட்ட'மாகச் சுற்றவும் **நூல்வாங்கி, வீசனம்** என்னுங் கருவிகளை உபயோகிப்பர்.

ஆடை நெய்யும் முறை : கைத்தறியில் உள்ள கருவிகள் பெரும்பாலும் மரத்தால் ஆனவையே. முதன்-முதல் நூலிழைகளைத் தூய்மைப்படுத்தி, **பாவாற்றி** என்னுங் கருவியால் கஞ்சிப்பசையிட்டு உலரச்செய்து, ஓர் உருளைக்கட்டையில் தனித்தனியாக நெருங்கச் சேர்த்துச் சுற்றிவைப்பர். இந் நூலிழைகள் **பாவு** எனப்படும். இவைகளே தறியில் நெடுக்காய் ஓடுவன. இவற்றுள் பல நிறம் கொண்டனவும் உள. இவ் விழை-



களை ஒன்றைவிட்டு ஒன்றாகப் **பன்னை** எனப்படும் இரண்டு அச்சுக்கோல்களில் தொடுத்து வைத்துக்கொள்வர். இப் பன்னை தறிக்கு மேலே கட்டியிருக்கும் பலகையில் இணைக்கப்பட்டிருக்கும். அன்றியும், தறியின்மேல் ஒரு மிதியுருளை பன்னையின் கோல்களோடு தொடுக்கப் பட்டிருக்கும்.

நெடுக்கிலிருக்கும் அப் பாவுநூல்களின் மறுமுனை-

களைப் **படைமரம்** என்னுங் கட்டையில் தொடுத்து வைத்துக்கொள்வர். அதற்கு எதிரிலுள்ள பள்ளத்தில் கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டு அமர்வர். அப் பள்ளத்தில் காலுக்கு ஒன்றாக இரண்டு மிதிபலகை பன்னைப்பலகையில் தொடுக்கப்பட்டிருக்கும். நெய்வோர் வேண்டும் நிறத்தைக் கொண்ட நூலிழைகளைக் **குழல்கள்** என்னுஞ் சிறுமரக்கட்டைகளில் சுற்றி அருகில் வைத்துக்கொள்வர்; **நாடா** என்னும் (சிறிது நீண்டு குறுகிய பள்ளமுள்ள) ஒரு பலகைத்துண்டில் வேண்டும் நூற்குழல்களை வைத்துக்கொள்வர். எதிரில் மேலே தறியோடு தொடுக்கப்பட்டுத் தொங்கிக்கொண்டிருக்குங் கயிறொன்றைப் பக்கத்துக்குப் பக்கம் மாறி மாறி இழுத்தும், மிதிபலகைகளை மாறிமாறி மிதித்தும், தறியை ஓட்ட வேண்டும். மிதியுருளை முன்னும் பின்னும் அசைவதனால், அச்சுக்கோல்கள் மாறிமாறி மேலெழும். அப்பொழுது இருதிறப் பாவுகளும் மாறிமாறி மேலெழ, நாடா பாவுகளின் இடையில் குறுக்கே வலமும் இடமுமாக மாறிமாறிச் செலுத்தப்படும். அந் நாடாவிலுள்ள நூலால் அப் பாவுகள் பின்னப்படும். நாடா குறுக்கே ஓடும்போதெல்லாம்,பலகையைத்தம் பக்கமாக இழுத்துத் தட்டிக்கொண்டிருக்க வேண்டும். அதனால், குறுக்குநெடுக்குஇழைகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பொருந்துகின்றன. நெய்து முடிந்த பகுதியைப் படைமரத்தில் சுற்றிக்கொள்வர்.

துணி நெய்யுங் கைத்தறிகளைத் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், சேலம், ஆறணி, குளித்தலை, மதுரை முதலிய பல இடங்களில் மிகுதியாகக் காணலாம். 'காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிப் பிழைக்கலாம்' என்பது இக்காலப் பழமொழி; நெசவுத்தொழிலை மேற்கொண்டு பிழைக்கலாம் என்பதே இதன் பொருள்.

கைத்தறிகளிலேயன்றி, இயந்திரங்களிலும் ஆடைகளை செய்யலாம். நீராவியின் சக்தியால் மதுரை, தூத்துக்குடி, கோயிற்பட்டி முதலிய இடங்களில் நூல்ஆலைகளும் நெசவாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர், பாபநாசம் முதலிய இடங்களில் நீர்வீழ்ச்சியின் உதவியால் பெற்ற மின்சாரசக்தியினால் இவ்வாலைகள் ஓட்டப்படுகின்றன. மேட்டூர், ஷோலாப்பூர், பம்பாய், ஆமதாபாத் முதலிய நகரங்களிலும் மிகப் பெரிய நூலாலைகளும் நெசவாலைகளும் உள.

கைத்தறியில் நெய்யுந் தொழில் நம் நாட்டில் மிகப் பழங்காலத்திலேயே சிறந்த நிலையில் இருந்தது. மோதிரத்திற்குள் மடித்து நுழைக்கக்கூடிய மிக மெல்லிய ஆடைகள் நம் நாட்டில் நெய்யப்பட்டுவந்தன! **டக்கா மஸ்லின்** என்னும் பெயரை அறியாதார் யார்? அக்காலில் ஆடைகளின் பெயர்களே விநோதமானவை. **மாலைப்பனி, ஓடும் நீர், மெல்லிய காற்று** என்பவை அப் பெயருள் சில. பழந்தமிழர் பருத்தியினாலும், பட்டினாலும், உரோமத்தினாலும், நயமான மெல்லிய ஆடைகளை நெய்து தாமும் உடுத்தனர்; அயல்நாட்டினர்க்கும் அனுப்பி வாணிகஞ்செய்து பெரும்பொருள் ஈட்டினர். மேல்நாட்டார் நம் நாட்டு ஆடைகளைப் பெரும்பொருள் கொடுத்து விரும்பி வாங்கிக்கொண்டு சென்றனர்.

இருநூறு ஆண்டுகளாக இந் நாட்டை ஆண்ட ஆங்கிலேயர், தம் நாட்டு நெசவுத்தொழிலை வளர்க்கவேண்டி, நம் நாட்டு நெசவுத்தொழிலை அழித்துவிட்டனர். அதனால் நாம் அயல் நாட்டாரின் உதவியை நாடவேண்டியதாயிற்று. "நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நாள்தோறும் ஒருமணி

நேரமாவது நூற்கவேண்டும்; கையால் நூற்றுக் கைத்தறியில் நெய்த ஆடைகளாகிய கதரையே அணிய வேண்டும்” என்று மகாத்மா காந்தி அறிவுரை கூறினர்; நாட்டுக் கைத்தொழில்களை வளர்த்தார்.

இனி, நம்மை ஆள்வோர் நாமே. ஆகலின், நாம் நம் நாட்டுக் கைத்தொழில்களை வளர்த்து, ஏழைமக்களுக்கு வேலையும் கூலியும் கொடுத்து, நாட்டைச் செழிக்கச் செய்யவேண்டும். நம் நாட்டுப்பொருள் விலை அதிகமாயினும், குணத்தில் சிறிது குறையினும், நாம் அனைவரும் அவற்றையே வாங்கவேண்டும் என்று உறுதி செய்துகொள்ளல் வேண்டும். நம் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப்பொருளையும் நம் நாட்டிலேயே செய்யும் நாளே நன்னாளாகும்.

‘ உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் ’

அருஞ்சொற்பொருள்

துணைத்தொழில் - உதவித் தொழில்.
போதிய - வேண்டுமளவான.
பண்பு - தன்மை.
இணைத்தல் - சேர்த்தல்.
ஈட்டு - சேர்த்துவை.
நன்னாள் - நல்ல நாள்.
வந்தனை - வணக்கம்.

பயிற்சி

1. நூல்நூற்கும் கைத்தொழிலின் தனிச்சிறப்புக்கள் யாவை?
2. அரைமணை, கொட்டை, பஞ்சுத்துய், பன்னை, குழல், பாவாற்றி, நாடா—இவற்றை விளக்குக.
3. இராட்டையில் நூல்நூற்கும் முறையை விரித்துரைக்க.
4. ஆடை நெய்யும் முறையைக் கூறுக.
5. நெய்தற்றொழில் நம் நாட்டின் மிகப்பழைய தொழில் என்பதை மெய்ப்பிக்க.
6. மகாத்மா காந்தி கூறிய அறிவுரை யாது?
7. சொந்த வாக்கியத்தில் அமைக்க: வருவாய், முதியோர், ஊதியம், பண்பு, இடையில், நயமான, உறுதி.

11. விகடகவி தெனுலிராமன்

விகடகவி தெனுலிராமனைப்பற்றி அறியாதார் தமிழ்நாட்டிலும் தெலுங்குநாட்டிலும் இலர் என்றே கூறலாம். ஒவ்வொரு வீட்டிலும் பாட்டிமார் குழந்தைகளுக்குத் தெனுலிராமன்கதையைக் கூறுவர். அவன்கதை எத்தனை தடவை கேட்டாலும் தெவிட்டாது; கேட்பவரைக் களிப்புக்கடலில் ஆழ்த்திவிடும்.

இராமன் குண்டூர் ஜில்லாவைச் சேர்ந்த தெனுலி என்னும் ஊரில் பிறந்தவன்; இளமையிலேயே நுட்ப அறிவும், சமயோசித புத்தியும், நகைச்சுவை ததும்பப் பேசும் ஆற்றலும் வாய்ந்தவன். அவன் 1509-ஆம் ஆண்டுமுதல் 1529வரை விஜயநகர அரசைப் பெரும்புகழுடன் ஆண்ட **கிருஷ்ண தேவராய**ரின் அரண்மனைவித்வானாய் அமர்ந்திருந்தான்; அரசர் மகிழுமாறு அவ்வப்பொழுது சிரிக்கச் சிரிக்கப் பேசியும், அவர் செய்த தவறுகளைச் சொல்லாமற் சொல்லித் திருத்தியும், அரசருயிருக்கே ஆபத்து வந்த காலத்தில் அவரைக் காத்தும் பேருதவி புரிந்துவந்தான். இங்கு அவன்வாழ்க்கையில் சில செயல்களை அறிவோம்.

தாடியைப் பற்றிய குதிரை: ஒருகால் கிருஷ்ணதேவராயர் ஆயிரம் அரபிக்குதிரைகளை வாங்கித் தம் நாட்டிலுள்ள பிரபுக்களிடம் ஒவ்வொன்று கொடுத்து வளர்த்துவரச்செய்தார்; ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் அச்செலவுக்காகப் பதினைந்துரூபாய் கொடுத்துவந்தார். இராமனும் குதிரையொன்றை வளர்ப்பதாகக் கூறிப் பெற்றுக்கொண்டான்.

இராமன் அக் குதிரையை ஓரறையில் அடைத்துவைத்தான். அறைச்சுவர் ஒன்றில் தரையிலிருந்து காலடி உயரத்தில் ஒரு துவாரத்தைச் செய்து, அதன்-

வழியே நாள்தோறும் ஒரு பிடி வைக்கோலே தீனியாகக் கொடுத்துவந்தான்; கொற்றவர் கொடுத்த பொருளைக் குதிரைக்குச் செலவிடாமல், தன் குடும்பத்திற்குச் செல-விட்டான். மூன்றும் மாதக் கடைசியில் அரசரின் குதிரைப்படைத்தலைவன் இராமன்குதிரையைப் பார்க்-கச் சென்றான். அவன் அங்குச் சென்ற நேரம் குதிரைக்கு வைக்கோல் கொடுக்கும் நேரம். அவன் தாடி வளர்த்-திருந்தான். அவன் குதிரை இருக்குமிடத்தை அறிந்து, அத் துவாரத்தின்வழியே பார்த்தபொழுது, பட்டினி-யால் பரிதவித்த அப் பரி, அவன் தாடியை வைக்கோல் என்று கருதி, அதனை உறுதியாய்ப் பற்றிக்கொண்டது. வலி பொறுக்க முடியாமல் அவன் அலற, அவனுடைய தாடியைச் சமயோசிதபுத்தியுள்ள ஒருவன் கத்தரித்து-விட்டதனால், அவன் பிழைத்தான். இராமனின் கொடுஞ்-செயலை அறிந்த அரசர் அவனைச் சினந்து, 'இனி என் முகத்தில் விழிக்காதே' என்று ஆணையிட்டார்.

2. **கிடைப்பதில் பாதி:** அரசர் ஒருநாள் இராமனுக்குத் தெரியாமல் நாட்டியக்கச்சேரி ஒன்று நடத்த ஏற்பாடு செய்திருந்தார். அதை எப்படியோ அறிந்த இராமன் அரண்மனைக்குச் சென்றான். அரண்-மனையின் வெளிவாயிலில் இருந்த காவலாளர் அவனை உள்ளே விட மறுத்தனர். அவன் தனக்குக் கிடைப்-பதில் பாதியைக் கொடுப்பதாக வாக்களித்து உள்ளே சென்றான்; உள்வாயிலில் இருந்த காவலாளருக்கும் அவ்வாறே கூறி, தலையில் ஒரு பானையைக் கவிழ்த்துக்-கொண்டு, உட்புகுந்தான். அவனைக் கண்ட அரசர் வெகுண்டு, அவனை அழைத்து, "ஏன் இவ்வாறு வந்தாய்?" என்று வினவினர். "என் முகத்தில் விழிக்காதே" என்று தாங்கள் இட்ட ஆணையை மீற அஞ்சி இவ்வாறு செய்தேன்" என்று விடைகூறினன்.

கோபம் தணியாத கொற்றவர் அவனுக்கு இரண்டு டஜன் அடிகள் கொடுக்க உத்தரவிட்டார்.

தெனலிராமன், அந்த அடிகளை இரண்டு வாயிலிலும் இருக்குங் காவலாளிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, காரணத்தையும் எடுத்துக்கூறினன். அரசர் அவனுடைய நுட்பஅறிவைக் கண்டு மகிழ்ந்து மன்னித்தார்.

3. **புது மண்:** ஒருகடைக்காரன் ஈரமா யிருந்த சர்க்கரையைத் தெருவில் உலர வைத்திருந்தான். அங்குச் சென்ற தெனலிராமன், "இது என்ன ?" என்று கடைக்காரனை வினவ, அவன், "ஒரு வகை மண்" என்றான். இராமன் மறுமொழி ஒன்றும் பகரவில்லை.

அன்று மாலை, அக் கடையில் இராமன் இருந்தபொழுது, அவன்மகன் ஓடிவந்து, "அப்பா! நம் பசுவின் கன்றுசெத்துப்போயிற்று" என்று கூறிப் புலம்பினன். (இது இராமன் முன்னமே செய்த சூழ்ச்சி.) உடனே தெனலிராமன், "கண்ணே, கன்று நம் வாயில் மண்ணைப் போட்டுவிட்டதடா!" என்று கூறிக்கொண்டே, உலர்த்தியிருந்த சர்க்கரையை வாரிவாரி வாயில் போட்டுக்கொண்டான்; மகன்வாயிலும் அள்ளிப் போட்டான். ஒரு துணியில் கட்டிக்கொடுத்து, "உன் தாயின் வாயிலும் இம் மண்ணைப் போடு" என்று அனுப்பினன். கடைக்காரன் தன் தவற்றை உணர்ந்து, தன்னை மன்னிக்குமாறு இராமனை வேண்டினன்.

4. **கண்ணைத் திறந்து செய்வாயா?:** ஒருநாள் ஒரு செப்பிடுவித்தைக்காரன் எல்லாரும் வியக்குஞ் செயல்களைச் செய்து, செருக்குக்கொண்டு, "என்னை வெல்வோருக்கு என் தலையை அளிப்பேன்" என்று கூறினன்.

இராமன் அவனை அணுகி, "நான் கண்களை மூடிக்கொண்டு செய்யுங் காரியங்களை நீ கண்களைத் திறந்து-கொண்டே செய்வாயா?" என்று கேட்டான். அவன் அதற்கு ஒப்புக்கொள்ள, இராமன் தன் இரண்டு கண்களையும் இறுக மூடி, ஒரு பிடி மிளகாய்ப்பொடியை அவற்றின்மேல் வைத்துக்கொண்டு சிறிது நேரம் இருந்தான். பிறகு, அதை நீக்கிக் கண்களை அலம்பிச் சுத்தம் செய்துகொண்டு, தான் செய்ததுபோலக் கண்களைத் திறந்துகொண்டே செய்யும்படி செப்பிடு-வித்தைக்காரனிடம் செப்பினான். அவன் தான் தோற்ற-தாக ஒப்புக்கொள்ள, இராமன் அவனை அவ் வூரை-விட்டுத் துரத்திவிட்டான்.

5. பாத்திகளில் நீர் பாய்ந்துவிட்டது: ஒருநாள் இரவு இராமன் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த-பொழுது, தோட்டத்தில் ஏதோ சப்தம் கேட்டது. அங்கு நாலைந்து திருடர்கள் இருப்பதாக இராமன் ஊகித்து அறிந்துகொண்டான்; உடனே தன் மனைவியை அழைத்து, "மங்கம்மா, ஊரில் திருட்டு அதிகமா யிருக்கின்றது. நம் பணம், நகைகள் முதலிய-வற்றை ஒரு பெட்டியில் போட்டுப் பூட்டி, நம் வீட்டுக் கிணற்றில் போட்டுவிடுவோம்" என்று திருடர்களின் காதில் விழும்படி உரக்கக் கூறினான்; அவளுக்கு இரகசியமாக உண்மையை உரைத்தான்.

இருவரும் பெட்டிஒன்றைப் பெரிய கற்களால் நிரப்பிச் சுமந்து சென்று, கிணற்றுக்குள் தள்ளி, வீட்டுக்குள் போய்விட்டனர். திருடர்கள் அவன்சொற்களை உண்மையென்று நம்பி, அங்கிருந்த ஏற்றத்தின்-உதவியால் கிணற்றுநீரை இறைத்துப் பெட்டியை எடுத்-துச்செல்ல எண்ணினர். அவர்கள் நீரைஇறைத்துக்-கொண்டிருக்கும்பொழுது, இராமனும் அவன்மகனும்

அவர்களுக்குத் தெரியாமல் மெள்ள வெளிச்சென்று, அந் நீரைப் பாத்திகளுக்குப் பாய்ச்சினர்.

கோழி கூவிற்று. இராமன், "எல்லாப் பாத்திகளுக்கும் நீர் பாய்ந்துவிட்டது. இறைப்பை நிறுத்துங்கள்" என்று கூவினன். பொழுது விடிந்தால் தாம் அகப்பட்டுக்கொள்வதை அறிந்த திருடர்கள், இராமன் ஏமாற்றியதை எண்ணி, அவமானமடைந்து, ஓடிவிட்டனர்.

இளைஞர்களே, இவைபோன்ற இராமன்கதைகள் பலவற்றைப் படித்தும் கேட்டும் மகிழ்வீராக.

அருஞ்சொற்பொருள்

சமயோசித புத்தி - சமயத்திற்குப் பொருத்தமாகப் பேசும் அறிவு.
நகைச்சுவை - ஹாஸ்ய ரஸம்.
கொற்றவன் - அரசன்.
பரி - குதிரை.
பற்றி - பிடித்து.
வெகுண்டு - சினந்து.
பகர, செப்ப - கூற.
சூழ்சசி - தந்திரம்.
செருக்கு - கர்வம்.
பாத்தி - வரம்பு கட்டிய சிறிய நிலப்பகுதி.

பயிற்சி

1. தெனலிராமன் அரசருக்குச் செய்த உதவிகள் யாவை?
2. குதிரைத்தலைவன் பட்ட துன்பத்தையும், விடுபட்ட விதத்தையும் கூறுக.
3. இராமன் எவ்வாறு அடிபடாமல் தப்பினன்?
4. "நம் வாயில் மண்ணைப் போட்டுவிட்டதடா" — இது யாரால், யாருக்கு, எப்பொழுது, என் கூறப்பட்டது?
5. இராமன் செப்பிடுவித்தைக்காரனை எவ்வாறு வென்றான்?
6. தெனலிராமன் திருடர்களை ஏமாற்றிய முறையைக் கூறுக.
7. வேற்றுமை விளங்குமாறு சொந்த வாக்கியத்தில் அமைக்க: அரை, அறை; இரை, இறை; அரி, அறி; கூரிய, கூறிய; பரி, பறி.

12. வடமலையப்பப் பிள்ளையன்

தென்றமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலி நகரில் தளவாய்முதலியார்குடும்பத்தைப் போன்று, பிள்ளையன்-குடும்பமும் புகழுடையதாகும். கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திருச்சிராப்பள்ளியி-லிருந்து தென்னாட்டை ஆண்டுவந்த சொக்கநாத நாயக்கரால் திருநெல்வேலிச்சீமையை ஆளுமாறு அனுப்பப்பட்டவர் வடமலையப்பப் பிள்ளை ஐயன் என்பவர்.

பிள்ளையன் கார்காத்த வேளாண்குலத்தினர்; சோழ-நாட்டினர். அவர் தமது ஐந்தாம் வயசில் தாய்தந்தை-யரை இழந்ததனால், சிறிய தந்தையாரால் வளர்க்கப்பட்-டார். சிறியதந்தைவீட்டில் நேர்ந்த இடையூறுகளால் ஓரிரவில் அவர் வேறிடம் செல்லப் புறப்பட்டார்.

பிள்ளையன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு நடந்து சென்று, வழியில் களைப்பினால் ஓருமரத்தடியில் படுத்து உறங்கினார். காலையில் அவ் வழியில் தம் சீடருடன் வந்த தாதாச்சாரியர் என்பவர் வடமலையப்பரின் உடல்-இலக்கணங்களைக் கண்டு, அவரை எழுப்பித் தம்முடன் கொண்டு சென்றார்; பின்பு பலவகை நூல்களைக் கற்கும்-படி செய்தார். பிள்ளையனின் அறிவும் ஆற்றலும் அடக்கமும் ஒழுக்கமும் கண்ட ஆச்சாரியர் அவருக்கு அரசியலில் ஏதேனும் ஒருபதவி கொடுக்கும்படி சொக்க-நாத நாயக்கருக்கு அறிவித்தார். நாயக்கர், தம் குருவின் விருப்பப்படி, வடமலையப்பருக்குத் தம் அரண்-மனையில் உத்தியோகம் அளித்தார்.

வடமலையப்பர் தம் உத்தியோகத்தை வழுவின்றித் திறம்பெற நடத்திவந்தார் அவர்திறமையைக் கண்டு வியந்த நாயக்கர் அவருக்குப் படைத்தலைமைப்பத-

வியை நல்கினர். அக் காலத்தில் வடமலையப்பர் நாட்டிற்கு நலம்பயக்குஞ் செயல்கள் பல செய்தார்.

வடமலையப்பரின் மேன்மையை உணர்ந்த நாயக்கர் அவருக்கு **ஐயன்** என்னும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்து, தம் பிரதிநிதியாய்த் தென்னாட்டை ஆளும்படி, திருநெல்வேலிக்கு அனுப்பினர். பிள்ளையன் அரசரின் கட்டளைப்படியே திருநெல்வேலிக்குச் சென்று, பல்வேறு இனத்தவர்களாகிய குடிகளனைவரும் மனமுவக்கும்படி ஆட்சிசெய்துவந்தார்.

பிள்ளையன் நிறைந்த புலமை யுடையவர்; தமிழில் மச்சபுராணம், நீடூர்த்தல புராணம் முதலிய நூல்களை இயற்றியிருக்கின்றார். வடமலையப்பர் மிக்க புலமை வாய்ந்தவராய் இருந்ததனால், சிறந்த தமிழ்ப்புலவர்களை ஆதரித்துவந்தார். அதனால், நாட்டுமக்களும் தமிழ் கற்றலில் ஆர்வங்கொண்டனர். பிள்ளையன் சிவபக்தி மிக்கவர்; திருச்செந்தூர் முருகனிடத்தில் ஈடுபட்டவர். அக் கோயிலில் சில மண்டபத்திருப்பணி செய்திருக்கின்றார்.

அக்காலத்தில் தென்திருப்பேரை என்னுந் திருப்பதியில் **நாராயண தீட்சிதர்** என்னும் புலவரொருவர் இருந்தார். அவர் தம் வாழ்க்கைக்கு வேண்டுமளவு நிலம் பொருள் முதலியவற்றை உடையவர். ஓராண்டில் இயல்பாக நேர்ந்த சில காரணங்களால், நாராயண தீட்சிதர் முதலானோர் சிலர் அரசிறையைக் கொடுக்க இயலாதிருந்தனர். வரிவசூல்அதிகாரி அவர்களெல்லாரையும் கொண்டுபோய்த் திருநெல்வேலியில் சிறையிட்டார். அவர்கள் அவ்வாண்டில் நேர்ந்த இடையூறுகளை எடுத்துரைத்து, இயன்ற காலத்தில் வரியைக் கொடுத்துவிடுவதாக மன்றாடியும், அவ் வதிகாரி அவர்கள்சொல்லைச் செவியேற்றுக்கொள்ளவில்லை.

அதனால், நாராயண தீட்சிதர் 'அகதிக்குத் தெய்வமே துணை' என்னும் நீதியை உட்கொண்டு, தம் திருப்பதித் திருமாலை இறைஞ்சினர்; நாள்தோறும் சில செய்யுட்களைப் பாடித் துதித்தார். இவ்வாறு ஒருமாதம் கழிந்தது.

பின்னர், பிள்ளையன் தமிழ்ப்பற்று மிக்கவர் என்பதைத் தீட்சிதர் அறிந்தவராதலின் "நாம், காவலில் இருப்பதை அவருக்குத் தெரிவித்தால், நன்மை கிடைக்கும். ஆயின், அவரிடம் போய்ச் சொல்லுபவர் யாரும் இல்லையே! என் செய்வோம்!" என்று வருந்தினர்; உடனே அக் கருத்தை அமைத்து ஒருபாட்டைப் பாடித் திருமாலை வேண்டினர்; நாள்தோறும் தாம் இயற்றிய பாட்டுக்களை உரக்கப் பாடுவார்; பழைய தோத்திரப்பாக்களையும் பாடித் துதிப்பார்.

புலவர் இவ்வாறு இந்நிலையில் வருந்திக்கொண்டிருக்கையில் ஒருநாள், 'வடமலை யப்பன் முன்னே வில்வாரும் இல்லை' என்னும் அடியைப் படிக்கும்போது, அது சிறைக்கூடக் காவல்அதிகாரியின் காதில் விழுந்தது. அவர் "நம்முடைய அரசர்பெயர் இப் பாட்டில் வருகின்றதே! இவர் தமிழ்ப்புலவர் போலும்!" என்று எண்ணி, இச்செய்தியைப் பிள்ளையனுக்கு அறிவித்தார்.

உடனே, பிள்ளையன் புலவர் துயரத்தைப் பொறுக்கமுடியாமல், தம் குதிரைமீது இவர்ந்து காவற்கூடத்தை நோக்கி விரைந்து சென்றார்; உள்ளே புகுந்தார். அங்குக் கண்ணுங் கண்ணீருமாய் உருகிப் பாடிக்கொண்டிருந்த புலவரைக் கண்டார். கண்டதும், பிள்ளையன்கண்ணில் நீர் வார்ந்தது; மனம் உருகிற்று. "அந்தோ! இப் புலவர் சிறையில் வருந்துவதை முன்னரே அறியாமற் போனேமே!" என்று அவர் மிக

வருந்தினர்; பின்னர் புலவரை அணுகி அவர்வரலாற்றை, அறிந்தார்.

பிள்ளையன், புலவரையும் அவரைச் சார்ந்த பிறரையும் ஊர்திகளில் அமர்வித்து, தம் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அங்குப் பலவித உபசாரங்களைச் செய்து, அவர்களுக்கு ஆறுதல்கூறி, அவர்கள்-துன்பத்தைப் போக்கினர்; அவர்கள் இறுக்கவேண்டிய நிலவரியைத் தள்ளுபடிசெய்து, புலவர்நிலங்களை இறை-யிலி ஆக்கினர்.

அதன்பின் பிள்ளையன் அப் புலவர் பாடிய செய்யுட்-களைக்கேட்டு மனங்கரைந்தார்; அச் செய்யுட்களால் புலவர்பட்ட துன்பங்களை அறிந்து உள்ளம் வருந்தி, தம் ஆட்சியில் நேர்ந்த பிழையைப் பொறுக்கும்படி புலவரை வேண்டினர். புலவரும் பிறரும், பிள்ளையனது தமிழ்ப்-பற்றையும் அவர் புலவர்பால் வைத்திருக்கும் நன்-மதிப்பினையும் புகழ்ந்துகூறி, அவரிடம் விடைபெற்றுத் தம் ஊருக்குச் சென்றனர்.

புலவர் நாராயணர் சிறையில் பாடிய நூல் **குழைக்-காதர் பாமாலை** என்னும் பெயருடன் பலராலும் போற்றிப் படிக்கப்பட்டுவருகின்றது.

அருஞ்சொற்பொருள்

வழு - குற்றம்.
நல்கு - கொடு.
புலமை - அறிவு.
திருப்பதி - க்ஷேத்திரம்.
தீட்சிதர் - யாகம் செய்த அந்தணர்.
அரசிறை - நிலவரி; வாய்தாப் பணம்.
மன்றாடினர் - சபையில் வேண்டிக்கொண்டனர்.
அகதி - கதியில்லாதவன்.
விள்வார் - கூறுவார்.
இவர்ந்து - ஏறி.
வார்ந்தது - வடிந்தது.
ஊர்தி - வாகனம்.
இறுக்க - செலுத்த, கொடுக்க.
இறையிலி - வரி இல்லாத நிலம்.

பயிற்சி

1. நாயக்கர் வடமலையப்பருக்குச் செய்த சிறப்பைக் கூறுக.
2. பிள்ளையனின் குணச்சிறப்புக்கள் யாவை?
3. நாராயண தீட்சிதர் ஏன் காவலில் வைக்கப்பட்டார்?
4. புலவர்துயரத்தை ஐயன் அறிந்தது யாங்ஙனம்?
5. பிள்ளையன் புலவரை ஆதரிப்பவர் என்பதை மெய்ப்பிக்க.
6. பின்வருஞ் சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைக்க: சிறப்புப்பெயர், நன்மதிப்பு, திருப்பணி, அரசிறை, மன்றாடு, உட்கொள், நல்கு.

---

13. காசா பெரிது?

புதன்கிழமை இரவு ஒன்பதுமணி இருக்கும். ஊர் அடங்கிவிட்டது. **நாகராஜன்** தனியாய்க் குளத்தங்கரைக்குச் சென்று அங்கிருந்த அரசமரத்தின் அடியில் தலைகுனிந்தவண்ணமாய் இருந்து, ஏதோ எண்ணிக்கொண்டிருந்தான். சில நாழிகைக்கெல்லாம் ஒரு பெண் மெல்ல நடந்துவந்து, நாகராஜன்முன் நின்றாள். அவன் தலைநிமிர்ந்து பார்த்ததும் திடுக்கிட்டுப்போய்விட்டான்; "என்ன காமு, இவ் வேளையில் இங்கே தனித்து வரலாமா?" என்றான்.

காமாட்சி, "தாங்கள் இருக்குமிடம் தனியிட மாகுமா? மூன்று மாதமாய் என் மனம் படும் பாடு யாருக்குத் தெரியும்? உங்கள்பெற்றோர் என்ன செய்தாலும், நீங்கள் என்னைக் கைவிடமாட்டீர்கள் என்று நம்பிக் காலங்கழித்தேன். அந்த எண்ணத்தில் இடிவிழுந்தது! வேலியே பயிரை அழிக்கலாமா?" என்றாள்.

நாகராஜன் ஒன்றும் பேசவில்லை. "அப்படியானால் நாளைக்குப் போகத்தானே போகிறீர்கள்?" என்றாள் காமாட்சி. "ஆமாம்" என்று நாகராஜன்

சொன்னபொழுது, காமாட்சிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. உடல் 'கிடுகிடு' என்று நடுங்கிற்று ; கண்ணீர் அருவிபோலப் பெருகிற்று.

காமா :—சரி, நீங்களும் அடியேனைக் கைவிட்டுவிட்டீர்களா?

நாக :—காமு, உன்னை ஒருநாளும் கைவிடேன். பெற்றோர்சொல்லைத் தட்டாமல் புறப்படுகின்றேன். ஆனால், நீ கவலைப்படாதே.

காமா :—நீங்கள் மறுவிவாகம் பண்ணிக்கொள்கிறது! நான் கவலைப்படாமல் இருக்கிறது! என்னை ஒருநாளும் கைவிடமாட்டீர்கள்! ஆனால் பெற்றோர்சொல்லையும் தட்டமாட்டீர்கள்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. என் கதியைக் கருதி, விதியைத்தான் நொந்துகொள்ளவேண்டும்.

அப்பொழுதும் நாகராஜன் தன் உண்மைக்கருத்தை வெளியிடவில்லை. உடனே காமாட்சி,

"இனி நான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை. மன்னார்கோயிலுக்குப் போவதில்லை என்று சொல்லமாட்டேன் என்கிறீர்கள். நீங்களே கைவிட்டபிறகு, நான் யாருக்காக உயிரை வைத்துக்கொண்டிருப்பது? 'காமாட்சி என்று ஒருத்தி இருந்தாள். அவள் நம்மிடத்தில் அளவில்லாத அன்புவைத்திருந்தாள்; உயிர் விடும்பொழுதுகூட, நம்மையே நினைத்துக்கொண்டுதான் உயிர்விட்டாள்' என்று எப்பொழுதாவது நினைத்துக்கொள்ளுங்கள். அந்தப் பெண்ணையாவது நன்றாய் வைத்துக்கொள்ளுங்கள். இதுதான் நான் உங்களிடம் கடைசியாகக் கேட்டுக்கொள்வது" என்று கூறிக்கொண்டே, அவன்காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள்.

நாகராஜன் அவளைத் தூக்கி எடுத்து, "பைத்தியமே, அப்படி ஒன்றும் பண்ணிவிடாதே. நீ போய்விட்டால், என் உயிரும் போய்விடும். மழைத்தூற்றல் போடுகின்றது. வீட்டுக்குப் போகலாம், வா" என்று அவள்கையைப் பிடித்துக்கொண்டு எழுந்திருந்தான். இருவரும் வீட்டுக்கு ஏகினர்.

* * * *

கண்ணபுரம் என்பது ஒரு சிற்றூர். அங்குச் **சுந்தரர்** என்னும் வணிகர்ஒருவர் வாழ்ந்துவந்தார். **மீனாட்சி** என்பவள் அவர்மனைவி. அவர்களுக்குக் **காமாட்சி** என்னும் ஒரே மகள் இருந்தாள். அவள் தங்கப்பதுமை போன்றவள். அவள்குரல் குயிலின் குரலைவிட இனியது. அவள்குணம் அனைவருடைய மனத்தையும் கவர்ந்தது.

காமாட்சி இளமையிலேயே யாரிடத்திலும் அன்பா யிருப்பாள்; பிச்சைக்காரருக்குக் கைநிறைய அரிசி கொண்டுவந்து போடுவாள். அவர்கள் குருடராய்

இருப்பின், அவள்கண்ணில் தாரைதாரையாய்க் கண்ணீர் பெருகும். அவள் அவர்களுக்கு அதிக அரிசியை இடுவாள். இவ்வாறு அவளழகுடன் அன்பும் அருளும் வளர்ந்தன.

சுந்தரர் அவ்வூர் மணியக்காரராகிய சாத்தனுரின் மகன் நாகராஜனுக்குத் தம் மகளை மணஞ்செய்வித்தார். அப்போது அவளுக்கு வயது பன்னிரண்டு. திருமணம் மிகச் சிறப்பாய் நடந்தது. மணப்பந்தலில் காமாட்சியின் பெற்றோர் அவளுக்கு நிறையச் சீர்செய்தனர். அதனல், மணமகனின் பெற்றோர் மிக மகிழ்ந்தனர். கலியாணத்துக்குப்பின்பு காமரட்சியின் மாமி வள்ளி தன் மருமகளை அடிக்கடி தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போவாள்; அன்போடு அவளுக்குத் தலைபின்னிப் பூச்சூட்டுவாள். காமாட்சியின் கணவனும் அவளை மிக நேசித்தான்.

இவ்வாறு மூன்று ஆண்டுகள் கடந்தன. செல்வம் நிலையற்றதன்றோ! சுந்தரருக்கு வாணிகத்தில் மிக்க நஷ்டம் வந்துவிட்டது. அவர் தமக்கிருந்த பெருங்கடனைத் தம் வீடு வாசல், தோட்டம் துரவு, மாடு கன்று எல்லாவற்றையும் விற்று அடைத்தார். சுந்தரர் வறிஞரானதை அறிந்த சாத்தனுர் அவர்வீட்டுக்குப் போவதில்லை; வழியில் கண்டாலும் கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை. வள்ளியும் மீனுட்சியின் வீட்டுக்குச் செல்வதை நிறுத்திவிட்டாள். அதுமட்டுமன்று. அவள் தன் மருமகளோடும் பேசுவதில்லை. அதுதான் பெண்ணின் பெற்றோரை மிக வருத்திற்று.

சில நாட்களுக்குப் பின்பு, 'சாத்தனுரும் வள்ளியும் காமாட்சியை வாழாதுவைத்துவிட்டு, தம் மகனுக்கு வேறொரு மணஞ்செய்விக்க நிச்சயித்துவிட்டனர்' என்று ஒரு வதந்தி பிறந்தது. அப்பொழுது

காமாட்சியும் அவள்பெற்றோரும் அடைந்த துன்பத்தை யாரால் எடுத்துரைக்க முடியும்?

பட்டினத்தில் படிக்கச் சென்றிருந்த நாகராஜன் விடுமுறைக்குத் தன் ஊருக்கு வந்துசேர்ந்தான். அவன்மனத்தையும் பெற்றோர் கலைத்துவிட்டனர்போல்தோன்றிற்று. ஊருக்கு வந்த அன்று அவன் தன் மனைவியின் வீட்டுக்குச் சென்று, அவள்பெற்றோரை வணங்கி வந்தான்; அவ்வளவுதான்; பின்பு அப்பக்கம் திரும்பவே இல்லை. அவன்முகம் பொலிவற்று இருந்தது.

தை பிறந்தது. மறைவாய் இருந்த மணப்பேச்சு வெளிப்படையாயிற்று. மன்னார்கோயிலில் பெருஞ்செல்வர் ஒருவருக்கு இரண்டே பெண்கள் இருந்தனர். அவரிடம் நாலு லக்ஷம் ரூபாய் இருந்தது. அப் பெண்களுள் ஒருத்தியை நாகராஜனுக்கு மணஞ்செய்வித்தால், தமக்கு இரண்டு லக்ஷம் ரூபாய் சேரும் என்று அவன்பெற்றோர் கருதினர். ஆனால், அவன்கருத்து இன்னதென்று யாருக்கும் தெரியவில்லை. கடைசியாகத் திருமணநாளும் குறித்தாய்விட்டது. பெண்வீட்டார் கண்ணபுரத்துக்கு வந்து கலியாணம் சொல்லிவிட்டுச் சென்றனர்.

நாகராஜனுடைய நண்பன் **கோவிந்தன்** அதனை அறிந்து அவனை அடைந்து, அவன்கருத்தைத் தனக்குத் தெரிவிக்குமாறு அவனை வேண்டினான். "கோவிந்தா, காசாசை பிடித்த பிசாசு என்று என்னை எண்ணிவிட்டாயா? எனக்குக் **காதலே பெரிது. காசு பெரிதன்று.** உனக்கு உண்மையை உரைக்கின்றேன். நான் எவ்வளவு மறுத்தும் என் பெற்றோர் பிடிவாதமாயிருக்கின்றனர். இனி, அவர்களை அவமானப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. நான் மன்னார்கோயிலுக்-

குப்போவேன்; மணப்பந்தலிலும் உட்காருவேன். மணமகள்கழுத்தில் மாங்கலியத்தைக் கட்டுவது நான்தானே? "முடியாது" என்று அச்சமயத்தில் உறுதியாய் மறுத்துவிடுவேன். காமாட்சியைத் தொட்ட கையினுல் இப்பிறவியில் இன்னெரு பெண்ணைத் தொடுவேனு?" என்ருன் நாகராஜன்.

கோவி: இருக்கட்டும். விவாகத்துக்கென்று நீ போகுங்காலத்து, உண்மையை உணராத காமாட்சி, அவள்பெற்றேர் இவர்கள் மனம் எப்படியிருக்கும் என்பதை நீ சிறிதேனும் சிந்தித்துப்பார்த்தாயா?

நாக: அவர்கள் என்னை வெறுத்து வருந்திக்கொண்டிருக்குங்காலத்தில் திடீரென்று ஓடிவந்து, மாமியாரையும் மாமனுரையும் வணங்கி, "இனிக் கவலைப்படாதீர்கள். உங்கள் பெண்ணை ஒருநாளும் கைவிடேன்" என்று நான் சொல்லும்பொழுது, அவர்களுக்கு எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும்! வெள்ளிக்கிழமை மணநாள். அன்று மாலையே இங்குத் திரும்பி வந்துவிடுவேன்.

கோவிந்தன்: நாகராஜா, "எனக்கு இது சரியென்று தோன்றவில்லை" என்று சொல்லிச் சென்ருன்.

வியாழக்கிழமை மணமகன்வீட்டார் மன்னுர்கோயிலுக்குப் புறப்படவேண்டும்; அன்று ஊரில் இருந்து அக் காட்சியைக் கண்ணுல் காண மனமில்லாத காமாட்சியின் பெற்றேர் முதல்நாட் காலையில் மதுரைக்குச் சென்றுவிட்டனர். காமாட்சிக்குத் துணை அவள் அத்தை ஒருத்தியே.

அன்று (புதன்கிழமை) இரவில் நிகழ்ந்த நிகழ்ச்சியே இக் கதையின் தொடக்கத்தில் குறிக்கப்பட்டது. மறுநாள் பொழுது விடிந்தது. வழக்கம்போல், விடியற்காலையில் பெண்கள் குளத்துக்குக்

குளிக்கச் சென்றனர். "என்னடி அம்மா! அங்கே ஒரு புடைவை மிதக்கிறதே!" என்று ஒருத்தி அலறினள். குளத்தங்கரையில் கும்பல் கூடிவிட்டது. ஒருவன் நீந்திச் சென்று, ஒரு பெண்ணின் உடலைக் கரைசேர்த்-தான். அது காமாட்சியின் உடலே!

இத் துக்கச்செய்தி காட்டுத்தீயைப் போல ஊரெல்லாம் பரவிவிட்டது; நாகராஜனின் காதிலும் விழுந்தது. அவன் ஓடிவந்து, 'காமு, காமு, என்ன காரியம் பண்ணிவிட்டாய்!" என்று கதறிக்கொண்டே வேரற்ற மரம்போல வீழ்ந்தான்; நெடுநேரம் மூர்ச்சை-யாய்க் கிடந்தான். பின்பு கண்ணை விழித்து, "என் எண்ணம் அத்தனையும் பாழாக்கிவிட்டுப் பறந்தோடிப் போய்விட்டாயே! காமு, கோவிந்தன் சொன்னது சரியாய்ப் போய்விட்டதே! நேற்று நான் உண்மையை உரைத்திருந்தால், இக் கதி நமக்கு இன்று வந்திருக்காதே! பெண்ணின் மனம் மல்லிகைமலரினும் மெல்லியது என்பதை மறந்தேனே! உன்னைக் கொலை-செய்த பாதகன் நானே! காமு, நீயோ பொறுமையின்றி என்னைக் கைவிட்டுப் போய்விட்டாய்! இனி, மற்றொரு பெண்ணை நான் மணப்பேனோ? இப்பொழுதே துறவி யாகின்றேன்" என்று கூறினன்; காவியுடை தரித்துப் புறப்பட்டுப் போய்விட்டான்.

அருஞ்சொற்பொருள்

காசு - செல்வம், பொருள்.
ஊர் அடங்குதல் - ஊரார் உறங்குதல்.
அருவி - நீர்வீழ்ச்சி.
பதுமை - பொம்மை.
சீர் - சீதன வரிசை.
மருமகள் - மகன்மனைவி.
துரவு - பாசனத்திற்கு உதவும் பெருங்கிணறு.
விடுமுறை - 'லீவு'.
பொலிவு - அழகு.
கும்பல் - கூட்டம்
பாதகன் - பாவி.

பயிற்சி

1. காமாட்சியின் அன்பும் அருளும் எவ்வாறு விளங்கும்?
2. நாகராஜனுக்கு மறுமணம் பேசக் காரணம் என்ன?
3. "காசு பெரிதன்று"—சந்தர்ப்பங் கூறுக.
4. நாகராஜனின் உண்மைக்கருத்து யாது?
5. காமாட்சி இறுதியில் கணவனிடம் கூறியது யாது?
6. இக் கதையால் நாம் அறியும் நீதியை விளக்குக.
7. வாக்கியத்தில் அமைக்க: நாள் வை, சீர்செய், கடனடை, கைவிடு, கவலைப்படு, அவமானப்படுத்து, பிடிவாதமாயிரு.

---

14. மார்க்கோ போலோ

மக்களின் வாழ்க்கைவரலாற்றை அறிதற்குப் பல கருவிகள் உள. அவை பழைய இலக்கியம், சரித்திராசிரியர் எழுதிவைத்த குறிப்பு, கல்வெட்டு, செப்புப்பட்டயம், காணயம், யாத்திரிகரின் பிரயாணக்குறிப்பு முதலியவை ஆகும். யாத்திரிகர், நாடு கடல் மலை ஆறு முதலியவற்றைக் காணும் அவா, மதம், தூது, வாணிகம் முதலியவை காரணமாக உலகத்திலுள்ள பல பாகங்களுக்கும் சென்று தாம் கண்டு கேட்ட செய்திகளைக் குறித்துவைத்து, பிற்காலத்துக்குப் பயன்படச் செய்துள்ளனர். இத்தகைய பெரியோர்களுள் **மார்க்கோ போலோ** ஒருவர்.

மார்க்கோ போலோ இத்தாலிய நாட்டிலுள்ள வெனிஸ் நகரத்தில் 1252-இல் பிறந்தார். அவர் தந்தையார் **நிக்கோலோ போலோ** என்னும் வணிகர். அவர் ஒருமுறை சீனவுக்குச் சென்று தம் ஊருக்குத் திரும்பி வந்து, இரண்டாம்முறை அங்கு ஏகியபோது, தம் மகனையும் உடன் அழைத்துச்சென்றார். மார்க்கோவுக்கு அப்பொழுது வயது பத்தொன்பது. அவர்கள் மூன்றரை ஆண்டு தரைவழியாகப் பிரயாணம் செய்தனர்; சிற்சில

இடங்களில் உணவு கிடைக்காமல் வருந்தி, கடத்தற்கரிய பாலைவனங்களைக் கடந்து சென்றனர். பனியுறைந்த பகுதிகளில் அப் பனி உருகி ஓடிய பின்னரே, அவற்றைக்

கடந்துசெல்ல முடியும். கரைபுரண்டு வெள்ளம் பெருக்கெடுத்தோடும் ஆறுகளில் நீர் வடிந்தபின்னரே அக்கரை செல்ல இயலும்.

இவ்வாறு இடைவழியில் பேரிடர்களுக்கு ஆளாகியும், அவற்றினுக்குச் சிறிதும் அஞ்சாது ஊக்கங் குன்றாமல் சென்று, அவர்கள் சீனநாட்டை அடைந்தனர். தார்த்தாரியர்தலைவன் **குப்ளேகான்** அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்தான்; மார்க்கோ போலோவுக்கு நாட்டின் ஒரு பகுதியை ஆளும் பெரு-

மையை அளித்தான். மார்க்கோ அம் மக்களின் பழக்க வழக்கங்களை அறிந்து குறித்துக்கொண்டார். அதற்கு-முன் எந்த ஐரோப்பியரும் காணாத ஸைபீரியா, கோபி பாலைவனம், திபெத் முதலிய இடங்களில் தங்கி அம் மொழிகளைக் கற்று, அம் மக்களுடன் பழகினார்.

ஐரோப்பியர் தம்மைப்போல் நாகரிகத்திலும் கல்வி-யறிவிலும் வாழ்க்கையிலும் சிறந்தவர் உலகில் வேறு எவரும் இலர் என்று இறுமாப்புக்கொண்டிருந்தனர். மார்க்கோ சீனநாட்டின் செல்வத்தையும் அழகையும் மக்களின் அறிவையும் நாகரிகவாழ்க்கையையும் கண்ட-பின்னர், அவரடைந்த வியப்புக்கு எல்லையில்லை.

இவ்வாறு ஏறத்தாழப் பதினேழு ஆண்டுகள் கழிந்தன. பின்னர், 1292-இல் அவர்கள் கடல்மார்க்க-மாகச் சுமத்திராவை அடைந்து, பிறகு பிரயாணஞ்-செய்து இலங்கைத்தீவிற்கும் தென்இந்தியாவின் சில பகுதிகளுக்கும் சென்று, அம் மக்களின் பழக்கவழக்கங்-களை நன்கு அறிந்துகொண்டனர்; அங்கிருந்து அரபிக்-கடல்வழியாகப் பாரசீக வளைகுடாவுக்குச் சென்று, தம் நாட்டுக்குத் திரும்பினர். ஆசியாக்கண்டம் முழுவதும் ஒரு தரைவழி கண்டுபிடித்து, அவ் வழிநெடுக உள்ள மக்களைப்பற்றி ஐரோப்பியருக்கு முதன்முதல் அறிவித்-தவர் மார்க்கோவே! அவர், தம் தரை கடற்செலவுகளில் அறிந்த அனைத்தையும், '**மார்க்கோ போலோவின் நூல்**' என்ற பெயரால் எழுதி வெளியிட்டார். அது பிற்கால ஐரோப்பியவணிகர் பலருக்குப் பேருதவியா யிருந்தது. மார்க்கோ 1324-இல் காலமானார். மார்க்கோ பதின்மூன்றும் நூற்றாண்டில்வாழ்ந்த நம் முன்னோரைப்-பற்றிக் குறித்துள்ள செய்திகளுள் சில வருமாறு:

'செய்லான்' (சிலோன்) தீவிற்கு மேற்கே கப்பலில் 60 மைல் சென்றால், 'மாபார்' (சோழமண்டலக் கடற்-

கரை) என்னும் இந்தியாவின் ஒரு மாகாணத்தை அடையலாம். இங்கு மன்னர் ஐவர் உளர். இவர்கள் உடன்பிறந்தோர். இந் நாடு இவ்வுலகத்தில் மிக்க அழகும் பெருமையும் வாய்ந்தது. இவ் வைவருள் முடி-மன்னர் ஒருவர் தெற்குப்பகுதியை ஆள்கின்றார். இவர் பெயர் 'சொண்டர் பண்டி தவர்' (Sonder Bandi Davar—சுந்தர பாண்டிய தேவர்) என்பது.

"அரசர் தம் இடையைச் சுற்றி ஒரு அழகிய மெல்லிய துணி கட்டியிருக்கின்றார்; நவரத்தினங்கள் இழைத்த கழுத்தணி ஒன்றும், 104 (108?) பெரு-முத்துக்களும் மாணிக்கங்களும் கோத்துக்கட்டிய பட்டு நூல் ஒன்றும் தரித்திருக்கின்றார். இவர் தினந்தோறும் காலையும் மாலையும், தாம் வணங்கும் விக்கிரகங்களை 104 முறை துதிப்பதற்காகவே அதனை அணிந்திருக்-கின்றார்; இவர்நாடு முத்து விளையும் நாடாகலின், கை-களில் விலையேறப்பெற்ற முத்துக்கள் வைத்துப் பதித்த மூன்று பொன்வளைகளையும், கால்களில் பொற்காப்புக்-களையும், கால்விரல்களில் மோதிரவளையங்களையும் அணிக்-துள்ளார். அரசருக்கு ஐந்நூறு மனைவிமார் உளர். எவ்வாறெனின், இவர் அழகிய பெண் ஒருத்தியைப்-பற்றிச் செவியுறின், உடனே அவளை மணப்பார்.

"அரசனொருவன் இறந்தபின் அவன் வைத்த நிதி-யைத் தொடுவதற்கு அவன்மக்கள் அஞ்சுவர். ஏனெ-னின், "எம் தந்தை இந் நிதியை ஈட்டினார். யாமும் அவ்வாறே செய்ய வேண்டும்" என்று அவர்கள் கூறுவர். அதனால் நாட்டில் பெருநிதி பெருகிவந்தது.

"இந் நாட்டின் பெருஞ்செல்வம் குதிரைகள் வாங்கு-வதில் வீணாய் அழிக்கப்படுகின்றது. இம் மன்னர் ஆண்டு-தோறும் இரண்டாயிரம் பரிகளை வாங்க விரும்புகின்றார். அதைப்போலவே இவர்சகோதரர்களும் ஆசைப்படு-

கின்றனர். ஆனல், ஆண்டு முடிவதற்குள் நூறுகுதிரை-களைத் தவிர எஞ்சியவை இறந்துவிடுகின்றன. இந் நாட்டுமக்கள் குதிரைவளர்க்கும் முறையை அறியார். அன்றியும், இங்குக் குதிரைவைத்தியரும் இலர். குதிரை-வியாபாரிகள் அவ் வைத்தியர்களை இங்கு அழைத்து-வருவதில்லை; வருபவரையும் வாராமல் தடுப்பர். இன்றேல், அவர்கள் எவ்வாறு குதிரைகளை விற்றுக் கொள்ளை யடிக்க முடியும்!

"கொலைத்தண்டனை விதிக்கப்படுபவன் தன்னைத் தானே ஒரு கடவுளுக்குப் பலிகொடுப்பதாகச் சொல்-வான். அரசாங்கமும் அதற்கு இணங்கும். அவன் கொலைக்களத்துக்குச் சென்று தற்கொலை செய்து கொண்டபின்னர், அவன்மனைவியும் தன் கணவன் சிதைத்தீயில் வீழ்ந்து இறப்பாள். அப்படிப்பட்ட பெண்டிர் பலராலும் புகழப்படுவர்.

"இந் நாட்டுமக்கள் விக்கிரகவழிபாடு செய்வோர்; பசுவை வணங்குவர்; அதனைக் கொல்லார்; மாட்-டிறைச்சியை உண்ணர்; உணவு உண்ணும்போது, வலக்-கையையே உபயோகிப்பர்; இடக்கையால் ஒருபொழு-தும் உணவைத் தொடார். உயர்ந்த காரியங்க-ளெல்லாம் வலக்கையாலேயே செய்யப்படும். கால்கழுவுதல் முதலிய தொழிலைச் செய்யவே இடக்கை பயன்படும். ஒவ்வொருவருக்கும் பருகுவதற்கு என்று தனித்தனிப் பாத்திரம் உண்டு. ஒருவர் மற்றொருவர் பாத்திரத்தால் பருகார். அன்றியும், பாத்திரத்தை உயரத் தூக்கி, நீரை வாயில் பெய்துகொள்வரேயன்றி, எச்சிலாக்கி உறிஞ்சிக் குடிப்பதில்லை. வீட்டுக்கு அயலான் ஒருவன் வரின், அவனிடத்தில் பாத்திரம் இல்லையாயின், அவன் தன் கைகளில் நீரை ஏந்திப் பருகவேண்டும்.

" இவர்கள் வீடுமுழுவதையும் பசுவின் சாணத்தால் மெழுகும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். அரசன், பிரபுக்கள், உயர்ந்தோர், தாழ்ந்தோர் அனைவரும் தரையின்மேல் உட்கார்ந்திருப்பர். " நாம் எல்லாரும் மண்ணிலிருந்து தோன்றி மண்ணையே அடைவதனால், அதன்மேலேயே அமரவேண்டும்" என்பது அவர் கூறுங் காரணம். இந் நாட்டில் ஒவ்வோர் ஆணும் பெண்ணும் இருமுறை நீராடுவர். இந் நாடு மிக வெப்பமுள்ளது. இந் நாட்டில் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மூன்று மாதங்களே மழை பெய்யும். இம் மழை யின்றேல், இங்கு ஒருவரும் வாழமுடியாது.

" உலகத்தில் எந் நாட்டுமக்களும் மேற்கொள்ளாத சகுனமுறைகளை இங்குக் காணலாம். இன்ன பறவையும் விலங்கும் வந்தால் நற்சகுனம் என்றும், இன்னவை வரின் தீச்சகுனம் என்றும் அவர்கள் அறிந்துகொள்வர். ஒருவன் தெருவில் போய்க்கொண்டிருக்கும்பொழுது, வேறொருவன் தும்மினால், அவன் அதை நற்சகுனம் என்று கருதின், மேலும் செல்வான்; இன்றேல், சிறிது நேரம் தங்கிச் செல்வான்; செல்லாமல் வீடுதிரும்புவதும் உண்டு. ஒரு குழந்தை பிறந்தவுடன், அது பிறந்த வருஷம் மாதம் தேதி பொழுது அனைத்தையும் குறித்துவைப்பர். ஏனெனின், அவர்கள் எதைச் செய்யினும், ஜோஸியம் பார்க்காமல் செய்வதில்லை.

" இந்தியா முழுவதிலும் குயில் ஒன்றைத் தவிர, ஏனைப் பறவைகளும் விலங்குகளும் நம் நாட்டினின்றும் மாறுபடுகின்றன. உதாரணமாக, இறகுகள் இன்றி இரவில் பறக்கும் வௌவால் என்னும் பறவை இங்குக் காணப்படுகின்றது. அவை பருந்துகளைப்போல் பெரியன வாய் இருக்கின்றன."

போலோவைப் போல நம் முன்னோரின் வாழ்க்கை-வரலாறுகளை இன்னும் பலர் எழுதிவைத்துள்ளனர். அவற்றையும் பிறநாட்டுச் செய்திகளையும் படித்து மகிழ்வோமாக.

அருஞ்சொற்பொருள்

செப்புப்பட்டயம் - தாமிரத்தகட்டில் எழுதிவைத்தது.
அக்கரை - எதிர்க்கரை.
இடர் - துன்பம்.
இறுமாப்பு - கர்வம்.
ஏறத்தாழ - சுமார்.
துதி - ஸ்தோத்திரம்செய்.
நிதி - பெருஞ்செல்வம்.
பரி - குதிரை.
பலி - தேவர்க்கு இடும் உணவு.
விக்கிரகவழிபாடு - கடவுளைச் சிலையுருவத்தில் வணங்குதல்.
நீராடு - குளி.
செலவு - பிரயாணம்.

பயிற்சி

1. ஒருநாட்டின் வரலாற்றை அறிவது எவ்வாறு?
2. மார்க்கோ போலோ சீனவுக்குச் செல்லும் வழியில் அடைந்த துன்பங்கள் யாவை?
3. மார்க்கோ போலோ தென்னிந்தியமன்னனைப்பற்றி எழுதிவைத்துள்ளவை யாவை?
4. பதின்மூன்றும் நூற்றாண்டில் தமிழ்மக்கள் உணவுண்ணும் முறையைப்பற்றிக் கூறுக.
5. அக்காலத்துத் தமிழரின் சில பழக்கவழக்கங்களைக் கூறுக.
6. வாக்கியத்தில் அமைக்க: இடைவழி, வரவேற்றல், இறுமாப்பு, வளைகுடா, பாலைவனம், நிதி, எஞ்சியவை, தீச்சகுனம்.

15. பகைவர்க்கும் பரிந்திரங்கும் பரமன்

நன்மைசெய்வோருக்கு நன்மைசெய்வதும் தீமை-செய்வோருக்குத் தீமைசெய்வதும் உலகியற்கை. நன்மைசெய்வோர்க்கும் தீமைசெய்யுங் கயவரும் உளர்! ஆயின், தீமைசெய்வோர்க்கும் நன்மை செய்யும் பெருங்-குணம் கடவுட்டன்மை படைத்தவரிடமே காணப்படும். பகைவர்க்கும் பரிந்திரங்கவேண்டும் என்னும் பண்பினை உலகினுக்கு எடுத்துக்காட்டிய உத்தமர் இயேசுநாதர்.

இயேசு கிறிஸ்து ஒலிவமலைச் சாரலில் உள்ள கெத்ஸமனே என்னும் மலர்ச்சோலையில் தங்கியிருந்தார். அப்பொழுது யூதரின் ஏவலாட்கள் அங்குச் சென்று அவரைப் பிணித்துக்கொண்டு, ஜெரூஸலநகரத்-தில் உள்ள காய்பாஸின் எதிரில் நிறுத்தினர். அவ் யூதர்முதற்குரு, "வேதநூல்முறையை இகழ்ந்து பலர் உனக்குத் தொண்டு செய்யுமாறு நீ உபதேசித்ததை இங்கு உரை" என்றான். "அவற்றை யான் இரகசிய-மாக இசைத்ததில்லை. கேட்டோர் அனைவரும் அவ் வுப-தேசத்தைக் கூறுவர். அவர்களைக் கேளுங்கள்" என்றார் இயேசுநாதர். அதனைச் செவியுற்ற அசடன் ஒருவன், "எம் முதற்குருவுக்கு அளிக்கும் விடை இதுதானோ?" என்று சீறி, அவ் வள்ளலை அறைந்தான். அவர் அத் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டார்.

அங்கிருந்த யூதர் அனைவரும் அவரைக் குற்றஞ்-சாற்றிக் கொல்லும் வகையைச் சூழ்ந்தனர். தக்க சான்று ஒன்றும் இல்லையாக, காய்பாசு இயேசுநாதரை நோக்கி, "நீ பராபரனின் புதல்வனான கிறிஸ்துவோ? இறைவன்மேல் ஆணை. உண்மையை உரை" என்று

வஞ்சகமாக வினவினன். “கடவுள்மைந்தனுங் கிறிஸ்து நானே. என்னை அத் தந்தையின் வலப்பாகத்தில் காணலாம்” என்று அவர் விடையிறுத்தார். “சபையோரே, இத் தேவநிந்தையைக் கேட்டீரன்றோ! இதனைப் போன்ற குற்றமும் உளதோ! இதற்கேற்ற தண்டனையைத் தெளிவாகக் கூறுங்கள்” என்று அக் குருமகன் கூறினன். யூதர், நடுநிலை தவறி, “இவனை இப்பொழுதே கொன்றுவிடுதலே தக்க தண்டனை” என்று சிறிதும் கூசாது கூறினர். பின்னர், சிலர் அவர்திருமுகத்து உமிழ்ந்தனர்; சிலர் அடித்தனர்; சிலர் அவருடைய திருக்கண்களைப் பொத்தித் தலையில் குட்டினர்; சிலர் இகழ்ந்தனர். விடியுமட்டும் இறைவனின் திருமேனி நொந்தது; உள்ளம் துடித்தது.

பொழுது புலர்ந்ததும் பாதகர் சிலர் பரமனை இறுகப் பிணித்து அந் நகரவீதியில் நடத்திப் போயினர்; **பிலாத்து** என்னும் நகரஇறைவன்முன் நிறுத்தி, “இவன் கிறிஸ்துவாம்! இவன் பல கலகங்கள் விளைத்தான். ஆதலின், இவனுக்குக்கொடிய தண்டனை விதித்திடுக” என்று வெகுண்டு விளம்பி வேண்டினர்.

பிலாத்து உண்மையை உணர்ந்து உள்ளமுடைந்தான்; “நம்பனிடம் குற்றமொன்றும் இல்லாதிருக்க, எவ்வாறு தண்டிப்பது?” என்று ஏங்கினன். யூதரனைவரும் சினந்து, “**கலிலேய** நாடுமுதல் இந் நாடுவரை இவன் நம் குலமக்களுக்கு உபதேசித்துக்கொடுங்கலகத்தினை விளைத்தான். இவன் அரசருக்கு முழுப்பகை” என்றனர். “அவ்வாறாயின், அவ் வரசர் இந் நகரத்துள் இருக்கின்றார். அவரை அடைந்து இவன்பிழையைக் கூறுக” என்றான் பிலாத்து. அவர்கள் அவ்வாறே செய்தனர். **கலிலேய மன்னவர்** “இவர்பால் கொல்லப்படுதற்குரிய குற்றமொன்றனையும் காணேன். இதனைப்

பிலாத்திடம் கூறுமின்" என்று கூறி, யூதரை விடுத்தார்.

பிலாத்து நயமொழிகளால் யூதரைத் திருத்தவும், இயேசுவுக்கு விடுதலை அளிக்கவும் முயன்றான். அவை



பயனற்றுப் போயின. இறுதியில் "சிலுவையில் அறை; சிலுவையில் அறை" என்ற தீச்சொல் செவியில் தைத்தலான், பிலாத்து, "உம் உரையைக் குறிக்கொண்டு பிழை எதுவும் இல்லாத இவனுக்கு மரணதண்டனை விதிக்கின்றேன். இப் பழி என்னைச் சாராது" என்று யூதர்முன் வருந்திக் கூறினான். அதனைச் செவியுற்ற கொடிய யூதர் களித்துத் துள்ளினர்.

சேவகப்பதடிகள் பலர் ஒன்றுகூடி இரத்தம் பீறிடு-மாறு இயேசுநாதருக்கு முள்முடியைச் சூட்டி, 'அரசே!'

என்று அழைத்து நகையாடினர்; தலையில் அடித்தனர்; காறி உமிழ்ந்தனர்; வைதனர். பரமனின் செந்தாமரை-முகம் இரத்தத்தால் மறையுண்டது; திருமேனி துடித்-தது; நொந்த புண்ணில் எரி நுழைந்ததுபோல, நிந்தனைமொழிகள் செவியில் நிறைந்தன. ஆயினும், இயேசுநாதரோ பகைவர் வருந்த ஒருமொழியையும் பகர்ந்திலர்! என்னே அவர்பெருமை!

ஏவலாட்கள் அவர்தலையில் சிலுவையைச் சுமத்தி, கொலைக்களத்துக்குக் கொண்டுசென்றனர். கொலைத்-தண்டனைபெற்ற திருடர் இருவரோடு இயேசுவும் சிலுவையைச் சுமந்து சென்றார். அவர் கைகளும் கால்களும் சோர்ந்தன; உணவும் நீரும் இன்றி நாக்கு உலர்ந்தது; கண்கள் ஒளியை இழந்தன; காதுகள் அடைத்தன. ஜெருஸல வீதிவழியே இயேசுநாதர் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்றார்.

அத் துன்பத்தைக் கண்ட நகரமக்கள் மனம் கலங்கிக் கண்ணீர் உகுத்தனர். பெண்டிர் சிலர், "கடவு-ளருளைப்பெற்ற கன்னிமேரியின் குமாரனுக்கோ இக் கதி நேர்ந்தது!" என்று வாய்விட்டு அழுதுகொண்டே வீதியின் இருசிறகிலும் நெருங்கி நின்று, தீப்பற்றிய பூங்கொடிபோல் வாடிநின்றனர்; "அழிவில்லாத அறமும் அழிந்ததோ!" என்றும், "இறைவன் இப் பாவிகளை இன்னும் அழிக்கவில்லையே!" என்றும், "தன் மைந்தன் மரிக்கின், மேரி உயிர்வாழ்வளோ?" என்றும், "இறைவனது சினத்தால் இனி மூவுலகும் ஒரு நொடியில் முடிந்துவிடும்" என்றும் கூறிக்கொண்டே பெண்கள் பரமனைப் பின்தொடர்ந்து சென்றனர். அவர் நன்மொழி கூறி அவர்களைத் தேற்றினர். அப்பொழுது கொலைஞர், அங்கு வந்த **ஸைமன்** என்னும் வழிப்போக்-

கனைச் சிலுவையைச் சுமந்து வரச்செய்து, உத்தமரைக் கொலைக்களத்துக்குக் கொண்டு சென்றனர்.

இனி உரைத்தற்கு யாது உளது! கொலைஞர் நிலத்தைத்தோண்டி, நீண்ட சிலுவையைத் தூக்கி யெடுத்து நிறுத்தி, இயேசுவின் திருமேனியை அச் சிலுவையோடு சேர்த்து, செங்கைகளிலும் சேவடிகளிலும் இருப்பாணி அறைந்தனர்! இருபுறத்தும் திருடர் இருவரையும் சிலுவையில் அறைந்தனர்! பரமன் தம் திருமேனி சிதைக்கப்பட்டு மிக வருந்தும் பொழுதும் அப் பகைவரை வெறுத்திலர். "இறைவா, இவர்கள் குற்றமில்லாதஎன்னைத் துன்புறுத்துகின்றனர்.

இது இவர்கள் அறியாது செய்யும் பிழை. இதற்காக இவர்களை நரகத்தில் ஆழ்த்தாமல், மன்னித்தருள்க" என்று பரமன் பகைவர்க்கும் பரிந்திரங்கி ஆண்டவனை வேண்டிக்கொண்டார்.

> 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயம் செய்துவிடல்';
> 'இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
> என்ன பயத்ததோ சால்பு'

என்னுந் தமிழ் மறைக்கும்,

'தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்(று)
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் - உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்'

என்னும் நாலடியார்க்கும் எடுத்துக்காட்டாய் இலங்குபவர் இயேசுநாதரன்றோ?

அருஞ்சொற்பொருள்

கயவர் - கீழ்மக்கள்.
பிணித்து - (கயிற்றால்(கட்டி.
இசைத்தது - கூறியது.
சூழ்ந்தனர் - ஆலோசித்தனர்.
பராபரன் - மேலான கடவுள்.
ஆணை - சத்தியம்.
நிந்தை - பழிமொழி.
உள்ளமுடைந்தான் - மனம் வருந்தினன்.
நைத்தலான் - வருத்தலால்.
பதடிகள் - கருக்காய் போன்றவர்; அறிவிலிகள்.
இருசிறகு - இருபக்கம்.
மரிக்கின் - இறப்பின்.
இரும்பு+ஆணி=இருப்பாணி.
ஒறுத்தல் - தண்டித்தல்.
நன்னயம் - உதவி.
நிரயம் - நரகம்.

பயிற்சி

1. இயேசுநாதர்மேல் கூறப்பட்ட குற்றம் யாது?
2. அவர்பொறுமை எங்கெங்கு விளங்குகின்றது?
3. பிலாத்து கூறிய தீர்ப்பு யாது?
4. பரமனை வீதியில் கண்டவர் என்ன என்ன கூறி வருந்தினர்?
5. சான்றோர்கடன் யாது? அதனை இயேசுநாதரின் வாழ்க்கையினால் மெய்ப்பிக்க.
6. இவற்றை உங்கள் சொந்த வாக்கியத்தில்அமைக்க: குற்றஞ் சாற்று, சூழ்ந்தனர், விடையிறு, நடுநிலைதவறு, நகையாடு, மன்னி, எடுத்துக்காட்டு.

16. வணிகன் வழக்கு

(நாடகம்)

[இத்தாலி நாட்டு வெனிஸ் நகரில் அந்தோனியோ என்னும் வணிகன், பேஸ்ஸானியோ என்னுந் தன் நண்பனுக்கு உதவிசெய்தற்காக, ஷைலக் என்னும் யூதனிடத்தில் மூவாயிரம் 'டக்கட்டு' கடன் வாங்கியிருந்தான். குறித்த தவணை தவறிவிட்டது. அதனால் யூதன் வழக்குத் தொடுத்தான். பெஸ்ஸானியோவின் மனைவி போர்ஷியாவே நீதிபதியாய் மாறுவேடம் பூண்டு அவ் வழக்கை விசாரித்தாள்.]

நீதிபதி : இவ் வழக்கு மிகப் புதிதாய் இருக்கின்றதே! ஆயினும், ஷைலக், உமது வழக்கை இந் நாட்டுச் சட்டம் தடுக்கமுடியாது. அந்தோனியோ, ஷைலக் செய்யுந் தீங்குக்கு நீர் ஆளாகப் போகின்றீர் அல்லவா!

அந் : ஆம் ஐயா, அவர் அவ்வாறு சொல்கின்றார்.

நீதி : அப்படியானால், யூதர் கருணைகாட்டவேண்டுவது அவசியமே. அவருடைய அருளை நாம் நாடுவோம்.

ஷைலக் : நான் ஏன் கருணை காட்டவேண்டும்? காரணத்தைக் கூறுங்கள்.

நீதி : கருணைக்குக் காரணம் வேண்டுமோ? யூதரே, அருள் எனப்படுவது அணைத்துப் பிடித்து ஒருவர்-உள்ளத்தில் ஒடுக்கும் பொருள் அன்று. கருணை-யால் பெய்யும் கருமேகம் போல, அருள் ஒருவர் மனத்தில் தானே பெருகவேண்டும். கொடுப்ப-வர்க்கும் கொள்பவர்க்கும் இன்பத்தை அளிப்பது அருள். அதற்கு இணையே இல்லை. உலகத்தை ஆள்வதும் அருள். பகைவரை வெல்வதும்

அருளே. அருளே ஆண்டவனின் உருவம். ஆத-லின், ஷைலக், நியாயத்தோடு அருளையும் கலந்து கொண்டால், நமக்கு இறைவனருள் கிட்டும்.

ஷை : சட்டப்படி நீதி வழங்க வேண்டுகின்றேன். நான் அவரிடம் எழுதிவாங்கினபடி அபராதத்தை அவர் கொடுத்துத்தீரவேண்டும்.

நீதி : கடனைத் திருப்பிக்கொடுத்தற்கு அவருக்குச் சக்தி இல்லையா ?

பெஸ்ஸானியோ : அந்தோனியோவுக்காக நான் அத் தொகையை இச் சபையில் கொடுக்கின்றேன்; இரண்டுமடங்கு வேண்டுமானாலும் கொடுக்கின் றேன் ; அதுவும் போதாதென்றால், பத்துமடங்கும் கொடுக்கின்றேன். அதிலும் அவருக்குத் திருப்தி யில்லை யென்றால், உம்முடைய அறிவுவலிமையால் சட்டத்தையே மாற்றி அமையுங்கள். பெரிய-தொரு நன்மையைச் செய்தற்கு, இச் சிறிய தவற்றைச் செய்து, இத் தீயவன் திமிரை அடக்குக.

நீதி : அப்படி ஒருபொழுதும் செய்யக்கூடாது. பழங்-காலந்தொட்டு வருகின்ற இச் சட்டத்தை மாற்று-தற்கு வெனிஸில் யாருக்கும் சக்தியில்லை. இதையே ஓர் உதாரணமாக வைத்துக்கொண்டு, நாட்டில் பல தவறுகள் வந்து மலிந்துவிடும். ஆதலால், என்னால் அவ்வாறு செய்யமுடியாது.

ஷை : ஆஹா ! தீர்ப்பளிக்க **டேனியலே** வந்து-விட்டார் ! என்ன அறிவு ! என்ன அறிவு !! ஐயா, உங்களுக்கு வணக்கம் பல.

நீதி : (யூதனிடமிருந்து பத்திரத்தைப் பெறுகின்றார்.) பத்திரத்தில் கண்ட தொகையைப்போல் மூன்று மடங்கு கொடுக்கின்றார்களே, வாங்கிக்கொள்ளக் கூடாதா ?

ஷை: அடாடா! நான் அவர்தசையைப் பெற வேண்டும் என்று சபதம் செய்திருக்கின்றேன். அதற்கு விரோதம் செய்யலாமா? வெனிஸ் நகரம் முழுவதும் எனக்கே கொடுத்துவிட்டாலும், அவ்வாறு செய்யேன்.

நீதி: (பத்திரத்தைப் பார்க்கின்றார்.) ஆமாம், இதில் கண்ட தவணையும் தவறிப்போய்விட்டதே! இதில் கண்டபடி அவ் வணிகரின் இதயத்திற்கு அருகில் ஒரு **பவுண்டு தசை**யை யூதர் அறுத்துக்கொள்வதற்குச் சட்டம் இடமளிக்கின்றது. ஆனால், யூதரே, இன்னும் உங்கள் மனம் இரங்கவில்லையா? மூன்றுமடங்கு பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இப் பத்திரத்தைக் கிழித்துவிடுகிறேன்.

ஷை: அதில் கண்டவாறு கொடுத்தபிறகே அதைக் கிழிக்கலாம். நீர் மிகச் சிறந்த நீதிபதியாகக் காண்கின்றீர்! சட்டக்கருத்துக்களை அழகாக எடுத்துக் கூறுகின்றீர்! நீர் நியாயத்திற்கே ஒரு தூண்போன்றவர்! அச் சட்டத்தின்மேல் ஆணைப்படி, தீர்ப்புக்கொடுக்க வேண்டுகின்றேன். என் கருத்தை மாற்ற எவராலும் முடியாது.

நீதி: அப்படியானால், அந்தோனியோ, சட்டப்படி அவர் அறுப்பதற்கு உன்னுடைய மார்பைத் திறந்து காட்டுக.

ஷை: ஆ! ஆ! இப்படிப்பட்ட நீதிபதியை நான் எங்கும் கண்டதில்லையே! இவர் ஆண்டில் சிறியவராகக் காணப்படினும், அறிவில் பெரியவராகவே இருக்கின்றார். இதயத்துக்கு மிக நெருங்கியுள்ள மார்பிடத்தை யல்லவா? அப்படித்தான் பத்திரம் கூறுகின்றது, இல்லையா?

நீதி: ஆமாம், அப்படித்தான் கூறுகின்றது. தசையை நிறுக்கத் தராசும் கல்லும் உளவோ?

ஷை: இதோ அவை தயாராய் இருக்கின்றன.

நீதி: ஷைலக், பக்கத்தில் உங்கள் செலவில் இரண-வைத்தியரொருவரை வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அறுத்தவுடன், இரத்தம் அதிகமாகப் பெருகி அவர் இறந்துவிடாமல் காப்பதற்கு, புண்ணைக் கட்டிச் சிகிச்சை செய்யவேண்டாமா?

ஷை: அப்படி ஒன்றும் பத்திரத்தில் இருப்பதாகத் தெரியவில்லையே!

நீதி: இல்லை. சரி, வணிகரே, வாரும். நீர் ஏதாவது சொல்ல விரும்புகிறீரா?

அந்: ஒன்றுமில்லை. நான் முழுதும் தயாராயிருக்-கின்றேன். (பெஸ்ஸானியோவைக் கட்டித் தழுவிக் கொள்கின்றான்.) போய் வருகின்றேன். உன்னால் எனக்குத் துக்கம் வந்துவிட்டதே என்று வருந்-தாதே. வழக்கத்திற்கு விரோதமாக இயற்கை என்னிடத்தில் மிக அன்புகாட்டுகின்றது; செல்-வத்தை இழந்தபிறகு வறுமைக்கடலில் விழுந்து தவிக்காமல், எனக்கு நன்மை செய்துவிட்டது. என் உயிர்நண்பன்பொருட்டுப் பட்ட கடனுக்காக என் உயிரையே கொடுப்பதைக்குறித்து, நான் மகிழ்-கின்றேன்; சிறிதும் வருந்தவில்லை.

பெஸ்: அந்தோனியோ, இந்தப் பேயிடமிருந்து உம்மை விடுவிக்க நான் எல்லாவற்றையும் இழப்ப-தற்குத் தயார்.

ஷை: நீதிபதியவர்களே, காலம் வீணாகக் கழி-கின்றதே. தீர்ப்புச்சொல்லும்படி உங்களை வேண்-டிக்கொள்கின்றேன்.

நீதி : நீர் அச் சதையை இவருடைய மார்பிலிருந்தே அறுத்து எடுத்துக்கொள்ளலாம். சட்டம் அதற்கு இடம் கொடுக்கின்றது. நீதிசபையும் அவ்வாறு செய்ய அனுமதிக்கின்றது.

ஷை : கல்விக்கடலா யிருக்கும் நீதிபதியவர்களே! ஆஹா! என்ன தீர்ப்பு! என்ன தீர்ப்பு!! அந்தோனியோ, வாருங்கள், வாருங்கள். (இவ்வாறு சொல்லிக்கொண்டே தீட்டிய கத்தியை எடுத்துக்கொண்டு அவ் வணிகனுக்கு எதிரே செல்கின்றான்.)

நீதி : ஐயா, சற்றுப் பொறுங்கள். இன்னும் சொல்ல வேண்டியது சிறிது இருக்கின்றது. இப் பத்திரம் இரத்தத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இங்கு 'ஒரு பவுண்டு தசை' என்ற சொற்களே காணப்படுகின்றன. பத்திரம் கூறும் பவுண்டு சதையை அறுத்து எடுத்துக்கொள்ளுங்கள். ஆனால், அவ்வாறு அறுக்கும்பொழுது, கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த இவ் வணிகரின் உடம்பிலிருந்து **ஒரு சொட்டு இரத்தமும் சிந்தலாகாது.**

ஷை : சட்டம் அவ்வாறு கூறுகின்றதா?

நீதி : (சட்டப்புத்தகத்தைத் திறந்து காட்டுகின்றார்.) நீங்களே சட்டத்தைப் படித்துப் பாருங்கள். ஏனென்றால், நீதியே வேண்டும் என்று நீங்கள் வற்புறுத்துகின்றீர்கள். நீங்கள் விரும்புதற்கு அதிகமாகவே நீதியைப் பெறுவீர்கள் என்று நான் உறுதி கூறுகின்றேன்.

ஷை : சரி..., அப்படியானால்..., மூன்று மடங்கு தொகையைக் கொடுத்துவிடுங்கள். அக் கிறிஸ்தவன் பிழைத்துப்போகட்டும்.

பெஸ் : இதோ இருக்கின்றது பணம்!

நீதி: உம்ம்... என்ன ஐயா அவசரம்? கொஞ்சம் பொறுங்கள். யூதர் நீதியையே பெற்றுக்கொள்ள-வேண்டும். அபராதப்பொருளைத் தவிர வேறு ஒன்றும் அவருக்குக் கிடையாது. ஆதலால், ஷைலக், சதையை அறுத்து எடுத்துக்கொள்ளும். **ஒரு துளி இரத்தமும் சிந்தக்கூடாது.** மேலும், **சரியாக ஒரு பவுண்டு சதையைவிட அதிக-மாகவோ குறைவாகவோ அறுக்கக்கூடாது.** ஒரு மயிரிழை கூடவோ குறைந்தோ காணப்பட்டா-லும், நீர் இறக்கவேண்டும். ஏன் இன்னும் தாமதம்? உமக்குரியதை எடுத்துக்கொள்ளும்.

ஷை: சுவாமீ, முதல்மட்டுமாவது கொடுங்கள். நான் போய்விடுகின்றேன்.

பெஸ்: இதோ, தயாராய் வைத்திருக்கின்றேன்.

நீதி: சும்மா இரும். சபையிலுள்ள அனைவரும் அறிய, முன்னமேயே அம் முதலை வாங்கிக்கொள்ள அவர் மறுத்துவிட்டாரே! அவருக்கு அவர்-பத்திரத்தின்படி நீதிதான் கிடைக்கும். வேறொன்-றும் கிடைக்காது.

ஷை: இனிமேல் நான் ஒன்றும் பேசப்போவதில்லை.
(வெளியில் செல்லத் திரும்புகிறான்.)

நீதி: பொறுங்கள், யூதரே! இவ்வூர்ச்சட்டம் இன்-னொன்றையும் விதிக்கின்றது. அயலான் ஒருவன் இந் நகரமக்களுள் ஒருவனை நேராகவோ மறை-முகமாகவோ கொல்ல முயன்றான் என்று நிரூபிக்கப் பட்டால், அத் தீயோனுடைய பொருள்களில் ஒரு பாதி எவன்உயிருக்கு உலைவைக்க முயன்றானோ அவனுக்கு அளிக்கப்படும்; மற்றைப்பாதி அரசாங்-கப் பொக்கிஷத்திற்குப் போய்ச்சேரும். மேலும் அக் குற்றவாளியைக் கொல்லுதற்கோ, உயிரோடு

விடுதற்கோ, இந் நகரமன்னவருக்கே உரிமையுண்டு. உம்முடைய நிலைமையும் அதுவே. பிரதிவாதியைக் கொல்லுதற்கு நீர் சூழ்ச்சிசெய்தீர் என்பது தெளிவு. அதனால், இந் நகரஇறைவர்காலில் விழுந்து, உயிர்ப்பிச்சை அளிக்குமாறு அவரைக் கெஞ்சிக்கேட்டுக்கொள்ளும்.

மன்னவர் : நீ என்னை வேண்டிக்கொள்வதற்குமுன்னமேயே உன்னை உயிரோடு விட்டுவிடுகின்றேன். உன் செல்வத்தில் பாதி அந்தோனியோவுக்கு உரியது. மற்றைப்பாதியை அபராதமாக அரசாங்கத்தார் எடுத்துக்கொள்வர்.

ஷைலக் : என்னை மன்னிக்கவேண்டாம். என்னைக் கொன்றுவிடுங்கள். என் செல்வமெல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக்கொண்டுவிட்டதனால், சவத்துக்கும் எனக்கும் என்ன வேற்றுமை? (தன்னை வெறுத்துக்கொண்டே வீட்டுக்குச் செல்கின்றான்.)

அருஞ்சொற்பொருள்

கருணை, அருள் - இரக்கம்.
இணை - ஈடு ; ஒப்பு.
மலிந்து - மிகுந்து.
டேனியல், ஒரு சிறந்த நீதிபதி.
தவணை - குறித்த காலம்.
ஆண்டு - வயசு.
கல் - நிறுக்கும் படிக்கல்.
கல்விக்கடல் - கல்வியறிவுமிக்கவன்.
பிரதிவாதி-வாதத்தில் எதிராளி.

பயிற்சி

1. அருளின் உயர்வு யாது?
2. பத்திரத்தில் கண்ட செய்தி என்ன?
3. அந்தோனியோவின் உயர்குணங்களைக் கூறுக.
4. நீதிபதியின் அறிவின் நுட்பம் எவ்வாறு விளங்குகின்றது?
5. சொந்த வாக்கியத்தில் அமைக்க : சபதம்செய், சிகிச்சை, சிந்துதல், அபராதம், பிரதிவாதி, முதல், உயிர்ப்பிச்சை.

17. அடியவர்க்கு எளியவன்

செந்தமிழ்நாடு என்று சிறப்பித்துச் சொல்லப்படும் பாண்டியநாட்டின் தலைநகரமாகிய மதுரையில் **அரிமர்த்தனன்** என்னும் பாண்டியன் அறநெறி தவறாது ஆண்டுவந்தான். அக்காலத்தில் அங்கு **வந்தி** என்னுங் கிழவி பிட்டு அவித்து விற்றுத் தன் வாழ்க்கையை நடத்திவந்தாள். அவள் சோமசுந்தரக்கடவுளிடம் என்றும் மாறா அன்புடையவள்: நாள்தோறும் சமைத்த பிட்டுணவை இறைவனுக்குப் படைத்தபின்னரே விற்கத் தொடங்குவாள்; தாயில்லார்க்கு அன்னைபோன்று உணவு அளிப்பாள்.

மதுரைநகர்க் கருகில் பாயும் வையையாற்றில் ஒருநாள் வெள்ளம் பெருக்கெடுத்து, கரைகளை உடைத்துக்கொண்டு நகரினுள் புகுவதாயிற்று. அந் நிலையில் நகரம் கடல்நடுவில் அகப்பட்டுச் சுழலுங் கலத்தைப் போல மறுகி நடுங்க, அரசன் அமைச்சரை அழைத்து உடைப்பினை அடைக்க ஆணையிட்டான். அமைச்சர் நகரமக்கட்குக் கரைகளை அளந்துவிட, அவரவர் தத்தம் பங்குகளை அடைக்கத் தொடங்கினர். வேலையாட்கள் கூடை, மண்வெட்டி, குதிரைமரம், பசுந்தழை, வைக்கோல் முதலியவற்றைச் சுமந்து சென்றனர்; குதிரைமரத்தை நிறுத்தி, பாம்பைப்போல் உருட்டிய வைக்கோற்பழுதையை அடியிற் கிடத்தி, அதன்மேல் பசுந்தழையை நிரப்பி, வெட்டிக்கொண்டுவந்த மண்ணை உடைப்பில் கொட்டி அடைப்பாராயினர்.

ஊரார் அனைவர்க்கும் கூலியாட்கள் கிடைக்கவந்திக்கு ஆள் ஒருவரும் கிடைக்கவில்லை. அவள் மிக

வருந்திச்சோமசுந்தரக்கடவுளைத் துதித்து, "இதுவரை இடும்பை என்பது எள்ளளவும் இல்லாது, 'இரவி எங்கு எழுந்தால் எனக்கு என்ன?' என்று கவலையற்று இருந்தேன். பாண்டியன்ஆணையால் இன்று எனக்கு ஓர் இடையூறு வந்துவிட்டது. என் செய்வேன்! மக்கள், சுற்றம், துணை ஒருவரும் இல்லாத பாவி-யேனுக்கு இத் துன்பம் வருவது அறமாகுமோ? அன்பர்க்கு எளியனே, வேலையாள் இன்றி வருந்தும் எளியேனைக் காப்பது உன் கடமையே" என்று கூறிக் கண்ணீர் விட்டுக் கதறினாள்.

அன்பரின் துன்பத்தைத் தீர்க்குங் கடவுள் ஒரு வேலையாளின் வடிவம் பூண்டு, அழுக்கடைந்த பழந்-துணியை அரையிற் கட்டிக்கொண்டு, சுமையடையின் மேல் கூடையைக் கவிழ்த்து, ஒரு மண்வெட்டியைத் தோளில் தாங்கினர்; "கூலி கொடுத்து வேலைகொள்வார் உளரோ?" என்று கூவிக்கொண்டே வந்தி வசிக்கும் வீதிக்குச் சென்றடைந்தார்.

வந்தி தன் மனைக்கு வெளியே வந்து, "அப்பா, வையைக்கரையில் அளந்துவிட்ட என் பங்கை அடைத்-துத் தருவாயோ?" என்று கேட்டாள். கூலியாள், "அம்மா, அடைத்துத் தருகின்றேன். கூலி என்ன தருகின்றாய்?" என்றான். கிழவி அவனுக்குப் பிட்டு இடுவதாகக் கூற, அவன் பசியால் மெலிந்த தனக்கு உதிர்ந்த பழம்பிட்டை முதலில் அளித்தால் அதை உண்டு இளைப்பாறிக் கரையைக் கட்டச் செல்வதாகச் சொன்னான். அவ்வாறே முதியாள் பிட்டை அள்ளி-யெடுத்து அளித்தாள்.

அன்புடன் உதவிய உப்பற்ற கூழும் அமுதமே யன்றோ! கூலியாள் அதைத் தலையை அசைத்தசைத்து

உண்டு, "என்ன சுவை! என்ன சுவை!! அம்மா, தந்தையும் தாயுமற்ற தனியாளாகிய எனக்கு நீயே தாய்! இப் பிட்டு இறைவனுக்கே உகந்தது!" என்று கூறி வேலைத்தலைக்குச் சென்றான்; தன்னை வந்தியின் ஆள் என்று ஏட்டில் வரைவித்து, வேலைசெய்யத் தொடங்கினான்.

வேலையாள் மண்ணை வெட்டித் தலைமேல் வைத்து "என்ன சுமை?" என்றுகூறிக் கீழே கொட்டுவான்; குறைத்தெடுத்துக் கொண்டுபோவான்; சுமடு அவிழு-மாறு தட்டுவான்; அதனைத் தலைபடியக் கட்டுவான்; இவ்வண்ணம் சிறிது நேரம் வேலைசெய்து, இளைத்தவன்-போல் ஒரு மரத்தினடியில் படுத்துறங்கினான்; பின்னர் அவன் துயிலெழுந்து வேலைசெய்வோர் பராக்குப்-பார்க்குமாறு பாடுவான்; ஆடுவான்; பரிகாசம்செய்-

வான்; பெருமூச்செறிந்து, 'உஸ்' என்று வாயொலியால் மூச்சுவிடுவான்.

பின்பு, அக் கூலியாள் மிக்க பசியுடையவன்போல் மீண்டும் வந்தியை அடைந்து, அவள் அப்போது அட்ட பிட்டை வாங்கிக் கையும் நாக்கும் ஒட்டிக்கொள்ள வாயிற் பெய்து, இருகதுப்பினும் ஒதுக்கியொதுக்கிச் சூட்டைத் தணித்து உட்கொண்டான்! மீண்டும் வையைக்கரையைச் சார்ந்து மண்ணை வெட்டிப் பிறர்-பங்கில் கொட்டுவதும், மண்வெட்டியின் இலை வேறு காம்பு வேறாகக் கழற்றி ஆப்பு இட்டுத் தட்டுவதும், நீரில் வீழ்ந்து நீந்துவதும், மடியில் கட்டிவைத்திருக்கும் பிட்டை உண்பதும், பிறர்க்கும் கொடுப்பதும், ஏவலாளர் அவர்களை அடிக்கக் கோலை ஓங்கும்பொழுது கை-கொட்டிச் சிரிப்பதுமாகப் பல விளையாட்டுக்களைச் செய்து கொண்டிருந்தான்.

அரசனுடைய ஏவலாளர் மலைபோல் உயர்த்திக்கட்டிய கரையைப் பார்த்துக்கொண்டே வந்து, வந்தியின் பங்கு அடைபட்டிலாமையைக் கண்டு வெகுண்டனர்; "தம்பீ, நீ ஏன் இன்னம் உன் பங்கை அடைக்கவில்லை?" என்று அவனைக் கேட்டனர். அவன் ஒன்றும் உரை-யாது இறுமாப்பெய்தியிருந்தான். அவர்கள் அவனை அடிக்க அஞ்சினர். "இவன் பித்தனோ? வந்தியை வருத்த வந்த எத்தனோ? காமனும் விரும்பும் கட்டழகுடைய இவன் யார்? செல்வமிழந்து வாடும் ஒருவனோ! வாழ்ந்து கெட்ட இளவரசனோ! இவன் இதற்குமுன் வேலை செய்தவன்அல்லன் என்பதை இவனுடம்பே சொல்கின்றதே! நாம் இன்சொல் கூறினும் வன்சொல் கூறினும் இவன் கேளான்; நம்மைச் சிறிதும் பொருட்-படுத்தவில்லை" என்று தமக்குள் கூறினர்; அரசனை அடைந்து நிகழ்ந்தவற்றை உரைத்தனர்.

அரிமர்த்தனன் அங்குச் சென்றான். வந்திபங்கு அடைப்பாரின்றிக் கிடந்தது. வெள்ளம் அடுத்த கரையையும் கல்லியழித்துப் பெருகுவதைக் கண்டு வெகுண்ட வேந்தன் பொற்பிரம்பினால் வந்தியாளின் முதுகில் வீசிப் புடைத்தான். வேலையாள் மண்ணைக் கூடையோடு உடைப்பில் கொட்டி மறைந்தான். உடைப்பு அடைபட்டது.

வேலையாளை அடித்த அடி வேந்தன்முதுகிலும் பட்டது! அங்கிருந்த அமைச்சர், ஆட்கள் முதலியோரின் முதுகிலும் பட்டது! உலகில் உள்ள உயிர்ப்பொருள், உயிரல்பொருள் எல்லாவற்றின்மேலும் பட்டது!

மன்னவன் ஒன்றுமறியாது திகைத்து நின்றான். அப்பொழுது "உன் பொருள்கள் அறநெறியில் ஈட்டப்பட்டவை. அதனால், வாதவூரன் அவற்றை எனக்கும் என் அன்பர்க்கும் உதவினான். அவ் வன்பன்பெருமையை அறியாத நீ அவனைத் துன்புறுத்தினாய். அதனால், வையையில் வெள்ளம் பெருகச் செய்தேன். அன்புமிக்க வந்திக்கு ஆளாய் வந்து அவள் அளித்த பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படியும் பட்டேன்" என்று இறைவன் அசரீரியாய்க் கூறினான். வேந்தன் தன் பிழையைக் கருதி நைந்தான்; தானே எல்லாப் பொருளாயும் இருப்பவன் என்பதையும், அன்புடைய அடியவர்க்கு எளியவன் என்பதையும் காட்டிய இறைவனின் அருளை எண்ணியெண்ணி வாழ்த்தி வணங்கினான்.

அருஞ்சொற்பொருள்

அறநெறி - தருமவழி.
அவித்து - சமைத்து.
படைத்தல் - நிவேதனம் செய்தல்.
மறுகி - சிதைந்து.
குதிரைமரம் - உடைப்பில் நெடுக்காகவும் குறுக்காகவும் அமைக்கும் மரம்.
இடும்பை - துன்பம்.
இரவி - சூரியன்.

சுமையடை, சுமடு - சும்மாடு.
உகந்தது - ஏற்றது.
வேலைத்தலை - வேலை செய்யும் இடம்.
வரைவித்து - எழுதுவித்து.
பராக்கு - வேறுகவனமா யிருத்தல்.
அட்ட - சமைத்த.
பெய்து - போட்டு.
கதுப்பு - கன்னம்.
இலை - இலைபோன்ற இரும்புப் பகுதி.
ஆப்பு - முளை.
எத்தன் - வஞ்சகன்.
காமன் - மன்மதன்.

பயிற்சி

1. மதுரைநகரமக்கள் உடைப்படைத்த முறையைக் கூறுக.
2. வந்தி இறைவனைத் துதித்துக் கூறியவை யாவை?
3. கடவுள் கொண்ட கூலியாள்வேடத்தைக் கூறுக.
4. வையைக் கரையில் வேலையாள் முதலில் செய்தவை யாவை?
5. இரண்டாம் முறை அவன் செய்த விளையாட்டுக்கள் யாவை?
6. அரசனேவலாளர் வந்தியின் வேலையாளைக் கண்டு தமக்குள் கூறிக்கொண்டவை யாவை?
7. இறைவன் ஏன் வேலையாளாக வந்தான்?
8. வாக்கியத்தில் அமைக்க :—சுழலுதல், கிடத்து, நிரப்பு, எளியேன், அளந்துவிடு, உட்கொள், பராக்குப்பார், பெருமூச்செறி, பொருட்படுத்து, வாழ்த்து.

I. கடவுள் வாழ்த்து

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே. (1)

தாயுமானவர்

சிவபெருமான்

மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்
பாதமேமனம் பாவித்தேன் ;
பெற்றலும்பிறந் தேன் ; இனிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்.
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉனை நான்மறக்கினும்
சொல்லுநாநமச் சிவாயவே. (2)

தேவாரம்—சுந்தரர்

திருமால்

ஊரிலேன் ; காணி இல்லை ;
உறவுமற் றொருவர் இல்லை ;
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன் பரம மூர்த்தி
கார்ஒளி வண்ண னேஎன்
கண்ணனே, கதறு கின்றேன்.
ஆர்உளர் களைகண் அம்மா,
அரங்கமா நகரு ளானே. (3)

திருமாலை—தொண்டரடிப்பொடியாழ்வார்

இயேசுநாதர்

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதம் சிந்தித் தேத்துவாம். (4)

இரக்ஷணிய யாத்திரிகம்—கிருஷ்ண பிள்ளை

II. நீதிப்பகுதி

(i) நன்னெறி

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி(து); ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க.—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ, நன்னுதால், ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. (1)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்.—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா(து) உலகின்
நிறையிருளை நீக்கும்மேல் நின்று. (2)

''எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந்(து)'' என்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ ?—பைந்தொடீ,
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. (3)

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே.—பொன்செய்(து)
அதிர்வளையாய், பொங்கா(து) அழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்குங் கடல். (4)

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்.—எழுத்தறிவார்
ஆயுங் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை. (5)

உண்டு குணமிங்(கு) ஒருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே.—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. (6)

முனிவினும் நல்குவர் மூதறிஞர் ; உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர் ;—நனிவிளைவில்

காயினும் ஆகும் கதலிதான் ; எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை. (7)

—சிவப்பிரகாச சுவாமிகள்

(ii) திரிகடுகம்

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும், மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாட் பெற்றானும்,—உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னார். (1)

உண்பொழுது நீராடி உண்டலும், என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்,—தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
" தூஉயம் " என்பார் தொழில். (2)

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. (3)

வைததனை இன்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்,—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் (று) உண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். (4)

இல்லார்க்கொன் (று) ஈயும் உடைமையும், இவ்வுலகின்
நில்லாமை உள்ளும் நெறிப்பாடும்,—எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் (கு) உள. (5)

ஈதற்குச் செய்க பொருளை ; அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை ;—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை ; இம்மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு. (6)

ஐங்குரவர் ஆணை மறுத்தலும், ஆர்வுற்ற
எஞ்சாத நட்பினுள் பொய்வழக்கும்,—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலும் இம்மூன்றும்
நற்புடையி லாளர் தொழில். (7)

—நல்லாதனார்

(iii) நான்மணிக்கடிகை

மொய்சிதைக்கும் ஒற்றுமை யின்மை ; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை;—பெய்த
கலம்சிதைக்கும் பாலின் சுவையை ; குலம்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின். (1)

பிறக்குங்கால் பேரெனவும் பேரா ; இறக்குங்கால்
நில்லெனவும் நில்லா ; உயிரெனைத்தும் நல்லாள்
உடம்படின் தானே பெருகும் ; கெடும்பொழுதில்
கண்டனவும் காணு கெடும். (2)

கண்ணின் சிறந்த உறுப்பில்லை ; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை ; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல். (3)

திரியழல் காணின் தொழுப ; விறகின்
எரியழல் காணின் இகழ்ப ;—ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டும் உலகு. (4)

மகனுரைக்கும் தந்தை நலத்தை ; ஒருவன்
முகனுரைக்கும் உண்ணின்ற வேட்கை ;—அகனீர்ப்
பிலத்தியல்பு புக்கான் உரைக்கும் ; நிலத்தியல்பு
வானம் உரைத்து விடும். (5)

கல்லா ஒருவர்க்குத் தம்வாயிற் சொல்கூற்றம் ;
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் ;

அல்லவை செய்வார்க்(கு) அறம்கூற்றம் ; கூற்றமே
இல்லத்துத் தீங்கொழுகு வாள். (6)

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞரில் போழ்தில் சினங்குற்றம் ; குற்றம்
தமரல்லார் கையகத்(து) ஊண். (7)

—விளம்பிநாகனார்

(iv) ஆசாரக்கோவை

வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை. (1)

புற்பைங்கூழ் ஆப்பி சுடலைவழி தீர்த்தம்
தேவ குலம்நிழல் ஆனிலை வெண்பலியென்(று)
ஈரைந்தின் கண்ணும் உமிழ்வோ(டு) இருபுலனும்
சோரார் உணர்வுடை யார். (2)

நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் உமியார் திளையார் விளையாடார் ;
காய்ந்த(து) எனினும் தலையொழிந்(து) ஆடாரே
ஆய்ந்த அறிவி னவர். (3)

உண்ணுங்கால் நோக்கும் திசைகிழக்கு ; கண்அமர்ந்து
தூங்கான் துளங்காமை நன்கிரீஇ யாண்டும்
பிறிதியாதும் நோக்கான் உரையான் தொழுதுகொண்(டு)
உண்க உகாமை நன்கு. (4)

இருகையால் தண்ணீர் பருகார் ; ஒருகையால்
கொள்ளார் கொடாஅர் குரவர்க்(கு) ; இருகை
சொறியார் உடம்பு மடுத்து. (5)

கலியாணம் தேவர் பிதிர்விழா வேள்வியென்(று)
ஐவகை நாளும் இகழா(து) அறம்செய்க ;
பெய்க விருந்திற்கும் கூழ். (6)

முறுவல் இனிதுரை கால்நீர் மணைபாய்
கிடக்கையோ(டு) இவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்(கு)
ஊணொடு செய்யுஞ் சிறப்பு. (7)

எழுச்சிக்கண் பிற்கூவார் ; தும்மார் ; வழுக்கியும்
" எங்குற்றுச் சேறீரோ " என்னாரே ; முன்புக்கு
எதிர்முகமா நின்றும் உரையார் ; இருசார்வும் ;
கொள்வர் குரவர் வலம். (8)

கைசுட்டிக் கட்டுரையார் ; காலால் எழுத்திடார் ;
மெய்சுட்டி இல்லாரை உள்ளாரோ(டு) ஒப்புரையார் ;
கையில் குரவர் கொடுப்ப இருந்தேலார் :
ஐயமில் காட்சி யவர். (9)

தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்(று)
உன்னித்து வைத்த பெருளோ(டு) இவைநான்கும்
பொன்னினைப்போல் போற்றிக் காத்துய்க்க ; உய்க்காக்கால்
மன்னிய ஏதம் தரும். (10)

நஞ்செறும்பு தூக்கணம்புள் காக்கை என்றிவை
தங்கருமம் நல்ல கடைப் பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க்(கு) ஆசாரம்
எப்பெற்றி யானும் படும். (11)

கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வம் தொழுது
வடக்கொடு கோணம் தலைசெய்யார் மீக்கோள்
உடற்கொடுத்துச் சேர்தல் வழி. (12)

—பெருவாயில் முள்ளியார்

(v) திருக்குறள்

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (1)

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. (2)

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (3)

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். (4)

அன்பின் வழிய(து) உயிர்நிலை ; அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு. (5)

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்அமர்ந்து
நல்விருந்(து) ஓம்புவான் இல். (6)

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்(கு)
அணி ; அல்ல மற்றுப் பிற. (7)

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (8)

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின். (9)

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் ; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (10)

ஒழுக்க முடைமை குடிமை ; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். (11)

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை ; இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. (12)

ஒறுத்தார்க்(கு) ஒருநாளை இன்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (13)

அழுக்கா(று) எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். (14)

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்(து) ஆங்கே திரு. (15)

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் : நகச்சொல்லி
நட்பாடல் தேற்று தவர். (16)

இலனென்று தீயவை செய்யற்க ; செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. (17)

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின். (18)

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். (19)

ஈதல் ; இசைபட வாழ்தல் ; அதுவல்ல(து)
ஊதிய மில்லை உயிர்க்கு. (20)

வானுயர் தோற்றம் எவன்செய்யும்? தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். (21)

உள்ளத்தால் உள்ளலும் தீதே ; பிறன்பொருளைக்
கள்ளத்தால் கொள்வேம் எனல். (22)

எல்லா விளக்கும் விளக்கல்ல ; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (23)

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் ; தீய
பிறத்தல் அதனான் வரும். (24)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். (25)

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்(கு) இயல்பு. (26)

கண்ணுடையர் என்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (27)

தொட்டனைத் தூறும் மணற்கேணி ; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (28)

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (29)

எனைத்தானும் நல்லவை கேட்க ; அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (30)

அறிவுடையார் ஆவ(து) அறிவார் ; அறிவிலார்
அஃதறி கல்லா தவர். (31)

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு. (32)

தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. (33)

மனத்தானும் மாந்தர்க்(கு) உணர்ச்சி ; இனத்தானும்
இன்னான் எனப்படுஞ் சொல். (34)

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். (35)

கொக்கொக்க கூம்பும் பருவத்து ; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. (36)

நெடும்புனலுள் வெல்லும் முதலை ; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. (37)

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (38)

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்(து) இல். (39)

அரியவென்(று) ஆகாத இல்லை பொச்சாவாக்
கருவியான் போற்றிச் செயின். (40)

வேல்அன்று வென்றி தருவது ; மன்னவன்
கோல்அதூஉங் கோடா(து) எனின். (41)

துளியின்மை ஞாலத்திற்(கு) எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. (42)

உள்ளம் உடைமை உடைமை ; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (43)

மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும். (44)

அருமை உடைத்தென்(று) அசாவாமை வேண்டும் ;
பெருமை முயற்சி தரும். (45)

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். (46)

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட(து) அமைச்சு. (47)

பழிமலைந்(து) எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. (48)

எண்ணிய எண்ணியாங்(கு) எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். (49)

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் ; அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. (50)

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். (51)

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. (52)

நிறைநீர நீரவர் கேண்மை பிறை;மதிப்
பின்னீர பேதையார் நட்பு. (53)

மருவுக மாசற்றார் கேண்மை ; ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (54)

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். (55)

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (56)

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் ; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். (57)

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)
ஐந்துசால்(பு) ஊன்றிய தூண். (58)

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. (59)

இரவார் ; இரப்பார்க்கொன்(று) ஈவர் கரவா(து)
கைசெய்தூண் மாலை யவர். (60)

—திருவள்ளுவர்

III. வரலாற்றுப் பகுதி

தென்னாபிரிக்காவில் காந்தி - (காந்தி அம்மானை)

இறைவன் திருவருளால் ஏழாம் நாளினிலே
கப்பலை விட்டிறங்கிக் கரைசேர்ந்தார் அம்மானை.
மனைவியையும் மக்களையும் மோட்டாரில் அனுப்பிவிட்டு,
ஆப்த நண்பரான லாப்டன் துரையுடனே
காந்தி வழிநடந்தார். கண்டார் சிறுவர்சிலர்.
காந்தி காந்திஎன்று கூச்சலிட, அதைக்கேட்டு
பித்துற் றவர்போலும் பெரியார் சிலர்வந்து
கத்திப் பிதற்றினார்கள் ; கற்கள் வீசினார்கள் ;
காந்தியை அடித்துக் காயப் படுத்தினார்கள்.
நடக்க முடியாமல் காந்தி நடுக்கமுற்று
வேலியில் சாய்ந்து வீழாது நின்றார்காண்.
போலிஸ் பெருந்தலைமை அலெக்ஸாண்டர் பெம்மானின்

மனைவியார் அங்கு மோட்டாரில் வந்துற்றார் ;
வெள்ளை அறிவினராய் வேறு உணர்ச்சிகொண்டு
கல்லை விட்டெறிய, காந்தி வருந்துவதைப்
பார்த்துப் பரிதபித்துக் கார்விட் டிறங்கிவந்து
காந்தி பக்கத்தில் கைக்குட்டை தாம்விரித்து
நின்றார். அவர்கள் நிலைகலங்கி நின்றார்கள்.
மாதரசி பெயர்தான் மங்காது நிற்பதாகும் !

* * * *

தாக்கியவர் மீதும் தாம்வழக்குத் தொடர்வதில்லை
என்றே எழுதிக் கொடுத்தார்காண் அம்மானை !

* * * *

நெட்டால் காங்கிரஸுக் கின்னும் உழைக்கலானார் ;
இந்தியர் முன்னேற்றம் கருதி முனைந்துநின்றார் ;
தொண்டு புரிகிறதே தமது மார்க்கமெனக்
கொண்டு யாவருக்கும் உதவி புரிந்துவந்தார் ;
பிச்சைக்கு வந்த குஷ்ட ரோகியினைத்
துடைத்துப் புண்கழுவி மருந்திட் டுபசரித்து
வீட்டில் சிலநாள் உணவளித் திருக்கவைத்து
வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தார்காண் !
எந்த விதத்தானும் ஏழைக் குதவவேண்டும்
என்று காந்தி எளியோர் வைத்யசாலை
ஒன்றிற் சென்று தினம்ஒரு மணிநேரம்
கலப்பாள ராக உழைத்துக் களித்தார்காண் !
புலன்களை அடக்கப் பெரிதும் விருப்புற்று
பழமும் கொட்டையுமே பிரியமாய் உண்டுவந்தார் ;

* * * *

உபவாசம் மிக்க உதவிசெயும் எனக்கண்டு
வாழ்வு முறையில் வழக்கமாய் ஆற்றிவந்தார் ;
சலவைத் தொழிலைத் தமக்குத் தாமாகச்
செய்து பெட்டியிட்டுச் சிறந்து விளங்கிநின்றார் ;

* * * *

வெள்ளையர் கருப்பர் என்ற வேற்றுமை
வெறியைத் தணித்து நட்புப் பிறக்கவைத்தார் ;
இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்ட போதெல்லாம்
ஆபிரிக்கா இந்தியர் அட்டியின்றி உதவவைத்தார் ;
வேண்டிய வேலை எல்லாம் நடத்தியபின்
இந்தியா திரும்ப எண்ணினார் அம்மானை !

—கவிஞர் ஆதித்தர்

IV. கதைப் பகுதி

(i) பஞ்சதந்திரம்

முயல் யானையை வென்ற கதை

துன்னரும் அடவி தன்னில்
 தும்பிகள் அனேகம் சூழப்
பன்னருஞ் சதுர தந்தன்
 எனுமிறை பண்பின் வாழ்நாள்,
அன்னநாள் மழையில் லாமல்
 அருஞ்சுனை எல்லாம் வற்ற,
"உன்னுநீர் எங்குண்(டு) ?" என்ன,
 ஒற்றர்பார்த் தோடி வந்தே. (1)

" சந்திர சரசு தண்ணீர்
 ததும்பிட நிற்கு(து) " என்ன,
அந்தநற் சுனையை நாடி
 யானைகள் அனைத்தும் செல்ல,

முந்திஅச் சுனையைச் சூழும்
 முயற்சிலீ முகவேந்(து) அஞ்சி
மந்திரி விசயன் தன்னை
 வரவழைத்(து) உரைக்கும் அன்றே : (2)

"இற்றைநாள் வரையில் நாமும்
 இனமும்இச் சுனையைத் தானே
சுற்றிஇங் கிருந்தோம் ; இந்தத்
 தும்பிகள் வந்து புக்கால்
மற்றுநாம் இருக்க லாகா ;
 வனத்தில்வே(று) இடமு மில்லை ;
உற்றிவண் இருக்க வேறோர்
 உபாயம்நீ நினைப்பாய்" என்ன, (3)

"ஆனையை வெல்லும் ஆறிங்(கு)
 அருமையோ ? விடைதா" என்று
ஞானமந் திரவி சாரம்
 நனிபெறு விசயன் கூறிச்
சேனைகா வலனும் அந்தச்
 சிலீமுகன் அனுப்ப ஏகிக்
கானில்வே ழக்கூட் டத்தைக்
 கண்களால் கண்டு நின்றே. (4)

"நகைத்துடன் கொல்வர் துட்டர்
 நாம்அவர் நடுவில் பட்டால் ;
வகைப்பட ஓர்பால் நின்றால்
 வந்தடித் திடுவர் ; மாறாய்
மிகைப்பட அவர்கள் கையில்
 வீறுடன் நாமும் சும்மா
அகப்படின், நம்மை அந்த
 ஆனைதான் கொல்லும் அன்றே ?" (5)

என்றுதன் மனத்தில் எண்ணி
"இதன்கையில் அகப்ப டாமல்
நின்றுநாம் வெல்வோம்" என்று
நினைத்தொரு குவட்டி லேறித்
துன்றிய களிற்று வேந்தை,
"தும்பி, நீ சுகமோ?" என்ன,
வென்றிகொள் களிறு கண்டு
வியந்து "நீ யாரே?" என்ன, (6)

"இசைநிலா எறிக்குந் திங்கள்
ஏவிய தூதன்; என்பேர்
விசயனென் பார்கள்; உன்பால்
விடுக்கவந் துற்றேன்" என்ன,
அசைவிலா தாகி அந்த
ஆனையும் பயந்து நின்றே,
"விசயநீ வந்த(து) என்ன?
விளம்"பென விளம்பும் அன்றே. (7)

"சந்திர சரசென்(று) எங்கள்
சசிபக வான்பே ராலே
இந்தநற் கான கத்தில்
இருஞ்சுனை ஒன்றுண் டாக்கி
அந்தநற் சுனையில் எங்கள்
ஐயனும் தேவி மாரும்
முந்திய சலக்கி ரீடை
முயங்கியே, பகலைக் கெல்லாம், (8)

"தண்ணறுஞ் சுனைக்குக் காவல்
வைத்தெமைத் தாங்கள் போவர்.
விண்ணவர் உலகத் தாரும்
விரும்பினும் தொடப்ப டாது.

நண்ணிய சுனைநீர் உண்ண
　　நாடினை நீயென்(று) எங்கள்
அண்ணலார் சினந்துன் பக்கல்
　　அனுப்பினர் 'தடுத்தி' என்றே. (9)

"மூவரின் முதல்வ ரான
　　முனைவனார் முடிமேல் வாழுந்
தேவனைப் பகைத்த சிந்தைச்
　　செயலினை இனித்த டுத்தே
மேவுதண் சுனைமேல் வைத்த
　　வேட்கையை விடுத்(து)இந் நேரம்
போவதே கருமம்" என்று
　　புத்திகள் பலவும் சொல்ல, (10)

தந்தியின் அரசும் அந்தச்
　　சசந்தனை நோக்கி, "நீசொல்
சந்திரன் எனுந்தே(வு) இந்தத்
　　தடந்தனில் குடைவ(து) எப்போ(து)?
அந்தவே ளையினில் வந்தங்(கு)
　　அவனடி போற்றி யானும்
உய்ந்துமீண் டேகு வேன்"என்(று)
　　ஓதலும், முயல்நன்(று) என்று (11)

அன்றிர வுடன்கொண் டேகி
　　அலைபுனற் றடத்தில் தோன்றுந்
துன்றுவெண் மதியின் சாயை
　　சுட்டி"நீ காண்க" என்ன,
நன்றதைக் கண்டு திங்கள்
　　நாதனே என்றும் சூழ்வுற்(று)
ஒன்றிய உடுக்கள் அன்னோற்(கு)
　　உரியநன் மாத ரென்றும் (12)

ஆனையும் நினைந்து நெஞ்சம்
அழிந்துபின் தெளிந்து நின்று
"நானிதை அறியேன்; எங்கள்
நாதனே, பொறுக்க" என்று
வானுயர் மதியை நோக்கி
வணங்கியே மீண்டு போக,
கானுறு முயல்கள் எல்லாம்
களித்துவாழ்ந் திருந்த அன்றே. (13)

—வீரமார்த்தாண்ட தேவர்

(ii) நாயின் நல்லியல்பு

ஆசையை அறவே நீத்த
அறிவனோர் காட்ட கத்தே
மாசிலா மனத்த னாகி
மரநிழல் வதிந்தி ருந்தான்.
தேசுறும் ஒளியாம் ஈசன்
திருவடி சிந்தை சேர்த்தி
ஆசிலாத் தவமு ஞற்றி
அன்னவன் இருக்கும் நாளில், (1)

பறவைகள் பறந்து வந்து
பரிந்தவன் பக்கல் தங்கும்.
திறமுறும் உழுவை சியம்
செறிந்தவன் திசையில் சேரும்.
அறனுறுந் தவசி நோக்கி
அவற்றுடன் ஆடிப் பாடி
உறவுகொண் டிருப்ப, இன்பம்
உற்றன அவையும் மாதோ. (2)

நன்னய முனிவன் ஓர்நாள்
நகரினைக் காண எண்ணித்

துன்னிய அருளாற் செல்ல,
தொன்னகர் மாந்தர் சில்லோர்
மன்னிய அவனைச் சூழ
வந்தனர் வறிய கோலத்
தன்னவன் அருகில் நின்றார்
அவன்செயல் நோக்க லுற்றார். (3)

அறிவனும் ஆங்கண் நின்ற
அழுகிதோர் நாயைக் கண்டு
செறிமகிழ் கொண்டந் நாயின்
திருவடி தனில்வ ணங்கி
நெறியுடன் வலமா வந்து
நிலத்தினில் வீழ்ந்தான். கண்ட
பொறியிலா மாந்தர் சேர்ந்து
பொள்ளெனச் சிரித்து நின்றார். (4)

முதியவன் ஒருவன் முன்னி
முனிவரன் தனைவ ணங்கி
" மதியுளீர் தாமும் இந்த
வன்குரல் நாயைப் போற்றிப்
புதியபே ருவகை பூத்தீர் ;
புகலுமின் இதன்சீர் " என்ன,
வதியுமம் மாக்கள் தேற
வழுத்துவன் முனிவன் ஆங்கே : (5)

" தன்னொரு தலைவன் வீசுஞ்
சாரமில் எச்சில் உண்டே
அன்னவன் றன்பால் நீங்கா
அன்புகொண் டிருக்கும் ; அன்றிப்
பொன்னியல் புலியைக் காட்டிப்
போவெனப் பொரமேற் செல்லும் ;
மன்னுமோர் பெருங்கூட் டத்தும்
மாறிடா தவனைச் சாரும். (6)

‘‘ இந்தமூன் றியல்பு தானும்
எவ்வகை நாய்க்கும் உண்டால்.
அந்தநல் லியல்பு தானும்
அறிவுள மாந்தர்க் குண்டோ ?
வந்தபல் பண்டந் தம்மை
வகைவகை யாகத் தந்த
சிந்தலில் அருளான் ஈசன்
செயல்முறை அறிகி லோமே’’ (7)

எனப்பல இடித்து ரைத்த
இணையிலான் றன்னைத் தாழ்ந்து
நினைப்புறு மனத்த ராகி
நெறிமுறை அறிந்து நின்றார்.
இனப்பகை கடந்த நல்லோன்
ஈதுநன் னெறிய தென்றே
வனப்புறு நகரந் தோறும்
மாந்தருக் குணர்த்தச் சென்றான். (8)

காட்டினில் வதித லானும்
கனிபல அருந்த லானும்
நாட்டுமோர் நன்மை யில்லை ;
நகரியிற் சென்று மாந்தர்
ஈட்டமே மேவி யன்னார்
இழிமதி தீரச் சொல்லிக்
காட்டலே நலனு மென்னாக்
கனிவொடுஞ் சென்றா னன்றே. (9)

—கா. நமச்சிவாய முதலியார்

V. இயற்கை வருணனை

(i) கடல்

எல்லை அறியாப் பெருங்கடலே—நீதான்
இரவும் உறங்கா யோகடலே.
அல்லும் பகலும் அலைகடலே—உனக்(கு)
அலுப்பு மில்லையோ கருங்கடலே. (1)

உருண்டு திரண்டு வருங்கடலே—உடைந்
தோடிப் போவ தேன்கடலே.
வெருண்டு மதிகெட் டாய்கடலே—பாறை
விலகிப் போகு மோகடலே. (2)

பொங்கு திரைக ளோகடலே—இவை
புரவி நிரைதா மோகடலே
எங்கும் உனதொலி யோகடலே—எழும்
இடியின் முழக்க மோகடலே. (3)

ஓடம் எடுத்தெறி யுங்கடலே—தயை
உனக்குச் சற்றிலை யோகடலே
ஆடல் வீடித னைக்கடலே—நீயும்
அழிப்ப தழகா மோகடலே. (4)

மலையை வயிற்றடக் குங்கடலே—கோடி
மகர மீனுல வுங்கடலே
விலைகொள் முத்தளிக் குங்கடலே—சிப்பி
விளையா டத்தரு வாய்கடலே. (5)

மழைக்கு மூலமும் நீகடலே—அதை
வாங்கி வைப்பதும் நீகடலே.
வழங்கும் உன்பெரு மைகடலே—என்னால்
வகுக்க முடியு மோகடலே. (6)

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

(ii) காடு

முட்புதர்கள் மொய்த்ததரை எங்கும்—எதிர்
முட்கருங் கற்களும்நெ ருங்கும்—மக்கள்
இட்டடி எடுத்தெடுத்து
வைக்கையிலே கால்களில் தடுங்கும்—உள்நடுங்கும். (1)

கிட்டிமர வேர்கள்பல கூடும்—அதன்
கீழிருந்து பாம்புவிரைந் தோடும்—மர
மட்டையசை வால்புலியின்
குட்டிகள்போய்த் தாய்ப்புலியைத் தேடும்—பின் வாடும்.(2)

நீள்கிளைகள் ஆல்விழுதி னோடு—கொடி
நெய்துவைத்த நற்சிலந்திக் கூடு—கூர்
வாள்எயிற்று வேங்கையெலாம்
வால்சுழற்றிப் பாயவருங் காடு—பள்ளம் மேடு. (3)

கேளொடும் கிளம்பிவரும் பன்றி—நிலம்
கீண்டுகிழங் கேளடுத்த தன்றி—மிகு
தூளிபடத் தாவுகையில்
ஊளையிடும் குள்ளநரி குன்றில்—புகும் ஒன்றில். (4)

வானிடையோர் வானடர்ந்த வாறு—பெரு
வண்கிளை மரங்களென்ன வீறு—நல்ல
தேனடை சொரிந்ததுவும்
தென்னைமரம் ஊற்றியதும் ஆறு—இன்பச் சாறு. (5)

கானிடைப் பெரும்பறவை நோக்கும்—அது
காலிடையே காலிகளைத் தூக்கும்—மற்றும்
ஆனினம் சுமந்தமடி
ஆறெனவே பால்சுரந்து தீர்க்கும்—அடை ஆக்கும். (6)

—பாரதி தாஸன்

VI. பல்சுவைப்பகுதி

(i) தனிப்பாடல்

யாரோடு எவைபோம் ?

தாயோ(டு) அறுசுவைபோம் ; தந்தையொடு கல்விபோம் ;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் ;—ஆயவாழ்(வு)
உற்றா ருடன்போம் ; உடன்பிறப்பால் தோள்வலிபோம் ;
பொற்றாலி யோடெவையும் போம். (1)

—ஔவையார்

அடியார்துன்பத்தினும் இறைவன்துன்பம் அதிகம் !

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பால் சேர்ந்தேன் அப்பா !
“ கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும், வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும், கோப மாகப்
பஞ்சவரில் ஒருவன்விலால் அடித்த புண்ணும்
பார் ”என்றே காட்டிநின்றான் பரமன் தானே.
(2)

—இராமச்சந்திரக் கவிராயர்

ஆடையில்லாதவன் அரைமனிதன்

மேலாடை இன்றிச் சபைபுகுந் தால்இந்த மேதினியோர்
நூலா யிரம்படித் தாலுமெண் ணார்; நுவல் பாற்கடலோ
மாலா னவர்அணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே. (3)

—நையாண்டிப் புலவர்

(ii) பாரதியார்பாடல்

செந்தமிழ்நாடு

காவிரி தென்பெண்ணை பாலா றுதமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி—என
மேவிய ஆறு பலவோ டத்திரு
மேனி செழித்த தமிழ்நாடு. (1)

கல்வி சிறந்த தமிழ்நா டுபுகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு. (2)

வள்ளுவன் றன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளுஞ் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு. (3)

சிங்களம் புட்பகம் சாவக மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடி யும்நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. (4)

அச்சமில்லை

இச்சகத்து ளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்
துச்சமாக எண்ணிநம்மைத் தூறுசெய்த போதினும் [னும்
பிச்சைவாங்கி உண்ணும்வாழ்க்கை பெற்றுவிட்ட போதி
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே. (5)

இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்
பச்சையூன் இயைந்தவேற் படைகள்வந்த போதினும்
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே. (6)

(iii) பிரபந்தம்

உழுது விதைத்தல் (முக்கூடற் பள்ளு)

பள்ளன் எழுந்துநிலை தரித்தான் ;—நின்ற
பள்ளியர் முகம்பார்த்துச் சிரித்தான் ;
மெள்ளப் புருவங்கோட்டி நெரித்தான் ;—மாட்டை
மீட்டுமேர் பூட்டிஉழத் தரித்தான் ; (1)

உழுத உழவைக்கண்டு களித்தான் ;—பள்ளர்
உள்ள பேரையெல்லாம் விளித்தான் ;
தொழுது தெய்வக்கடன் கழித்தான் ;—அந்தத்
தொளியில் விதைகளெல்லாம் தெளித்தான் ; (2)

முளைக்குத் தண்ணீரையடைத் திட்டான் ;—கொல்லை
முழுது மறுநாள்வெட்டி விட்டான் ;
வளைத்து வேலிசூழ நட்டான் ;—நாற்று
வளர்க்க நாளும்ஒருப் பட்டான் ; (3)

வளர்ந்த நாற்றைமுகங் கண்டான் ;—சேரி
மள்ளர் கூடவிருந் துண்டான் ;
அளந்தி டாமகிழ்ச்சி கொண்டான் ;—பண்ணை
ஆண்டவர்க் கந்தச்செய்தி விண்டான். (4)

(iv) அம்மானை (திருவரங்கக் கலம்பகம்)

தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண் அம்மானை.
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே ஆமாகில்,
சானகியைக் கொள்வாரோ தாரமாய்? அம்மானை.
தாரமாய்க் கொண்டதுமோர் சாபத்தால் அம்மானை.

—பிள்ளைப்பெருமாளையங்கார்

(v) குறவர் செயல்கள் (மீனாட்சியம்மை குறம்)

கொழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம் ;
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம் ;
பழம்பிழிந்த கொழுஞ்சாறும்
தேறலும்வாய் மடுப்போம் ;
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம் ;
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம் ;
சினவேங்கைப் புலித்தோலின்
பாயலின்கண் படுப்போம் ;
எழுந்துகயற் கணிகாலில்
விழுந்துவினை கெடுப்போம் ;
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே.

—குமரகுருபர சுவாமிகள்

குறிப்புரை

I. கடவுள் வாழ்த்து

1. பராபரம் - பரம்பொருள் ; மேலான பொருள். **2.** மற்று - வேறு. பற்று - பற்றுக்கோடு ; கொள்கொம்பு. பாவித்தேன் - நினைக்கப் பெற்றேன். பெற்றலும் - (நினைக்கப்) பெறலும். எத்தும் - துதிக்கும். நல்தவா - சிறந்த புண்ணியமூர்த்தியே. நா - நாக்கு. 'நா நமச்சிவாய (என்னும் பஞ்சாக்ஷரத்தை எப்பொழுதும்) சொல்லும்' என்க. **3.** காணி - காணி நிலம். பரமம் - மேலான. கார் - கரு மேகம். வண்ணனே - நிறத்தையுடையவனே. ஆர் - யார். களைகண் - பற்றுக்கோடு. அரங்கம், ஸ்ரீரங்கம். நகர் - கோயில். **4.** ஊனம் - குறைவு; குற்றம்; பழி. நனி - மிக. தீனரக்ஷகன் - எளியோரைக் காப்பவன் ; இயேசுநாதர். பதம் - திருவடிகளை.

II. (i) நன்னெறி

1. மாசு - குற்றம். எனையவர் - (குற்றமுள்ள மனமுடைய) மற்றவர். பிறிது - வன்சொல். ஈசற்கு - சிவபெருமானுக்கு. நல்லோன் , சாக்கியன். சிலை - கல். நல் நுதால் - அழகிய நெற்றியை உடைய பெண்ணே. நுதல் - நெற்றி. நன்னுதால், விளி வேற்றுமை. ஒள் - சிறந்த. கருப்பு வில்லோன் - கரும்பு வில்லை யுடைய காமன். விருப்பு - விருப்பத்தைக் கொடுப்பது. **2.** தீர்வு - தீர்த்தலை. உள்ளார் - நினையாது. தளர்ந்து - மனமிரங்கி. வெம் குறை - கொடிய துன்பங்களை. தீர்க்கிற்பார் - நீக்குஞ் சக்தியை உடையவர். விழுமியோர் - பெரியோர். கறை இருளை - களங்கமாகிய இருட்டை. மேல் - ஆகாயத்தின்மேல். **3.** எந்தை - என் தந்தை. நல்கூர்ந்தான் - வறியவனானன். பைந்தொடீ - பசும்பொன்னு லாகிய வளையலை அணிந்த பெண்ணே. பயன் - கனியை. நில்லா - அழிகின்ற. அரம்பை - வாழை. **4.** இருநீர் - பெரிய நீர்நிலையாகிய கடலால் சூழப்பட்ட. வியன் - பரந்துள்ள. அதிர் - ஒலிக்கின்ற. அழற்கதிரால் - வெப்பத்தை உடைய சூரியகிரணத்தால். தண் என்கதிர் , நிலவு **5.** ஆயும் - ஆராய்கின்ற. அவிர் - விளங்கும். கண்ட அளவில் - கண்டவுடன். சுரநீர் - ஆகாய கங்கையின். மிகை- வெள்ளப்பெருக்கு. வீயும் - கெடும். **6.** கீழ் - கீழ்மக்கள், அற்பர். சேக்கை - படுக்கை. பொழில் - சோலை. **7.** முனிவு - சினம்.

மூதறிஞர் - சிறந்த அறிவுடையோர். உள்ளக் கனிவு - மனமகிழ்ச்சி. கயவர் - கீழ்மக்கள். நனி - மிக. விளைவு - முதிர்ச்சி. இல் - இல்லாத. கதலி - வாழை. ஆமோ - பயன்படுமோ? அறை - சொல்லு.

(ii) திரிகடுகம்

1. மண் - நிலவுலகம். வான் - சிறந்த. நட்டான் - நிலைநிறுத்தியவன். கூவல் - கிணறு. தொட்டான் - தோண்டிவைத்தவன். சாவா உடம்பு - இறவாத புகழுடம்பு. **2.** உண்பொழுது - உண்ணுதற்குமுன். என் - எப்பயனை. பால் - பக்கம்; ஒரு சார்பாக. பால்பற்றி - பட்சபாதமாய், நடுநிலை தவறி. தோல் - உடல். வற்றி - உலர்ந்து. சாயினும் - அழியினும். சான்றாண்மை - பெருந்தன்மை. தூயம் - யாம் பரிசுத்தராகக்கடவோம். என்பார் - என்று நினைப்பவருடைய. **3.** தருக்கல் - கர்வங்கொள்ளுதல். கொன்னே - காரணமின்றி; வீணாக. முன்னிய - முன்னே காணப்பட்ட. வெஃகும் - (பெற) விரும்பும். **4.** வைததனை - ஒருவன் வைத பழிமொழியை. பெய்த - மிகச் சேர்த்த. ஊறிய - தோய்ந்த; மிகுந்த. கைப்பு - கசப்பு. கட்டி - வெல்லம். மெய்ப்பொருள் - உண்மைப்பொருளாகிய கடவுள். **5.** இல்லார் - வறிஞர். உடைமை - செல்வம். நில்லாமை - நிலையாமையை. உள்ளும் - எண்ணி அறியும். நெறிப்பாடு - நல்லொழுக்கம். துன்புறுவ - துன்பத்தைச் செய்வனவற்றை. **6.** புரிந்து - விரும்பி. இருள்உலகம் - நரகம். **7.** ஐங்குரவர் - பெரியோர் ஐவர்: தாய், தந்தை, தமையன், குரு, அரசன். ஆணை - கட்டளையை. எஞ்சாத - ஒற்றுமை குறையாத. நெஞ்சு அமர்ந்த - மனம் பொருந்திய; விரும்பிய. நற்புடை - நல்ல தன்மை; அறத்தின் வகை.

(iii) நான்மணிக்கடிகை

1. மொய் - பெருமை. ஒருவனை-ஒருவனுடைய. மேனியை-உடலழகை. பெய்த - இட்டு வைத்த. கலம் - பாத்திரம். கூடார்கண் - கூடி நட்புச்செய்யத் தகாதவரோடு. **2.** பிறக்குங்கால் - (பொருள்கள்) உண்டாகும்பொழுது. பேர் - பிரிந்துசெல். இறக்குங்கால் - அழியும்பொழுது. நல்லாள் - இலக்குமி. உடம்படின் - இசையின். **3.** கொண்டானின் - மணந்துகொண்ட கணவனைவிட. துன்னிய - நெருங்கிய. கேளிர் - சுற்றத்தார். மக்களின் -

குழந்தைகளைக்காட்டிலும். ஒண்மைய ஆய் - ஒளியை உடையன வாகி. சான்ற - மிகுந்த. ஈன்ருள் - தாய். என்ன - எப்படிப்பட்ட. **4**. திரிஅழல் - தீபம். தொழுப - வணங்குவர். இகழ்ப - இகழ்வர். **5**. நலம் - குணம். முகன் - முகம். உள் நின்ற - மனத்தில் உள்ள. வேட்கை - விருப்பம். நீர் - தன்மை. பிலம் - பிலத்துவாரம். நிலம் - மண்; மக்கள் எனினும் ஆம். வானம் - மழை. **6**. கூற்றம் - யமன். அல்லவை - பாபம். இல்லத்து - வீட்டிலே. தீங்கு ஒழுகு வாள் - தீய ஒழுக்கத்தை உடைய மனைவி. **7**. வளம் - செல்வம். வள்ளன்மை - வண்மை; ஈகை. தமர் - தம்மைச் சேர்ந்தவர்.

(iv) ஆசாரக் கோவை

1. வைகறையாமம் - வைகறையாகிய ஜாமம்; இரவின் கடைசி ஜாமம். வாய்வதில் - பொருந்தும் முறையில். எழுக - எழுந்து காரியத்தின்மேல் செல்லுக. முந்தையோர் - முன்னேர். **2**. பைங்கூழ் - பயிர். ஆப்பி - பசுவின் சாணம். சுடலை - நன்-காடு. தீர்த்தம் - நீர்நிலை. தேவ குலம் - கோயில். ஆனிலை (ஆன் + நிலை) - பசுக் கொட்டில். வெண்பலி - சாம்பல். உமிழ்வு - எச்சில் உமிழ்தல். இருபுலனும் சோரார் - மலஜலம் கழியார். **3**. நெறிப் பட்டார் - தர்மவழியில் நடப்போர். எஞ்ஞான்றும் - எப்போதும். திளையார் - (நீரைக்) குடையார். காய்ந்தது - (உடல்) காய்ச்சல் கண்டிருந்தது. தலை ஒழிந்து ஆடார் - தலை நீங்க உடல்மட்டும் குளியார். ஆய்ந்த - ஆராய்ந்த. **4**. அமர்ந்து - மூடி. துளங் காமை - அசையாமல். இரீஇ - இருந்து. யாண்டும் - எவ்விடத்தும். பிறிது - வேறு. பிறிது + யாதும் = பிறிதியாதும். உகாமை - சிந்தா மல். **5**. இருகையால் - இரண்டுகையாலும். மடுத்து - சேர்த்து. **6**. தேவர்நாள் - தேவரை வணங்கும் பண்டிகைநாள். கூழ் - உணவு. **7**. முறுவல் - புன்சிரிப்பையுடைய முகம். இனிதுரை - இன்சொல். கால்நீர் - காலை அலம்புதற்குத் தண்ணீர் கொடுத் தல். மணை - ஆசனம். தலைச்சென்ருர் - தம் வீட்டுக்கு வந்த விருந்தினர். **8**. எழுச்சிக்கண் - எழுந்து புறப்படும்பொழுது. பின் - பின்னேயிருந்து கொண்டு. வழுக்கியும் - தவறியும். செறீரோ - செல்கின்றீரோ. இரு சார்வும் - இருபக்கமும் (நின்றுரைப்பர்) வலம் கொள்வர் - பிரதக்ஷிணம் செய்வர். **9**. எழுத்திடார் - எழுதார். இல்லாரை - இறந்தவரை. உள்ளாரோடு - உயிரோடு இருப்பவ ரோடு. இருந்து - உட்கார்ந்துகொண்டு. எலார் - பெற்றுக்கொள்

ளார். காட்சியவர் - அறிவினை உடையவர். **10.** தாரம் - மனைவி. அடைக்கலம் - அடைக்கலப்பொருள் ; ஒப்புவிக்கப்பட்ட பொருள். உன்னித்து - நினைத்து. உய்க்க - வாழ்க்கையை நடத்துக. உய்க்காக் கால் - நடத்தாவிடின். மன்னிய - நிலைபெற்ற. ஏதம் - குற்றம் ; துன்பம். **11.** நந்து - சங்கு. பெற்றி - தன்மை. எப்பெற்றியானும்- எல்லா விதத்தாலும். படும் - அமையும்.

சங்கைத் தீயிலிட்டுச் சுட்டாலும் அது வெண்மையே தரும். எறும்பு எப்பொழுதும் சுறுசுறுப்பாய் இருக்கும் ; கூட்டமாய் வசிக் கும். தூக்கணங்குருவி தன் கூட்டை உறுதியாக அமைத்து வெயிலிலும் மழையிலும் வருந்தாமல் வாழும். காக்கை விடியற் காலையில் எழுதல், பலமுறை நீராடுதல், இனத்தோடு உண்ணல் முதலிய நல்லொழுக்கங்களைப் பெற்றுள்ளது. இப் பொருள்களின் செயல்களைப் பின்பற்றி நடப்பின், நமக்கு நல்லொழுக்கம் நன்கு படியும்.

12. கிடக்குங்கால் - உறங்கச்செல்லும்பொழுது. கோணம் - தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு என்னும் மூலைத்திசைகள். தலைசெய்யார் - தலை வைக்கமாட்டார். மீக்கோள் - போர்வை. வழி - முறை.

(v) திருக்குறள்

1. உவமை - ஒப்பு. தாள் - திருவடிகளை. **2.** அறத்தான் - இல்லறத்தோடு. புறத்த - துன்பத்தையுடையன. **3.** சான்றோன்- (கல்வி கேள்விகளால்) நிறைந்தவன். ஈன்ற - பெற்ற. பொழுதின் - காலத்தில் உண்டான மகிழ்ச்சியைவிட. பெரிது - மிக. **4.** தாழ் - தாழ்ப்பாள். ஆர்வலர் - அன்புடையவருடைய. புல் - துன்பமான. பூசல்தரும் - வெளிப்படுத்தும். **5.** உயிர்நிலை - உயிர் நின்ற உடம்பு. போர்த்த - போர்த்தவையாகும். **6.** அகன் - மனம். அமர்ந்து- மகிழ்ந்து. செய்யாள் - லக்ஷ்மி. அமர்ந்து - இனியனாய். இல் - வீட்டில். **7.** பணிவு - வணக்கம். மற்று, அசை. **8.** காலத்தி னால் - (ஒருவனுக்கு ஆபத்து வந்த) காலத்தில். ஞாலத்தின் - நிலவுலகத்தைவிட. மாண - மிக. **9.** தம - தம் பொருள்களை. **10.** தகைத்து - சிறப்பினை உடையது. **11.** இழுக்கம் - ஒழுக்கத் தில் தவறுதல். **12.** எய்தா - (தாம்) அடையத்தகாத. **13.** ஒறுத் தார்க்கு - (தமக்குத் தீங்குசெய்தவனைத்) தண்டித்தவர்க்கு. பொன்-

றும் துணையும் - (உலகம்) அழியும் அளவும். **14**. அழுக்காறு - பொறாமை. திரு - செல்வம். செற்று - கெடுத்து. தீயுழி - நரகத்தில். **15**. வெஃகா-(பிறர்பொருளை) விரும்பாத. திரு - லக்ஷ்மி. திறன் - '(தான் அடைதற்கு ஏற்ற) உபாயத்தை. ஆங்கே - அவ்வுபாயத்தாலே. **16**. பக - பிரியும்படி. கேளிர் - நண்பரையும், சுற்றத்தாரையும். நட்பு ஆடல் - (அயலாரோடும்) சினேகம் செய்தலை. தேற்றாதவர் - அறியாதவர். **17**. இலன் - நான் வறிஞன். மற்று, அசைநிலை. பெயர்த்தும் - மறுபடியும். **18**. நயன் - உபகார குணம். உள்ளூர் - ஊரின் நடுவில். பழுத்தற்று - பழுத்தாற்போலும். **19**. உடைமை - உடைய பொருளை. வன்கணவர் - அருள் இல்லாதார். ஈத்து - (வறியார்க்கு வேண்டியவற்றைக்) கொடுத்து. உவக்கும்-(அவ் வறிஞர்) உவத்தலால் (அருளுடையார்) எய்தும். **20**. ஈதல் - (வறியார்க்குக்) கொடுக்க. இசைபட - புகழ் உண்டாக. வாழ்தல் - வாழ்க. ஊதியம் - பயன். **21**. எவன் - என்ன பயனை. குற்றம் - கூடாவொழுக்கத்தில். படின் - இறங்குமாயின். **22**. உள்ளலும் - எண்ணுதலும். எனல் - என்று ஒருவன் எண்ணுதிருப்பானுக. **23**. பொய்யா விளக்கு - பொய்கூறுமையாகிய விளக்கு. **24**. மறத்தல் - நினையாதொழிக. தீய - தீமைகள். **25**. இன்னு - தீமைகளை. **26**. எஞ்சாமை - ஒழியாமல் நிற்றல். **27**. என்பவர் - என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவர். **28**. தொட்ட அனைத்து - தோன்றிய அளவினதாக. **29**. அரங்கு இன்றி - (காய் நிற்கும்) அறைகளை அமைக்காமல். கோட்டி கொளல் - சபையில் ஒன்றைச் சொல்லுதல். **30**. எனைத்தானும் - சிறிதாயினும். ஆன்ற - நிறைந்த. **31**. ஆவது - இனி வரப்போவதை. **32**. இறைக்கு - அரசனுக்கு. **33**. தமர் ஆ - தமக்குச் சிறந்த துணைவர் ஆகும்படி. தலை - மேலானது. **34**. உணர்ச்சி - இயற்கையறிவு. **35**. பீலி - மயில் தோகை. சாகாடு - வண்டி. இறும் - முறியும். சால மிகுத்து - அது பொறுக்கும் அளவின்றி மிகுதியாக. பெயின் - ஏற்றின். **36**. கூம்பும் பருவத்து - போர்த்தொழிலின்மேல் செல்லாதிருக்குங் காலத்து. சீர்த்த இடத்து - போர்த்தொழிலின்மேல் செல்லுங் காலம் கிடைத்தபொழுது. **37**. நெடும்புனல் - ஆழமுள்ள நீர். அடும் - வென்றுவிடும். **38**. கட்டளைக்கல் - உரைகல். **39**. மருங்கு-சுற்றத்தை. **40**. பொச்சாவா - மறவாத. கருவியான் - மனத்தால். **41**. கோடாது எனின் - கோணுதிருப்பின். **42**. துளி - மழை. ஞாலத்திற்கு - உலக உயிர்களுக்கு. எற்று - எவ்வகைத் துன்பந்

தருமோ. அற்று - அவ்வகைத் துன்பந் தரும். அளி - கருணை. **43.** உள்ளம் - ஊக்கம். **44.** மடிமை - சோம்பல்தன்மை. குடிமைக்கண் - தன் குடியை உயர்த்துபவனிடத்தில். ஒன்னார் - பகைவர். **45.** அசாவாமை - தளராமை. **46.** விழையான் - விரும்பாமல். **47.** வன்கண் - தளராமை. ஆள்வினை - முயற்சி. ஐந்துடன் - (முன்கூறிய சேனை, பொருள், காலம், செய்யும் முறை, செயல் என்னும்) ஐந்துடனே. மாண்டது - செவ்வையாக உடையவனே. **48.** மலைந்து - தம்மேற் கொண்டு. ஆக்கம் - செல்வம். கழி - மிக்க. நல்குரவு - வறுமை. **49.** திண்ணியர் - மனவலிமையை உடையவர். எண்ணிய - எண்ணியவற்றை யெல்லாம். எண்ணிய ஆங்கு - எண்ணிய அப்படியே. எய்துப - அடைவர். **50.** சூழ்ச்சி முடிவு - ஆலோசனைக்கு எல்லையாவது. தாழ்ச்சியுள் - காலதாமதத்துள். **51.** கடுத்தது - மிக்க குணத்தை. **52.** தள்ளா - குறையாத. செல்வர் - செல்வ வணிகர். **53.** 'நீரவர் கேண்மை பிறை நிறை நீர' - என்று மாற்றிக் கொள்க. நீரவர் - அறிவுடையவர். கேண்மை - நட்புக்கள். நிறைநீர - நிறையுந் தன்மையை உடையன. மதி-முழுமதி. பின் நீர-பின்குறைவதுபோலக் குறையுந் தன்மையை உடையன. **54.** மருவுக - ஏற்றுக்கொண்டு பழக வேண்டும். ஈத்தும்-கொடுத்தாயினும். ஒப்பு - உலக வொழுக்கத்தோடு ஒத்தல். ஒருவுக-விடுக. **55.** கோடி - கோடியளவான பொருளை. குன்றுவ - தம் ஒழுக்கம் குறைதற்குக் காரணமான தொழில்களை. **56.** மானம் வரின் - மானம் அழியாது நிலைபெறுங் காலம் வந்தால். **57.** மேல் அல்லார் - சிறியவர். கீழ் அல்லார் - பெரியவர். **58.** ஒப்புரவு - உதவுதல். கண்ணோட்டம் - தாட்சிணியப்படுதல். சால்பு - சால்பு என்னும் பாரத்தை. ஊன்றிய - தாங்கிய. **59.** செய்து - உயரச் செய்து. **60.** கைசெய்து - தம் கையால் உழுது. ஊண் - உண்பதை. மாலையவர் - இயல்பாக உடையவர்.

III. காந்தி அம்மானை

ஆப்த - நெருங்கிய. பெம்மான் - பெருமான்; தலைவன். வெள்ளையறிவினர் - அறிவிலிகள். 'கார்' - மோட்டார் வண்டி. புலன்கள் : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். கொட்டை - வாதாங் கொட்டை முதலியவற்றின் பருப்பு. உபவாசம் - பட்டினி. சலவை - ஆடைவெளுத்தல். அட்டி - தாமதம்.

IV. (i) பஞ்சதந்திரம்

1. துன்ன அரும் - நெருங்குதற்கு அரிய. அடவி தன்னில் - காட்டில். தும்பிகள் - யானைகள். பன்ன அரும் - கூறுதற்கு அரிய (சிறப்புக்களையுடைய). இறை - அரசு. பண்பின் - சிறப்புடன். சுனை - நீர்நிலை. உன்னும் - கருதத்தக்க. ஒற்றர் - வேவுகாரர். **2.** நிற்குது - நிற்கின்றது. வேந்து - முயலரசு. **3.** இற்றை நாள் - இன்று+நாள். இற்றை நாள் வரையில் - இன்று வரை. இனமும்-சுற்றமும். இவண் - இவ்விடத்தில். உற்று - பொருந்தி. உபாயம் - தந்திரம். **4.** ஆறு - உபாயம். விடை - உத்தரவு. ஞானம் - அறிவு. மந்திரம் - ஆலோசனை. விசாரம் - ஆராய்ச்சி. நனி - மிக. வேழம் - யானை. **5.** துட்டர் - துஷ்டர், கொடியவர். பால் - பக்கம். மாறாய்- மாறுபட்டு, பகைத்து. மிகைப்பட - கர்வங்கொள்ள. வீறு-பெருமை. **6.** குவடு - குன்று, மலையுச்சி. துன்றிய - (அங்கு வந்து) சேர்ந்த. தும்பி, விளி வேற்றுமை. வென்றி - ஜெயம். **7.** இசை - புகழ்ந்து கூறப்படுகின்ற. எறிக்கும் - ஒளி வீசும். திங்கள் - சந்திரன். வந்தது - வந்த காரணம். என்ன - யாது. **8.** சரசு - நீர்நிலை. சசிபகவான் - சந்திரனாகிய கடவுள். ஐயன் - தலைவன். சலக்கிரீடை- நீர்விளையாட்டு. முயங்கி - செய்து. பகலைக்கு எல்லாம் - பகல் முழுதும். **9.** தண் - குளிர்ந்த. நறும் - நறு மணமுள்ள. 'எம்மைக் காவல் வைத்து' என்று மாற்றுக. விண்ணவர் உலகத்தாரும் - தேவராகிய அவ்வுலகத்தாரும். அண்ணலார் - தலைவர். தடுத்தி - தடுப்பாயாக. என்று - என்று கூறி. 'தடுத்தி' என்று (என்னை) உன்பக்கல் அனுப்பினார்—என்று மாறிக் கூட்டுக. **10.** மூவர் - கடவுளர் மூவர்; பிரமன், திருமால், சிவபெருமான். முனைவனார் - கடவுள்; சிவபெருமான். முடி - சடை. தேவன், சந்திரன். சிந்தை - எண்ணத்தோடு கூடிய. வேட்கை - ஆசை. இந்நேரம் - இப்பொழுதே. கருமம் - (தக்க) காரியம். **11.** தந்தி - தந்தத்தை உடையது, யானை. சசம் - முயல். தேவு - கடவுள். தடம் - தடாகம். குடைவது - நீராடுவது. போற்றி - துதித்து வணங்கி. உய்ந்து - பிழைத்து. **12.** அலைபுனல் - அலைகின்ற நீரை உடைய. புனல்+தடம் - புனற்றடம். துன்று - பொருந்திய. சாயை - நிழல்; பிரதி பிம்பம். 'நன்று கண்டு' என மாற்றுக. நன்று - நன்றாக. திங்கள் நாதன் - சந்திரனாகிய கடவுள். சூழ்வுற்று - சூழ்ந்து. ஒன்றிய - பொருந்திய. உடு - நட்சத்திரம். அன்னோற்கு - அவனுக்கு. நல்

மாதர் - அழகிய மனைவிமார். 13. நெஞ்சம் அழிந்து - (தான் தவறு செய்ததாக) மனம் வருந்தி. வான் - ஆகாயத்தில்.

IV. (ii) நாயின் நல்லறிவு

1. காட்டகத்து - காட்டில். மாசு, ஆசு - குற்றம். வதிதல் - வசித்தல். தேசு - விளக்கம். 2. பரிந்து - விரும்பி. உழுவை - புலி. சீயம் - சிங்கம். 3. துன்னிய - பொருந்திய. தொன்மை - பழமை. சில்லோர் - சிலர். அன்னவன் - அவன். 4. பொறி - அறிவு. பொள்ளென : ஒலிக்குறிப்பு. 5. முன்னி - முன்வந்து. முனிவரன்- முனிவருக்குள் மேலானவன். புகலுமின் - கூறுங்கள். சீர் - சிறப்பு. தேற - தெளிய. வழுத்துவன் - (நாயின் குணத்தைப்) பாராட்டு வான். 6. பொன் இயல் - பொன்னின் தன்மை (மஞ்சள் நிறம் உள்ள வரிகளை உடைமை). பொர - போரிட. மாறிடாது - மாறாமல். அவனை - தன் தலைவனை. 7. சிந்தல் இல் - அழிவு இல்லாத. 8. இணை - ஒப்பு. இனம்பகை - தொகுதியாகிய உட்பகைகள் : காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸரியம். கடந்த- வென்ற. 9. நாட்டும் - நிலைபெறச் செய்யும். நகரி - நகரங்களில். ஈட்டம் - தொகுதி.

V. இயற்கை வருணனை

(i) கடல்

1. எல்லை - அளவு; நீளமும் ஆழமும். அல் - இரவு. அலுப்பு- சோர்வு; தளர்வு. 2. வெருண்டு - அஞ்சி. மதி - அறிவு. 3. திரை- அலை. புரவி - குதிரை. நிரை - வரிசை. 4. ஆடல் வீடு - விளையாடுதற்குக் கட்டிய சிறுவீடு; சிற்றில். 6. மூலம் - முதற்காரணம். வகுக்க - வகைப்படுத்திக் கூற; விரித்துக் கூற.

(ii) காடு

1. மொய்த்த - நெருங்கிய. முட்கருங்கல் - முள்போன்ற கூர் மையான கல். 2. மட்டை - தென்னை பனை முதலியவற்றின் மடல். 3. ஆல் - ஆலமரம். வாள் - வாள் போன்ற; கூர்மையான. எயிறு- பற்கள். 4. கேள் - சுற்றம். கிண்டு - தோண்டி. தூளி - தூசி. 'ஒன்றில் புகும்' என்று மாற்றுக. 5. வானிடை - ஆகாசத்தி னிடையே. வான் - (மற்றோர்) ஆகாசம். அடர்ந்தவாறு - நெருங்கி

யது போல. வீறு - பெருமை. **6.** பெரும் பறவை : பருந்து முதலி யவை. காவி - (இங்கு) ஆடு. அடை - பாலடை.

VI. பல்சுவைப் பகுதி

(i) தனிப்பாடல்

1. சேய் - மகன் ; பொற்றாலியோடு - பொன்னாலாகிய மாங்கல்யத்தோடு ; கணவனை இழத்தலோடு மனைவியோடு என்பாரும் உளர். **2.** செஞ் சொல்லை - செம்மையான மொழி யுடைய பாட்டை (மதிப்பார் இலரே என்று). பிரம்படி - இறை வன் வைகைக் கரையில் வந்தியாளாய் வேலையைச் செய்யாதிருந்த பொழுது அரிமர்த்தன பாண்டியன் பிரம்பால் அடித்த அடி. வேடன், கண்ணப்பன். பஞ்சவரில் - பாண்டவர் ஐவருள் ஒருவன், அர்ச்சுனன். விலால் - வில்லால். பரமன் - மேலானவன். **3.** மேதினியோர் - உலகமக்கள். எண்ணார் - ஒரு பொருளாக மதிக்க மாட்டார். நுவல் - உயர்வாகக் கூறப்படுகின்ற. மால் ஆனவர், திருமால். பொன் ஆடை - பீதாம்பரம். ஆலாலம் - விஷம்.

(ii) பாரதியார் பாடல்

1. தமிழ் கண்டது - தமிழ்ச்சுவையை அறிந்ததாகிய. ஓர் ஒப் பற்ற. திருஞான சம்பந்தர் சமணரோடு வாதாடி, தமிழ்ப்பாடல் ஒன்றை எழுதிய ஏட்டை வைகையாற்றில் இட, அது எதிர் ஏறிக் கரை சார்ந்தது என்பதை இங்கு அறிக. பொருநை - தாமிரவருணி. திருமேனி - உடல்; மண். **2.** பார் - பூமி. **3.** வான் - சிறந்த. அள்ளும் - கவரும். மணி ஆரம் - இரத்தின மாலை. **4.** சிங்களம், இலங்கை. சாவகம், ஜாவா. புலிக்கொடி, சோழனுக்குரிய கொடி. மீன்கொடி, பாண்டியனுக்குரியது. சால்பு - மேன்மை. உற - பொருந்த. தமிழ் முடிமன்னராகிய சோழரும் பாண்டியரும் இலங்கை ஜாவா முதலிய நாடுகளை வென்ற வெற்றிச் செயல்கள் இங்குக் குறிக்கப்பட்டுள்ளன. **5.** சகம் - பூமி. துச்சம் - இழிவு. தூறு - தீங்கு ; பழி. **6.** இச்சை - விருப்பம். ஊன் - மாமிசம். இயைந்த - பொருந்திய. உச்சிமீது - தலைமேல்.

(iii) பள்ளு

பள்ளர்வாழ்க்கையைக் கூறும் நூல் பள்ளு எனப்படும். பயிர்த் தொழில் செய்யும் ஓரின மக்கள் பள்ளர் எனப்படுவர். **வடிவழகக்**

குடும்பன் என்னும் பள்ளன் ஒருநாள் நிலத்தை உழும்போது, அவனை ஒரு மாடு முட்ட, அவன் மயங்கி வீழ்ந்தான். அண்மையில் நின்ற அவன்மனைவியர் இருவரும் மிக வருந்தினர். பின்னர் அவன் மயக்கம் தெளிந்தெழுந்து உழுது விதைத்தலைக் கூறுவன சிந்து என்னும் இச் செய்யுட்கள்.

முக்கூடல் என்பது திருநெல்வேலிச் சீமையில் உள்ள ஓர் ஊர். சித்திரா நதியும் கோதண்டராம நதியும் இவ்வூரில் வந்து தாமிரவருணி நதியில் கலந்தமையால், இவ்வூர் இப் பெயர் பெற்றது. இது இன்று சீவலப்பேரி என்று வழங்குகிறது.

1. நிலை தரித்தான் - (மயக்கம் தெளியப் பெற்று) நின்றான். கோட்டி - வளைத்து. **2.** தொளி - சேறு. **3.** ஒருப்பட்டான் - இசைந்தான். **4.** அளந்திடா - அளவில்லாத. விண்டான் - கூறினன்.

(iv) அம்மானை

அம்மானை என்பது பெண்களின் விளையாட்டுக்களுள் ஒன்று. அதில் மூவர் சேர்ந்து ஆடிப் பாடுவர்.

அலி - ஆணும் பெண்ணுமல்லாப் பிறப்பு; பேடி. தாரம் - மனைவி. சாபம் - வில்; பிருகுமுனிவரின் சாபம்.

(v) குறம்

குறம், குறத்திபாட்டு என்று வழங்கும். குறத்தி தன் மலைவளம் முதலியவற்றைக் கூறித் தலைவிக்குக் குறிகூறுவதாகப் பாடுவது.

விழுந்த - தாழ்ந்த வீழ்ந்த. கல்வி - தோண்டி. தெரிந்து - ஆராய்ந்து. தேறல் - தேன். வாய்மடுப்போம் - பருகுவோம். இசைந்திட - பொருந்த. கயற்கணி, மீனாட்சி. வினை - பாவம். இயல்பு - இயற்கைச் செயல்கள்.

139784

RTR
263

எமது புதிய பிரசுரங்கள்

சுந்தர வாசகம்

(1, 2, 3 பாரங்களுக்கு)

அநுபவமுறைச் செந்தமிழ் இலக்கணமும் கட்டுரைப் பயிற்சியும்

(1, 2, 3 பாரங்களுக்கு)

புதுமுறை கணித நூல்

(முதல் பாரம் முதல் ஆரும் பாரம் வரை)

பொது விஞ்ஞானம்

(4, 5, 6 பாரங்களுக்கு)

Tagore English Readers

Book I for Form II
Book II for Form III

Tagore Supplementary Readers

Grade I (6 Books)
Grade II (6 Books)

AMBIKA BROTHERS

Mylapore : : MADRAS—4.

Cover Printed at
COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE, MADRAS 1.